
படைப்பு

ஊற்று-6 | நதி-1 | மே- 2023 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



பயணக் கட்டுரை
- இந்திரன்

அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..
- கடிதங்கள்

ஆலுவா வீடு
- சிறுகதை
மீரான் மைதீன்

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-6 | நதி-1 | மே 2023

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
**ஜின்னா அஸ்மி**
•
ஆசிரியர் :
**ஆசியாதாரா**
•
நிர்வாகக் குழு :
**சகா(சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**
**ஜெ. ராஜா ஜெயகரன்**
•
தலைமை நிருபர் :
**வலங்கைமான் நூர்தீன்**
•
நிருபர்கள் குழு :
**முனைவர் கோ.நித்தியா**
**க.சோ.திருமாவளவன்**
**கலிங்கப்பட்டி க.கருப்பசாமி**
•
முதன்மை வடிவமைப்பாளர் :
**கமல் காளிதாஸ்**
•
வடிவமைப்பு :
**ப.முகம்மது புலவர் மீரான்**
•
ஓவியக் கலைஞர்கள் :
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**
•
படைப்புகள் மற்றும் கருத்துக்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி : padaippugal@padaippu.com
•
அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** -பக். 04
- **அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..** -பக். 05
- **பனிக்கட்டி கால்வாய்களில் நடை பழகும் வாத்துகள்**
  - இந்திரன் -பக். 16
- **மானுட உடலின் மர்மம்**
  - கவிஜி -பக். 20
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  - மு.முருகேஷ் -பக். 24
- **அடியே வெள்ளப் பழுத்தா...**
  - கவிஞர் ஏகாதசி -பக். 59

## சிறுகதைகள்


- ஆலுவா வீடு
  - மீரான் மைதீன் -பக். 31
- மஞ்சப் பத்திரிக்கை
  - ஆண்டன் பெனி -பக். 44
- நீ இன்றி வேர் ஏது..
  - அய்.தமிழ்மணி -பக். 48


## கவிதைகள்


- விக்ரமாதித்யன் -பக். 23
- வலங்கைமான் நூர்தீன் -பக். 43
- வீரசோழன் க.சோ.திருமாவளவன் -பக். 47
- அன்பு மணிவேல் -பக். 63
- அ.சீனிவாசன் -பக். 63

# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு 'தகவு' அறுபத்தொன்றாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

கவிஞர் விக்ரமாதித்யன் தனது இலக்கிய நண்பர்கள் தனக்கு எழுதிய கடிதங்களைத் தகவு இதழ் வாசகர்களுக்காக இம்மாதம் முதல் பகிர்ந்துகொள்கிறார். ஏற்கெனவே நகுலன் அவருக்கெழுதிய கடிதங்களைப் பகிர்ந்துகொண்டு, அது நல்ல வரவேற்பைப் பெற்ற நிலையில் இக்கடிதங்கள் வெளியாகின்றன. கடிதங்கள் தனிப்பட்ட விஷயங்களைத் தாண்டி சமூகத்துடன் ஏதேனும் உறவு கொள்ளும் நிலையில் அவை கடித இலக்கியங்களாக உருப்பெற்றுவிடுகின்றன. கடித இலக்கியத்தின் சிறந்த சான்றுகளாய் இப்பகுதி கடிதங்கள் விளங்கவுள்ளன. நாற்பதாண்டுகளுக்கு மேலான இலக்கியப் பரப்பு குறித்து அறிந்துகொள்ள இக்கடிதங்கள் நல்ல துணையாய் நிற்கும். படைப்பாளர் சுந்தர ராமசாமி கவிஞர் விக்ரமாதித்யனுக்கு எழுதியுள்ள பன்னிரண்டு கடிதங்கள் இவ்இதழில் வெளியாகிவுள்ளன. எண்பதுகளின் விமர்சனப் போக்கு, கவிஞரின் கவிதை குறித்த மதிப்பீடு, பத்திரிகைப் பணி, விமர்சனக் கூட்டத் திட்டமிடல் போன்றவற்றுடன் தகுதியான கட்டுரைகள் கிடைக்காதென்னும் கருத்து, எழுத்துக்கள் சமூகப் பார்வை கொண்டிருக்க வேண்டிய அவசியத்தை முன்நிறுத்தியமை, தயங்காமல் எதிர்க் கருத்துக்களையும் முன்வைத்து எழுதியுள்ளமை என்று கடிதங்கள் ஆழ்ந்த கருத்துக்களுடன் உள்ளன.


கவிஞர் இந்திரன் தன் பயணம் குறித்து இவ்இதழிலிருந்து தொடர் எழுதுகிறார். பயணங்கள் பல்வேறு திறப்புகளை நிகழ்த்துவன. வாழ்தலின் பெரும்போக்கு மறைத்துவைத்துள்ள ஊற்றுகளை அடையாளங்காட்டுவன. சிறு வட்டமல்ல வாழ்க்கை, பெருவெளிதான் வாழ்க்கை என உணர்த்துவன. நெதர்லாண்டு நாட்டின் வாய்க்கால்களுக்குப் பின்னுள்ள ரகசியத்தை இப்படித்தான் கவிஞர் இந்திரனுக்கு உணரவைத்துள்ளது இப்பயணம். நெதர்லாண்டு நாட்டின் புவியியல் அமைப்பு, பூ வணிகம் என சுவாரசியமாய் விவரிக்கிறது இப்பயணக் கட்டுரை. நெதர்லாண்டு பரப்பு தன் நிலப்பரப்பான பாண்டிச்சேரியுடன் ஒத்துள்ளதால் அது தன்னுடன் நெருக்கமாகியுள்ளதை அழகாகக் கூறியுள்ளார். அப்புவியியல் நிலைக்கும் அம்மனிதர்களின் நெஞ்சுரத்திற்குமாகச் சரியாகத் தொடர்புபடுத்தியுள்ளார். நல்ல சுவாரசியங்களை அள்ளித் தரும் தொடராக இருக்கப்போகிறது இது.

மனித மனம் விசித்திரமானது. நினைவுகளுக்கும் நிஜத்திற்குமான போராட்டங்கள் நுணுக்கமானவை. படைப்பாளியின் மனம் இன்னும் கூட விசித்திரப்படும். எழுத்தாளர் மீரான் மைதீன் எழுதியுள்ள சிறுகதை அமானுஷ்யக் கற்பனையில் விரியும் ஒரு படைப்பாளியின் எண்ணங்களால் உருவாகியுள்ளது. காதலின் உன்னத உணர்விற்கும் நிஜத்திற்குமான மனநிலைப் போராட்டத்தினை அய்.தமிழ்மணி சிறுகதை உருக்கமாய்ச் சொல்கிறது. கால மாறுதலுக்கேற்ப மாற்றமடைந்துவரும் உறவு நிலைகளைப் பத்திரிகை வைத்தல் மூலமாய்ச் சொல்கிறார் ஆண்டன்பெனி.

இன்னும் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், தொடர்கள், அனுபவங்கள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

ஆசிரியர்.



## அன்புள்ள விக்ரமாதித்யனுக்கு..

தமிழ் இலக்கிய உலகின் மாபெரும் படைப்பாளுமை கவிஞர் விக்ரமாதித்யன். தனது அறிவுப் பரப்பால் கவர்ந்திழுத்த இலக்கிய ஆளுமைகளையும் வாசகர்களையும் தனது பரந்த அன்பால் தக்கவைத்துக்கொண்டவர். தமிழ் இலக்கியப் பரப்பில் தீவிரமாக இயங்கிவரும் கவிஞருக்கு இலக்கிய உலகின் நண்பர்கள் எழுதிய கடிதங்களை இப்பகுதியில் தொடர்ந்து நம்முடன் பகிர்ந்துகொள்ளவிருக்கிறார். இக்கடிதங்களை வெளியிடுவதில் தகவு மிகவும் பெருமை கொள்கிறது. இந்த இதழில் படைப்பாளர் சுந்தர ராமசாமி கவிஞர் விக்ரமாதித்யனுக்கு எழுதியுள்ள கடிதங்கள் வெளியாகின்றன.

## கடிதம் - 1

*சுந்தர ராமசாமி*

நாகர்கோவில்

*30/1/79*

அன்புள்ள திரு நம்பிராஜன் அவர்கட்கு,

உங்கள் *29/1* கடிதம்.

நீங்கள் வரவில்லை என்பதை உணர்ந்தபோதுதான் விலாசம் வாங்கிவைத்துக் கொள்ளவும் தவறியது என் நினைவுக்கு வந்தது. சிவசுவுக்கு எழுதினேன். இன்றுதான் அவர் கடிதம் வந்தது உங்கள் விலாசம் தெரிவித்து.

மீண்டும் நீங்கள் வரும்போது சாவகாசமாக சந்திக்கலாம்.

நீங்கள் குறிப்பிட்டுள்ள புத்தகங்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்கிறேன். இந்த வருஷம் முடிந்த மட்டும் சேர்த்துக்கொள்ள முயன்று பார்க்க வேண்டும். இலக்கிய இதழ்கள் பற்றியும் விமர்சனங்கள் நிகழ்த்தலாம். தகுதியான கட்டுரைகள் கிடைப்பது மிகக் கடினம்.

ஞா.கூ. பற்றி உமாபதி கட்டுரை திருப்தியில்லை. அவர் பெற்ற அனுபவத்தைச் சொல்ல முடியவில்லை என்று சொன்னார்.

கொல்லிப்பாவை பிரசுரிக்கும் விஷயத்தைத் தீர்மானிக்க வேண்டியது ராஜமார்த்தாண்டன். ஆனால் கட்டுரைகள் ஒரு சிலவேனும் நீங்கள் எழுதிப் பார்க்கலாம். என்னளவில் நான் அதைப் படித்துப் பார்த்து என் அபிப்பிராயத்தை உங்களிடத்திலும் எனக்குத் தெரிந்த பத்திரிகை ஆசிரியர்களிடத்திலும் சொல்லத் தயாராக இருக்கிறேன். முயன்று பாருங்கள். மணிக்கு என் அன்பு.

அன்புடன்,

சுரா..

•••

## கடிதம் - 2

*சுந்தர ராமசாமி*

நாகர்கோவில்

*17/3/79*

அன்புள்ள நம்பிராஜன்,

உங்கள் கடிதங்கள்.

நீங்கள் எழுப்பியுள்ள கேள்விகள், சந்தேகங்கள் உண்மையானவை, யோசித்துப் பார்க்க அவசியமுள்ளவை. நேரில் சந்திக்கும்போது இவை பற்றியெல்லாம் பேசும்படி என்னால் வசதி ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்று நம்புகிறேன்.

காகங்கள் கூட்டங்கள் ஏற்பாடு செய்துள்ளவை வருமாறு.

மார்ச் மாதம் – சிவசுப்பிரமணியம் (நாகர்கோவில்)

ஏப்ரல் வல்லிக்கண்ணன்

மே ஆ.மாதவன்


ஜூன் ஏற்பாடு செய்யவில்லை

ஜூலை குமரித்துறைவன்

ஆகஸ்ட் சிவசுப்பிரமணியம் (பாளை)

நீங்கள் ஜூன் மாதத்தில் கட்டுரை படிக்கலாம். அல்லது செப்டம்பர் மாதத்தில்; அல்லது அதற்குப் பின். யோசித்து எழுதுங்கள். நீங்கள் விஷயத்தையும் மாதத்தையும் உறுதிப்படுத்தி எழுதிவிட வேண்டும். நீங்கள் சென்னை போக உத்தேசித்துள்ளதால் உங்களுக்கு இதனால் பெரிய அசௌகரியமும் ஏற்படக் கூடாது.

வீட்டில் *rewiring* நடந்துகொண்டிருக்கிறது. அதனால் ஒரே `கசமுசா.` நகுலன் புத்தகங்களைத்



தேடி எடுத்து உங்களிடம் இல்லாதது இருந்தால் அனுப்பிவைக்கிறேன்.

அன்புடன்

சுரா.

•••

## கடிதம் - 3

*சுந்தர ராமசாமி*

*நாகர்கோவில்*

*30/3/79*

*அன்புள்ள திரு நம்பிராஜன் அவர்கட்கு,*

*உங்கள் 21/3 கடிதம்.*

*மதுரை மோஹன் (வைகை) செப்டம்பர் மாதம் 'தமிழில் வர்க்க நாவல்கள்' எனும் விஷயம் பற்றிப் பேசுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். உங்கள் கூட்டத்தை அக்டோபர் மாதத்துக்கு வைத்துக்கொள்ளலாமா? செப்டம்பர் மாதம்தான் உங்களுக்கு வசதி, அக்டோபர் வசதியில்லை எனும் நிலை எனில் நான் மோஹனுடன் தொடர்பு கொண்டு அவருடைய கூட்ட மாதத்தை அக்டோபருக்கு மாற்றலாமா என்று கேட்கிறேன். பதில்.*

*ராமச்சந்திரனுக்கு என் அன்பு.*

*அன்புடன்,*

*சுரா.*

•••

சுந்தர ராமசாமி

நாகர்கோவில்
31.12.86

அன்புள்ள நம்பி,

ஜனவரி 9 ஆம் தேதி அநேகமாக நான் சென்னை போக வேண்டியிருக்கும். அமெரிக்காவிலிருந்து என் மகள் வருகிறாள். இந்த விஷயத்தைத் தெரிவிப்பதற்கே இந்தக் கடிதம். என் முன் கடிதம் கிடைத்திருக்குமே.

உங்களுக்கு என் அன்பான புத்தாண்டு வாழ்த்துக்கள்.

அன்புடன்,

சுந்தர ராமசாமி.

Need not reply

पते में पिन कोड लिखें
WRITE PIN CODE IN ADDRESS

15

Mr.A.Nambirajan
91 Vadakku Masi Veedi
TENKASI 627 811

पिन PIN

## கடிதம் - 4

நாகர்கோவில்

*19.10.79*

அன்புள்ள திரு.நம்பிராஜன் அவர்களுக்கு,

உங்கள் 6-10-`79 கடிதம்.

உங்களால் கட்டுரை எழுத முடியாமல் போனதற்கான புறச் சூழ்நிலைகளையும், பார்வை மாற்றங்களையும் தெரிந்துகொண்டேன். இம்மாதக் கூட்டம், புத்தக விற்பனையின் பொருட்டு இங்கு வந்திருந்த திரு.சி.சு.செல்லப்பா அவர்களை வைத்துச் சென்ற ஞாயிறு நடத்தினோம். மாற்று ஏற்பாடு செய்வது ஒரு பிரச்சனையாக இருந்த நேரத்தில் அவர் வருகை வெகு அனுசரணையாக அமைந்தது.

நீங்கள் `விசிட்டர்` பத்திரிகையில் சேர்ந்திருப்பது எனக்குத் தெரியாது. எப்படியும் ஒரு வேலையில் சேர்ந்துவிட்டது எனக்கு சந்தோஷத்தைத் தருகிறது.

தமிழில் விரிந்த சமூகப்பார்வை கொண்ட எழுத்துக்கள் எப்படி படைப்பாக இருக்கின்றன எனவும், தனிமனித அக வெளியீட்டுக்கள் எப்படி கலைத்தரத்திற்குப் புறம்பானவை எனவும் விளக்கி நீங்கள் ஒரு கட்டுரையை எழுதலாம். வசதி கிடைக்கும்போது செய்து முடியுங்கள்.

நண்பர் ராமச்சந்திரன், அவரது மனைவியார், குழந்தைகள் எல்லோரும் சுகமென்று நம்புகிறேன்.

அன்புடன்,

சுரா.

•••

## கடிதம் - 5

சுந்தர ராமசாமி

நாகர்கோவில்

*24.12.86*

அன்புள்ள நம்பி,

உங்கள் 18.12.86 கடிதம். என் சமீபத்திய எழுத்துக்களில் சில நீங்கள் விரும்பிப் படிக்கும்படி இருந்ததில் சந்தோஷம்.

நான் ஜனவரி இரண்டாவது வாரத்துக்கு முன்னர் எங்கும் போவதாக இல்லை. நீங்கள் விரும்பும் நேரத்தில் என்னைச் சந்திக்கலாம். முடிந்தால் முன்கூட்டி எழுதுங்கள். சிறிது சௌகரியமாக இருக்கும்.

அன்புடன்,

சுரா.

•••

## கடிதம் - 6

சுந்தர ராமசாமி

நாகர்கோவில்

*31.12.86*

அன்புள்ள நம்பி,

ஜனவரி 9ஆம் தேதி அநேகமாக நான் சென்னை போக வேண்டியிருக்கும். அமெரிக்காவிலிருந்து என் மகள் வருகிறாள். இந்த விஷயத்தைத் தெரிவிப்பதற்கே இந்தக் கடிதம். என் முன் கடிதம் கிடைத்திருக்குமே.

உங்களுக்கு என் அன்பான புத்தாண்டு வாழ்த்துக்கள்.

அன்புடன்,

சுந்தர ராமசாமி.

•••

## கடிதம் - 7

சுந்தர ராமசாமி

நாகர்கோவில்

*4.11.87*

அன்புள்ள நம்பி,

வணக்கம்.

உங்கள் கவிதைத் தொகுதிகள் கிடைத்தன. நான் சென்னை சென்றிருந்ததால் பதில் எழுதத் தாமதித்துவிட்டது. நான் 7ஆம் தேதி திருச்சூர் போகிறேன். அப்போது நண்பர் ரவிவர்மா அவர்களிடம் தொகுப்புகளைக் கொடுப்பேன். திரு. பொன்னுசாமியை எப்போது வேண்டுமென்றாலும் சந்திக்கிறேன். அவர் வரும் முன் நான் ஊரில் இருக்கிறேனா என்பதைத் தெரிந்துகொண்டு வரவேண்டும்.

உங்களுக்கு என் அன்பான வாழ்த்துக்கள்.

அன்புடன்,

சுரா.

•••

## கடிதம் - 8

சுந்தர ராமசாமி

நாகர்கோவில்

*15.6.88*

அன்புள்ள விக்ரமாதித்தன்,

வணக்கம்.

`நக்கீரன்` வார இதழிலிருந்து அனுப்பியிருந்த கடிதம் பார்த்தேன். நான்கு வாரங்களாக எனக்கு வெளியூர் அலைச்சல். நேற்று முன் தினம்தான் நக்கீரன் கடிதத்தைப் பார்த்தேன்.

நீண்ட நாட்களாக இங்கு இல்லாமல் இருந்ததில் வேலைகள் ஏகமாகக் குவிந்திருக்கின்றன. ஜூலை முதல் தேதி காலச்சுவடை அச்சுக்குத் தர வேண்டும் என்றும் இருக்கிறேன். அதனால் `நக்கீரன்` கேள்விகளுக்கு இப்பொழுது பதில் எழுத சாவகாசம் இல்லாமல் இருக்கிறது.

அன்புடன்,

சுரா.

•••

## கடிதம் - 9

சுந்தர ராமசாமி

நாகர்கோவில்


*30.7.88*

அன்புள்ள நம்பிராஜன்,

உங்கள் 27.7.88 கடிதம்.

மலையாளக் கவிஞர் ரவிவர்மா எனக்கு எழுதும் கடிதங்களில் உங்கள் கவிதைகளைப்





சுந்தர ராமசாமி நாகர்கோவில்
17/3/79

பற்றி அவ்வப்போது குறிப்பிடுகிறார். `... கவிதைகள் நன்றாக இருக்கின்றன... எளிமையாக இருக்கின்றன... ஆழமான நெருக்கடிகள் கவிஞருக்கு இருப்பதாகப் படவில்லை... தமிழ் நவீனக் கவிதை அதிகமும் `பர்சனலா`க இருக்கிறது...` என்றெல்லாம். ஏகதேசமாக இப்படித்தான் சொல்ல முடிகிறது.

உங்கள் கவிதைகளில் அவர் விரும்புபவற்றை மொழிபெயர்த்துக்கொள்ளலாம் என்று உங்கள் சார்பில் நானே அவருக்கு உரிமை அளித்திருக்கிறேன். வெளிவரும் இதழ்களை / நூல்களை உங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று உங்கள் விலாசமும் அவருக்குத் தந்திருக்கிறேன். சரிதானே?

காலச்சுவடில் என் கதை `குறியீட்டுக் கதை, கருத்துக்கதை` என்ற பாகுபாடு, `இந்த நேர்த்தி ஏற்கெனவே கை வந்த விஷயம்` போன்ற விஷயங்களை விட இப்போது இந்தக் கதை உங்களுக்கு என்ன அனுபவத்தைத் தருகிறது என்பதுதான் எனக்கு முக்கியம். அந்த விபரம் கடிதத்தில் இல்லை. இதுபோல் நான் நிறைய எழுதியிருக்கிறேன் என்று எழுதியிருக்கிறீர்கள். இதை இப்போதுதான் முதல் தடவையாக எழுதுகிறேன் என்பது என் எண்ணம்.

ஜெயடேவியின் கதை நல்ல கதைதான். ஆனால் அப்படி உங்களுக்குப் படாமல் இருப்பதிலும் ஆச்சரியம் இல்லை. மிகச் சிறந்த எழுத்துக்கள் பற்றிக் கூட மாறுபட்ட அனுபவங்கள் ஏற்பட்டுவிடுகின்றன.


சுந்தர ராமசாமி

நாகர்கோவில்
31.12.86

அன்புள்ள நம்பி,

ஜனவரி 9 ஆம் தேதி அநேகமாக நான் சென்னை போக வேண்டியிருக்கும். அமெரிக்காவிலிருந்து என் மகள் வருகிறாள். இந்த விஷயத்தைத் தெரிவிப்பதற்கே இந்தக் கடிதம். என் முன் கடிதம் கிடைத்திருக்குமே.

உங்களுக்கு என் அன்பான புத்தாண்டு வாழ்த்துக்கள்.

அன்புடன்,

Need not reply

पते में पिन कोड लिखें
WRITE PIN CODE IN ADDRESS

Mr.A.Nambirajan
91 Vadakku Masi Veedi
TENKASI 627 811

पिन PIN

பிற துறைகள் பற்றி நீங்கள் பேசும்போது கவிதைத் துறை பற்றி மட்டும் பேசுவது பொருத்தமாக இராது என்று ஏன் நீங்கள் கற்பனை செய்துகொள்ள வேண்டும் என்பது எனக்குத் தெரியவில்லை.

ஜோசஃப் ப்ராட்ஸ்கியின் கட்டுரை நல்ல கட்டுரைதான். ஆனால் மிகுந்த சர்ச்சைக்கு இடம் தரக்கூடிய கருத்துக்களும் கொண்டது. ஆனால் நோபல் பரிசு பெற்றவரின் உரை என்பதால் `ஏற்றுக்கொள்ளப்படும் மனோபாவத்தில் மட்டுமே` அக்கட்டுரை இங்கு படிக்கப்படும். அது நம் பார்வையின் வரையறை.

தமிழ்ச்செல்வனைப் பற்றி எழுதியிருப்பதைப் போலவே பூமணி பற்றியும் ராஜநாராயணன் பற்றியும் பிரபஞ்சன் பற்றியும் (சிறுகதை ஆசிரியர்களாக) எழுதியிருக்கிறேன். உங்கள் கவனத்துக்கு வரவில்லை என்பது தெரிகிறது. ஆனால் பெயர் விடாமல் எல்லோரைப் பற்றியும் ஒரு கடமையாகச் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை. முற்றிலும் எதிர்மறையான கருத்துக்களை மட்டுமே சொல்ல இருப்பவர்களைப் பற்றி எழுதுவதை தவிர்த்தும் வந்திருக்கிறேன். இலக்கிய விமர்சனம் என்பது வாசகர்களோடு கொள்ளும் தொடர்பு. படைப்பாளிகளைத் திருப்திபடுத்துவது / அதிருப்திபடுத்துவது என்ற தளத்தில் நிகழ்வது அல்ல. நீங்கள் நேர் எதிரான நம்பிக்கை கொண்டிருக்கிறீர்கள் என்பது தெரிகிறது.

முத்துசாமியின் நாடகத்தைப் பற்றி உயர்வாகவோ, தாழ்வாகவோ நீங்கள் நினைக்கலாம். அது உங்கள் பார்வையைப் பொறுத்தது. ஆனால் அதை விடவும் உயர்வான நாடகத்தை கருணாநிதி, மனோகர், கண்ணதாசன் போன்றவர்கள் எழுதியிருக்கிறார்கள் என்று நீங்கள் கருதும்போது அதில் கோபம் இருக்கிறதே தவிர உண்மை இல்லை. தொடர்ந்து `பிராமண அறிவு ஜீவிகளின் அபத்தக் களஞ்சியங்கள்` என்றெல்லாம் நீங்கள் எழுதியுள்ள வரிகளில் மதிப்பீடோ, விளக்கங்களோ, கோடிகாட்டல்களோ கூட இல்லை.

கடிதம் எதிர்மறையான தொனியில் அமைந்துவிட்டதற்காக நீங்கள் வருந்த வேண்டியதில்லை. என்னிடம் நீங்கள் வெளிப்படையாக இருப்பது எனக்கு சந்தோஷத்தையே தருகிறது.

அன்புடன்,

சுரா.

•••

## கடிதம் - 10

சுந்தர ராமசாமி

நாகர்கோவில்

7.2.89

அன்புள்ள நம்பிராஜன்,

உங்கள் கவிதை நூல்கள் இப்போது கிடைத்தன. உங்கள் தொகுப்புகளைப் பற்றி மதிப்புரை வெளியிடவும் – முடிந்தால் ஒரு கட்டுரை வெளியிடவும் – முயன்று கொண்டிருக்கிறேன். நடைமுறைப் பிரச்சனைகள்! ஒன்றும் கூடி வரவில்லை. பார்ப்போம். ரவி வர்மாவுக்கு இன்று / நாளை கவிதைத் தொகுப்பை அனுப்பிவைக்கிறேன்.

அன்புடன்,

சுரா.

•••

## கடிதம் - 11


சுந்தர ராமசாமி

நாகர்கோவில்

14.10.93

அன்புள்ள விக்ரமாதித்தன்,

வணக்கம். திரு. மணிவண்ணன் அவர்கள் வழி நீங்கள் அனுப்பிவைத்திருந்த



உங்கள் கவிதைத் தொகுப்பு `கிரகயுத்தம்` கிடைக்கப்பெற்றேன். மிக்க சந்தோஷம்.

என் அன்பான வாழ்த்துக்களுடன்,

சுரா.

•••

## கடிதம் - 12

சுந்தர ராமசாமி

151 கே.பி.ரோடு

நாகர்கோவில் – 629 001.

7.2.96

அன்புள்ள நம்பி,

உங்கள் 5.2.96 கடிதம். நீண்ட இடைவெளிக்குப் பின் உங்கள் கையெழுத்தைப் பார்த்ததில் மகிழ்ச்சியடைந்தேன்.

உங்களுக்குப் பேட்டி தரும் மனநிலையில் இப்போது நான் இல்லை. அதனால் அந்த விஷயத்தை விட்டுவிடலாம்.

என்னைச் சந்தித்தபோது நீங்கள் நடந்துகொண்ட முறையில் பெற்ற கூச்சம் எனக்கு முக்கியமானதல்ல. உங்கள் நடவடிக்கைகளைப் பார்த்தபோது எனக்கு உங்கள் தாயார், மனைவி, குழந்தைகள் நினைவுதான் வந்தது. இப்படி நான் எழுதுவது உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம்.

அன்று நீண்ட நேரம் உங்கள் பேச்சுக்குச் செவி சாய்த்ததில் உங்களுக்கு என்னைப் பற்றி நிறைய விமர்சனங்கள் இருப்பது தெரிய வந்தது. அவற்றை நீங்கள் வெளிப்படையாகச் சொன்னது வரவேற்க வேண்டிய விஷயம். ஆனால் என்னைப் பற்றிய உங்கள் விமர்சனங்கள் அதிகமும் கற்பனைத் தளத்தைச் சார்ந்தவை. எனக்கும் விளக்கம் தர இருக்கிறது. ஆனால் அன்று நீங்கள் இருந்த நிலையில் நான் கேட்டுக்கொண்டிருக்க முடிந்ததே தவிர எதுவும் உங்களிடம் சொல்ல முடியவில்லை.


உங்களைச் சந்திக்கும் விருப்பத்துடன்தான் எப்போதும் இருந்திருக்கிறேன். நாம் இருவரும் பேசிக்கொள்ள சாத்தியமிருக்கும் சந்தர்ப்பத்தில் மட்டுமே நான் இனி உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்.

உங்கள் மீது நான் கொண்டிருக்கும் அன்பும், உங்கள் இலக்கிய அனுபவத்தின் மீது நான் வைத்திருக்கும் மதிப்பும் இன்றுவரையிலும் மாறாமலே இருக்கிறது.

என் அன்பார்ந்த வாழ்த்துகளுடன்,

சுரா.

- **தொடரும்.**



சுந்தர ராமசாமி

நம்பிராஜன்,

உங்கள் கவிதை நூல்கள் இப்போது கிடைத்தன.
உங்கள் தொகுப்புகளைப் பற்றி மதிப்புரை வெளியிடவும் - முடிந்தா
ஒரு கட்டுரை வெளியிடவும் - ஆவலை கொண்டிருக்கிறேன்.
நடைமுறைப் பிரச்சனைகள்! இன்னும் கூட முடியவில்லை.
பார்ப்போம். ஏனி வர்மாவுக்கு இந்த/நாளை கவிதைத்
தொகுப்பை அனுப்பியிருக்கிறேன்.

அன்புடன்,

சுரா

இந்திரன்



# பனிக்கட்டி கால்வாய்களில் நடை பழகும் வாத்துகள்

நெதர்லாண்டு என்னைப் பொறுத்தமட்டிலும் ஒரு கனவு நகரம்.

இங்கு கடல்மட்டம் நிலப்பகுதியைவிட உயரம். கடலைவிட நிலப்பகுதி 22 அடி தாழ்வாக இருக்கிறது. எனவே எந்த நேரமும் கடல் நீர் நாட்டுக்குள் நுழைந்து ஊரை அழித்துவிடும் அபாயம் என்றைக்கும் உண்டு.

இத்தகைய நாட்டுக்குத்தான் டச்சுக்கார பெண் ஓவியரான ஆண்டீனா வெர்பூம் என்னை வந்தே தீர வேண்டும் என்றும், அந்த நாட்டில் என்னை வரவழைத்து எனக்குச் சமைத்துப் போட வேண்டும் என்றும் பிடிவாதம் பிடித்தார். ஓவியர் ஆண்டீனா வெர்பூம் மற்றும் மிண்டர்ட் வேரே என்ற புனைபெயரில் கவிதை எழுதும் ரிட்ஸ் டி கூனிங் இருவரும் அழைத்ததின் பேரில் 2004இல் துணிந்து அந்த நாட்டுக்குப் போய்விட்டேன்.

நெதர்லாண்டின் தலைநகரம் ஆம்ஸ்டர்டாம். ஒரு சுதந்திர பூமி. அங்கு கஞ்சா சாதாரணமாகப் பெட்டிக் கடைகளில் விற்கும். பாலியல் தொழிலாளிகள் பட்டப் பகலில் சுதந்திரமாக நடந்து திரிவார்கள். ஓவிய மேதைகள் ரெம்ப்ரேண்ட், வின்செண்ட் வான்கோ, வெர்மீர் போன்றவர்கள் வாழ்ந்த பூமி. அந்த மேதைகளின் அசல் படைப்புகளைச் சேகரித்து வைத்திருக்கும் அருங்காட்சியகங்கள் அங்கே உண்டு. தன் நாட்டைப் பற்றிப் பெருமையாகப் பேசும் பெண் ஓவியர் ஆண்டீனா வெர்பூம் அடிக்கடி சொல்லுவார்: “நாங்கள் யுத்த தளவாடங்களைப் பிற நாடுகளுக்கு விற்று வாழும் நாடு அல்ல, பிற நாடுகளுக்கு டியூலிப் மலர்களை ஏற்றுமதி செய்து வாழும் அமைதியை நேசிக்கும் நாடு எனது நாடு.” அவரது அழைப்பை மறுக்க முடியாததால் கடல் வெள்ளத்தில்

மூழ்கினாலும் பரவாயில்லை என்று நான் துணிந்து புறப்பட்டுவிட்டேன்.

பிரிட்டீஷ் எழுத்தாளரான காலின் ஆடம்ஸ் என்பவரோடு ஆண்டீனா வெர்பூம் வந்து என்னை வரவேற்றார். ஆண்டீனாவின் வீடு ஒரு காட்டுக்குள் கட்டப்பட்ட தனித்த பங்களா. அங்கே சென்று தங்கினால் நான் ஒருவேளை பயந்துவிடலாம் என்பதால் என்னை ஆம்ஸ்டர்டாமிலிருந்து ஒரு மணி நேரப் பயண தூரத்தில் இருந்த லெய்டன் எனும் அழகிய நகருக்கு அழைத்துச் சென்று ஒரு பிரம்மச்சாரியான காலின் ஆடம்ஸ் வீட்டில் தங்க வைத்தார்.

காலின் ஆடம்ஸின் வீடு ஒரு தனித்த கச்சிதமான பங்களா. பிரதான கதவைத் திறந்தவுடன் அழகிய வரவேற்பறை. அதை ஒட்டி அழகிய கழிப்பறை. கழிப்பறையிலேயே காலின் ஆடம்ஸ் ஒரு சிறு நூலகம் வைத்திருந்தார். வரவேற்பறையின் ஒரு பக்கச் சுவர் கண்ணாடியால் செய்யப்பட்டு புழக்கடைத் தோட்டத்தைக் கண்ணாடி மூலமாகத் தெளிவாகப் பார்க்கலாம். அதைக் கடந்து பார்த்தால் பெரிய ஆச்சர்யம் எனக்குக் காத்திருந்தது. அந்த வீட்டுக்குப் பின்புறம் அழகாக நீர் சலசலத்துப் பாயும் கால்வாய் இருந்தது.

அதில் அந்த வீடுகளில் வாழ்பவர்கள் ஒவ்வொருவரும் பயன்படுத்த ஒரு படகு கட்டிப் போடப்பட்டிருக்கும். காலின் ஆடம்ஸ் சூப்பர் மார்க்கெட் போய் மளிகை வாங்க வேண்டுமென்றால் தனது பெரிய காரில் போகமாட்டார். கால்வாயில் கட்டி வைக்கப்பட்டிருக்கும் படகில் ஏறிப்போய் வருவார். அவரோடு அழகிய வாத்துகள் உல்லாசமாக நீந்தும் காட்சிகளைப் பார்க்க இரண்டு கண் போதாது. சிறு குழந்தைகள் கால்வாய்க் கரைகளில் விளையாடும் அழகே தனி.

தனது வீட்டின் இரண்டாவது மாடி முழுவதையும் எனக்காக ஒதுக்கியிருந்தார் காலின் ஆடம்ஸ். என் கட்டிலைச் சுற்றி இருந்த புத்தக அலமாரிகளில் இந்தியா பற்றி ஐரோப்பியர்கள் எழுதிய புத்தகங்களைச் சேகரித்துக்கொண்டு வந்து நிரப்பியிருந்தார். ஆனால் எனது மனம் முழுவதும் எதிலும் நிலைகொள்ளவில்லை. அந்த வீட்டுக்குப் பின்புறமிருந்த வாத்துகள் சந்தோஷமாய் நீந்திக்கொண்டிருந்த கால்வாயிலேயே என் மனம் நிலைகொண்டுவிட்டது. இரவும், பகலும் கால்வாயின் அழகை பால்கனியில் அமர்ந்தபடி பார்த்துக்கொண்டிருப்பேன்.

இந்தக் கால்வாய்களை எனக்கு மிகவும் பிடித்துப்போக ஒரு காரணம் பாண்டிச்சேரியில் ஒயிட் டவுன் என்று அழைக்கப்படும் எனது வீட்டின் அருகே செஞ்சி சாலையிலும் பெரிய கால்வாய் என்ற ஒன்று உண்டு. இந்தக் கால்வாய்தான் பாண்டிச்சேரியை ஒயிட் டவுன், பிளாக் டவுன் என்று பிரிக்கிறது. இதே போல் சின்ன கால்வாய் என்ற ஒன்றும் நகரத்தின் நடுவில் ஓடும். ஆனால் டச்சுக்காரர்களின் கால்வாய்கள் கணக்கற்றவை.

பிரிட்டீஷ்காரர்கள் கடல் வணிகத்தில் பெயர் வாங்குவதற்கு முன், உலகையே தங்களின் கடல் பயணங்களால் ஆண்டவர்கள் டச்சுக்காரர்கள்தான். இவர்களைத் தண்ணீரின் குழந்தைகள் என்றே நான் அழைப்பேன். ஆம்ஸ்டர்டாம் நகரை எடுத்துக்கொண்டால் அந்த நகரமே தண்ணீரின் மீதுதான் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல வேண்டும்.

பெரிய பெரிய மரங்கள் கான்கிரீட்டுகள் போல நட்டு வைக்கப்பட்டு அவை திடமான பூமியைச் சந்திக்கும் வகையில் ஆழமாக ஊன்றப்பட்டுள்ளன. இவைதான் உண்மையில் ஆம்ஸ்டர்டாம் நகரக் கட்டடங்களின் அஸ்திவாரங்கள் என்று சொல்ல வேண்டும். சொல்லப்போனால் நெதர்லாண்டே ஒரு சிறிய நாடுதான். இதன் மொத்தப் பரப்பளவே 41,543 சதுர கிலோமீட்டர்கள்தான். இதன் பெரும்பாலான நகரங்கள் இவ்வாறு நீரின்மீதே நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. டச்சுக்காரர்களைப் பற்றிச் சொல்வதானால் தண்ணீரில் இருக்கும்போது முதலைக்குத்

தனி பலம் வந்து விடுவதுபோல இவர்கள் தண்ணீரில் இருக்கும்போது தனி பலம் பெற்றுவிடுகிறார்கள். இதனால்தான் டச்சுக்காரரர்கள் ஒரு காலத்தில் மாபெரும் கடலோடிகளாக இருந்தனர்.

ஆண்டீனா வெர்பூம் என்னையும் காலின் ஆடம்ஸையும் தனது கானகத்து பங்களாவுக்கு அழைத்துச் சென்றார். அற்புதமான வீடு, நீச்சல் குளத்தோடு இருந்தது. இந்தியாவிலிருந்து கலை விமர்சகர் ஒருவர் வரப்போகிறார் என்று எனக்காக ஐந்து ஓவியப் பெண்மணிகள் ஆண்டீனாவின் வீட்டில் வந்து தங்கிவிட்டனர். இந்தியாவின் கலை விமர்சகர் எப்படி இருப்பார் என்று ஆவலுடன் காத்திருந்தவர்கள் என்னைப் பார்த்ததும் சோர்ந்துபோனார்கள். அட இவ்வளவு எளிமையானவன்தானா இந்தியாவின் கலை விமர்சகன் என்று நினைத்தவர்கள், அவர்களின் படைப்புகள் குறித்த எனது விமர்சனங்களைக் கேட்டு அசந்துபோனார்கள். அனைவரும் சாப்பிடுவதும், குடிப்பதும், பியானோ வாசிப்பதும், ஓவியங்கள் தீட்டுவதும், அவற்றைக் காட்டி என்னிடம் ஓவிய விமர்சனங்களைக் கேட்பதும், அதை விவாதிப்பதுமாக அருமையாகக் கழிந்தன நாள்கள். ஆனால் என் மனம் ஏனோ காலின் ஆடம்ஸ் வீட்டுப் பின்புறத்தில் சலசலத்து ஓடிய கால்வாயிலேயே கட்டுப்பட்டுக் கிடந்தது.

இந்தக் கால்வாய்களைப் பற்றியும், நெதர்லாண்டு முழுவதும் ஓய்வின்றிச் சுழன்ற காற்றாலைகளைப் பற்றியும் அவர்களிடம் விசாரித்தேன். அப்போதுதான் டச்சுக்காரரர்கள் ஹாலண்டு என்றும் நெதர்லாண்டு என்றும் அழைக்கப்பட்ட தங்கள் நாட்டின் புவியியல் அமைப்பு பற்றிச் சொன்னார்கள்.

நெதர்லாண்டின் கடல் நிலப்பகுதியை விட 22 அடி உயரத்தில் இருக்கிறது என்பதைச் சொன்னபோது அசந்துவிட்டேன். நாட்டின் 25 சதவீத நிலப்பகுதி தட்டையாகவும் கடலை விடத் தாழ்வாகவும் இருக்கிறது. கடல் உயரமாகவும் பூமி தாழ்வாகவும் இருப்பதால், கடல்நீர் 22 அடி பள்ளமாக இருக்கும்



நிலப்பகுதியை நோக்கி ஓடி வந்தபடி இருக்கும். இந்த கடல்நீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவைதான் இந்த நாடு முழுவதும் ஓடிக்கொண்டிருக்கும் கால்வாய்கள். ஊருக்குள் வரும் கடல் நீரையும், ஆற்று நீரையும் கால்வாய்களில் ஓடிக்கொண்டே இருக்க வைக்கிறார்கள். இந்த நீரோட்டத்துக்காக நாடு முழுவதும் அசுர வடிவில் இருக்கும் காற்றாலைகளை (WIND MILL) சுழலவிட்டு நீரை இறைத்துக்கொண்டே இருக்கிறார்கள்.

டச்சுக்காரரர்களின் நீர் மேலாண்மை நம்மை மூக்கின்மேல் விரலை வைக்கச் செய்யக் கூடியது. போதாக்குறைக்குக் கடல் நீர் ஊருக்குள் வந்துவிடாமல் இருப்பதற்காக “டைக்ஸ்” என்று அழைக்கப்படும் நீரைத் தடுக்கும் சுவர்களையும் கட்டியிருக்கிறார்கள். இங்கு காற்றாலைகள் 24 மணிநேரமும் காற்றில் சுழன்றபடி நீரை ஊருக்குள் வந்துவிடாமல் நகர்த்திக்கொண்டே இருக்கின்றன. இது இல்லாவிட்டால் மூன்றில் இரண்டு பங்கு நிலம் கடல்நீரின் வெள்ளத்தில் மூழ்கிவிடும்.

அபாயம் கொண்டது இந்த நாடு. இத்தகைய முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும், இந்த நாடு எதிர்பார்த்ததைவிட விரைவாகச் சிறுகச் சிறுக கடல் நீரில் மூழ்கியபடிதான் இருக்கிறது என்று கேள்விப்பட்டபோது, மனிதன் நீரின் சக்தியை எத்தகைய நெஞ்சுரத்துடன் எதிர்கொள்கிறான் எனப் புரிந்தது.

நெதர்லாண்டின் நீர் மேலாண்மையின்

வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால், 1170இல் இந்நாட்டைத் தாக்கிய வெள்ளத்தை இவர்கள் First All Saint's Flood என்று அழைக்கிறார்கள். 1219, 1421, 1520 ஆகியவற்றில் வந்த வெள்ளங்களால் பல நகரங்களை இழந்திருக்கிறார்கள். இதன் பிறகு இந்த நகரங்களைச் சிறுகச் சிறுக மீட்டும் இருக்கிறார்கள். இதனால் நீர் மேலாண்மை என்று நினைத்தவுடன் எப்போதும் என் நினைவில் வந்து நிற்பது நான் அறிந்த நெதர்லாண்டுதான்.

1953இல் வந்த மாபெரும் வெள்ளம் அந்நாட்டை வெகுவாகப் பாதித்து இருக்கிறது. இந்த வெள்ளம் நெதர்லாண்டை மட்டும் பாதிக்காமல் ஐரோப்பாவின் பிற பகுதிகளான பெல்ஜியம், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து பகுதிகளையும் கூட பாதித்து இருக்கிறது. கடலில் கட்டப்பட்ட அணைகளையும் தடுப்புச் சுவர்களையும் இந்த வெள்ளம் உடைத்துவிட்டது. இது போன்ற வெள்ளம் மூன்று முறை நெதர்லாண்டைச் சேதப்படுத்தி இருக்கிறது.

இந்த அபாயங்களையும் மீறி நான் பார்த்த நெதர்லாண்டின் அழகை ஒரு சொர்க்கத்துக்கு இணையாக உயர்த்திக் காட்டும் பல்வேறு வண்ணங்களில் ஜொலிக்கும் டியூலிப் மலர்களைப் பயிர்செய்யும் வயல்கள் கண்ணைப் பறித்தன. நான் மூன்று மாதம் அந்த நாட்டில் தங்குவதாக இருந்ததால் ஆண்டீனாவிடம் நான் சொல்லி விட்டேன்.. அவரது காட்டுப் பங்களாவை விட்டுக் காலின்ஆடம்ஸின் லெய்டன் நகர பங்களாவுக்குப் போய்விடுகிறேன் என்று.

நான் காலின் ஆடம்ஸின் லெய்டன் நகரில் இருக்கும் பர்ப்புல் புனோரல் எனும் பகுதியின் பங்களாவுக்கு வந்த பின்புதான் நெதர்லாண்டின் நீர் மேலாண்மையின் சிறப்பு மனதில் உறைத்தது.

காலின் ஆடம்ஸுக்கு ஐந்து நண்பர்கள். அனைவருமே பிரம்மச்சாரிகள். எனவே வாரத்தின் ஒவ்வோரு நாளும் ஒவ்வொருவர் வீட்டில் சமையல். நானும் காலினும் எங்களது படகிலேயே அவர்களின் வீட்டுக்குப் போய்விடுவோம். அவர்களில் ஒருவர் இசைக் கலைஞர். ஏராளமான இசைத்தட்டுகளைச் சேகரித்து வைத்திருந்தார். ஒருவர் வரலாற்றில் ஆர்வமுடையவர். இவர்கள் அனைவரும் தினந்தோறும் ஒயின் சாப்பிடுவார்கள். இதற்கு "ஒயின் கிளப்" என்று பெயர் சூட்டியிருந்தார்கள். இந்த ஒயின் பார்ட்டிகளில் பெரும்பாலானவை, இந்தக் கால்வாய்களின் கரையில்தான் கழியும். பாண்டிச்சேரியில் கடலோடு பிறந்து வளர்ந்த எனக்கு இந்த நீராலான பந்தம் மேலும் அன்னியோன்னியத்தைக் கொடுத்தது.

ஒருநாள் இரவு 8 மணியிருக்கும். ஒயின் பார்ட்டி நடந்துகொண்டிருந்தபோது திடீரெனத் தேங்காய்த் துருவலைப் போல வெண்பனி பொழியத் தொடங்கியது. எனது நண்பர்கள் எனக்காகவே பொழிவதாகச் சொல்லிக் கும்மாளமிட்டனர்.

இதன் பிறகு தொடர்ந்த பனிப்பொழிவு நேர்ந்த பின்னால் கால்வாய் நீர் பனிக்கட்டிகளாக மாறிப்போயின. அந்தக் கால்வாய் நீரில் நீந்திக்கொண்டிருந்த வாத்துகள் இப்போது பனியில் நீந்த முடியாமல் பனிக்கட்டியின் மீது நடை பழகுவதைப் பார்த்து அதிசயித்தேன். அந்த வீடுகளில் இருந்த குழந்தைகள், வாத்துகளுக்கு ரொட்டித் துண்டுகளைக் கொண்டு வந்து கொடுப்பதைப் பார்த்தேன். வாத்துகளுக்கு நீரில் மிதக்கும்போது நீர்ப்பூச்சிகளின் தீனி கிடைக்கும் என்றும், இப்போது பனிக்கட்டி உறைந்ததினால், பூச்சிகள் கிடைக்காமல் திணறும் வாத்துகளுக்குக் குழந்தைகள் ரொட்டி போட்டுக் காப்பாற்றுகிறார்கள் என்பதையும் நண்பர்கள் சொல்லித்தான் தெரிந்துகொண்டேன். வாத்து ரொட்டித் துண்டைச் சாப்பிடும் என்ற தகவலும் அப்போதுதான் தெரியவந்தது.

இன்று நெதர்லாண்டு தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சியினால் நீர்மேலாண்மையில் இன்னும் சிறந்து விளங்கத் தொடங்கிவிட்டது. இன்று, ஏராளமான அணைக்கட்டுகளையும் தடுப்புச் சுவர்களையும் கட்டி மேலும் பாதுகாப்பு செய்துவிட்டனர். தற்போது நீர்மேலாண்மையில் சூழலில் பல புதிய முன்னேற்றங்களைச் செய்து சிறந்து விளங்குகிறது நெதர்லாண்டு. ■

• கவிஜி




# மானுட உடலின் மர்மம்

திரைப்படம் : *Thanatomorphose*

இது ஒரு பரிசோதனை முயற்சி என்றுதான் சொல்ல வேண்டும். உடல் எனும் வடிவம் டிகம்போஸ் ஆவதுதான் படம். திசுக்களால் ஆன இந்த உடலின் தீவிரம் அதனை உடைத்துச் சிதைத்து அழித்துக்கொள்வதில் இருக்கிறது.

ஓர் இறந்த உடலைப் புதைக்கிறோம் என்றால் அந்த உடலின் மீது மண்ணுக்குள் ஏற்படும் சிதைவு... மாற்றம்தான் இந்தப் படம்.

கொஞ்சம் கொஞ்சமாக உடல் கெட்டு அழுகிக் கூழாகி உதிர்ந்து.. ஒன்றுமில்லாமல் மண்ணோடு மண்ணாக மாறும் அந்த மாற்றத்தை உயிரோடு இருக்கையிலேயே நிகழ்த்திப் பார்க்கிறது இந்த சினிமா. இந்தக் கற்பனைக்கே இயக்குனரைப் பாராட்டலாம். இறந்த பிறகு உடலில் நிகழும் இயல்பைப் புரிந்துகொள்ள ஒரு வாய்ப்பு.

உடல் எனும் அணுக்களின் கூட்டமைவைக் கொஞ்சம் உற்றுக்காணும் கலைப்படைப்பு என்றுதான் சொல்ல வேண்டும். இப்படி ஒரு படத்தை எடுக்க முதலில் பெருமூச்சடக்கிப் பழகியிருக்க வேண்டும். வாந்தி மயக்கம், குமட்டல், குளறுபடி என்று மண்டைக்குள் கரப்பான் பூச்சிகளைப் படரவிடும் காட்சி அமைப்பு. ஒப்பனையில் வழியும் உடலின் உருகும் அழுகலைத் திரை தாண்டியும் உணர முடிந்தது. வாழ்வின் நிலையாமை, உடலின் உருகும் தன்மை என்று படம் பேசுவதெல்லாம் எனக்கு சித்த வரைமை என்றுதான் தோன்றியது.

அறிவியலின் வழியே உடற்கூறுகளின் சூட்சுமம் விளங்கும்போது ஒன்றுமில்லாமல் உருகுவதுதான் இயல்பு என்று புரிந்தது. கொஞ்சம்கொஞ்சமாக உடல் நம் கட்டுப்பாட்டிலிருந்து கரைந்துபோகும் காலம்... நரகத்தின் நரம்பில் புழுக்கள் ஊர்ந்து செல்லும் கற்பனைதான். சிறு இருமலுக்கே ஒரு பக்கத் தலைவலிக்கே ஒரு சிறு காயத்துக்கே நாம் மிரண்டு தவித்துப்போகிறோம். இது கண் முன்னே கொஞ்சம்கொஞ்சமாக நாமே அழுகுவது குறித்ததென்றால்... தொட்ட இடமெல்லாம் பிய்ந்துகொண்டு வருமென்றால்... மண்ணாய்ப் போகிற உடம்பென்று தெரியாமலா பெரியோர் சொல்லிவைத்தார்கள்.

உடல் எனும் பெரும் இயந்திரம் ஓடும்வரைதான் பேரழகு. எங்கோ எப்படியோ எதற்கோ நின்றுவிட்டாலோ ஓட்டத்தைச் சற்று மாற்றிக்கொண்டாலோ... கதை கெட்டது. மூத்திரமோ மலமோ நம் பேச்சு கேட்கும்வரைதான் நாம் நாம். அது தன் போக்குக்கு ஆகிவிட்டால்... நமக்கு நாமே யாரோதான்.

எத்தனை பெரிய அழகி இந்தக் கதை நாயகி. கொஞ்சம்கொஞ்சமாக உருக்குலைகையில்.. அதை அவளே புரிந்துகொள்கையில்... உலகம் கைவிடும் முன் உலகத்தை அவள் கைவிடும் இயலாமைக்குள்... அல்லாடி நடந்து தவழ்ந்து தன்னைத் தானே பரிசோதனை செய்யும் காட்சியில்... வாழ்வென்பது நரகத்தின் வாசலில் நிகழ்ந்துகொண்டிருப்பது என்று புரிகிறது. நூல் தப்பினால்... தொட்டாலே நூல் படரும் உடம்புதான் ஒவ்வொருவருக்கும். எதுவோ ஆக வேண்டி என்னவோ ஆகிவிட்டதன் வடிவம்தான் உடல். அத்தனையும் திசுக்கள். ரத்தம். சதை. எலும்பு. நரம்பு.

எப்படியோ வந்து ஒட்டிக்கொண்ட மனம் எனும் மேடையில்தான் இத்தனை நாடகமும்.

பொதுவாகவே செத்த உடல் சற்று நேரத்தில் குளிர்ந்துவிடுவதை நடுக்கத்தோடுதான் உணர முடிகிறது. அது நமக்கு எத்தனை நெருக்கமான மனிதராக இருந்தாலுமே. நம்மிலிருந்து வேறொன்றாக அது மாறிவிடுவதைச் செத்த வீட்டில் உயிரோடு இருப்போர் அனைவருமே உணர்ந்திருக்கிறோம். அதனால்தான்... இறந்த உடலைப் பெரும்பாலும் தொடாமல் தவிர்க்கிறோம். அந்தத் தவிர்ப்பு என்பது அனிச்சை.

உடலின் ஒரு நிலைதான் இறப்பு. அதன் பிறகும் அதில் நடக்க நிறைய மாற்றங்கள் இருக்கின்றன. இங்கே தோன்றிய எதுவும் அழிவதில்லை. அது இன்னொன்றாக மாறிவிடுகிறது. எரித்தால்... சாம்பல். சாம்பலைக் கரைத்தால்... நீரில் அது ஐக்கியம். நீர் என்னவெல்லாம் ஆகும் என்று நாம் அறிவோம். புதைத்தால்... உருகி மக்கிப் புழுக்களுக்கு உணவாகி மண்ணுக்கு உரமாகி மீண்டும் அது எங்கோ இந்தப் பூமியில் ஒரு துளியாகி... அது ஒரு தொடர்கதை.

ஒன்றுமில்லாமல் போவதிலும் ஒன்று இருக்கிறது. அதுதான் மொத்த சூட்சுமம். சூனியம் என்று பேச்சுக்குச் சொல்லிக்கொள்ளலாம்.

“மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று. தெய்வம் சிரிப்பதுண்டு மனிதன் பாவமென்று...” கவிஞன் சொன்னது நினைவுக்கு வந்தது. காலத்தின் பிசுபிசுப்பு ஒவ்வொரு உடலுக்குள்ளும் மலக்கிடங்கைச் சுமந்துகொண்டிருக்கிறது. அருவருப்பின் மீது போர்த்திய அழகிய தோல் வழியேதான் நமது வாழ்வும் வளமும்.

ஒரு நாள் பல் துலக்காமல்... இரண்டு நாள் மலம் கழிக்காமல்... மூன்று நாள் குளிக்காமல்... அது காதலியே / காதலனே ஆனாலும்.. கருமம்தான். அந்த நிஜம்தான் இந்தப் படத்தில் ரத்தம் சொட்ட நிணநீர் சொட்ட நாம் புரிந்துகொள்வது. ஒன்றிலிருந்து ஒன்று மாறுவதில் எங்கோ பிசிறு தட்டினால் போதும்... ஒன்றுமில்லாமல் உருக்குலையும் உடல்தான் இது. அந்த வெற்றைக் கொண்டு நான் அது... நான் இது... என்று சொல்வதெல்லாம் புழுக்கள் சிரித்துக்கொள்ளும் மொழியற்ற பூச்சு.

எத்தனைக்கு எத்தனை ஆச்சரியமோ... உடல் அத்தனைக்கு அத்தனை அழுகல்.

கால் மீது சுத்தியல் விழுவது கூட தெரியாமல் நிற்பது.. நகம் பிய்ந்துகொண்டு வருவது.. தலைக்குள் ஓட்டை விழுவது.. உடல் கறுத்து உயிர் நோக ஒரு தவம் அரங்கேறுவது..



இயலாமையில் ஆதி யுக்தி கொலையை முன்னிறுத்தி அதன் மூலம் ஒரு புணர்ச்சி விதியை மனதுக்குள் கொண்டாடுவது.. என்று படம் பேசாமல் பேசுவது எல்லாம் இந்த மானுட உடலின் மர்மம் பற்றித்தான்.

உடலின் மையத்தில் இருந்தே உடல் துவங்குகிறது. அதனால்தான் மர்ம முடிச்சுகள் வழியே மாய்ந்து மாய்ந்து மனிதன் முணுமுணுப்பது. சராசரி வாழ்வின் அடித்தளம் புணர்ச்சியில் இருக்கிறது. இந்தப் படத்தில் கூட அத்தனை உருகுதலின் நிலையிலும் அவள் புணர்ச்சியை நாடி மண்டியிடுவது அதனால்தான். சுய மைதுனம் வழியே உடல் வலியைச் சற்று ஒதுக்குவது அப்படித்தான்.

வலிக்கும் சுகத்துக்கும் நூல் அளவு இடைவெளிதான். உணர்ந்தோருக்கு அர்த்தம் புரியும். கலவி... மானுட விடுதலை. அது இன்றியே இங்கே பெரும்பான்மை மனங்களில் சிறைச்சாலை கம்பி நீட்டிக்கொண்டிருக்கிறது. யோனி எனும் சிருஷ்டிதான் இங்கே பிரபஞ்ச ரகசியம். அதன் காரணம்தான் அது இருக்குமிடம் முட்டாள்களுக்கு அகப்படுவதில்லை. உடலைப் போற்றிப் புகழ்ந்து தள்ள வேண்டாம். அதே நேரம் உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் எனும் திருமூலரின் சொல்லுக்கு வளையச் செய்வது காலத் தேவை.

“கலவி உள்ள காலம் வரை உடம்புக்குள்ள சிக்கல் இல்லை” என்று நம் கவிஞன் சொல்கிறான்.

உயிர் போகும்போது பலர் மலம் கழித்துவிடுவதுண்டு, குறிகள் விரைத்துக்கொள்வதுண்டு என்று ஊரில் பெருசுகள் பேச... சிறுவயதில் கேட்டிருக்கிறேன். ஒரு மரணத்தில் அருகேயே கண்டிருக்கிறேன். ஆக வாழ்வுக்கும் மரணத்துக்கும் எப்போதும் தொடர்புண்டு. மரணத்துக்கும் கலவிக்கும் முப்போதும் தொடர்புண்டு. அதனால்தான் ஒவ்வொரு புணர்ச்சியிலும் ஒரு சிறு மரணம் உணர்கிறோம். வாழ்வின் அடித்தளம் புணர்ச்சி என்றால் இரு பக்கச் சுவர்... பிறப்பும் இறப்பும். மூன்றும் ஒரு வழிப் பாதை என்பதுதான் எவ்வழியே உயிரணு உள்ளே போகிறதோ அவ்வழியாகவே பிண்டம் வெளியேறுவதும்.

மனிதன் மறைவுக்குப் பின் அவன் உடலில் நிகழும் சிதைவுகளை உயிரோடு இருக்கையிலேயே நிகழ்த்திப் பார்க்கும் மிகு புனைவு ஒரு வகையில் ரசிக்கத்தக்கதுதான். இப்படி ஒரு வாய்ப்பு கிடைக்காதுதானே. சினிமா ஆகப் பெரிய கலை. அது ஒரு வகுப்பறை. வாழ்வின் இண்டு இடுக்குகளில் இருந்தெல்லாம் இருட்டையும் ஒளியையும் கொண்டு வந்து கொட்டும்.

வேண்டுமென்பதை அறிந்துகொண்டு வேண்டாமென்பதை அறிந்ததில் இருந்து அரிந்துகொள்ளுங்கள். மற்றபடி உருமாற்றங்கள் நொடிக்கு நொடி நிகழ்ந்துகொண்டே இருப்பவைதான். அதற்கு வாழ்வது சாவது பற்றியெல்லாம் அக்கறை இல்லை.

**இயக்குநர் : Éric Falardeau**

**மொழி : ஆங்கிலம்**

**ஆண்டு : 2012**

● கவிஞர் விக்ரமாதித்யன்

# இயக்குநர் ருத்ரய்யா



மார்க்ஸியஞானமும் கலை இலக்கிய
ரசனையும்
கூடிய
மனுஷன்

தீர்க்கமான மேதைமை
நெகிழ்வான மனசு

திமிர்ந்த கம்பீரம்
தேர்ந்த ஆங்கிலம்

ஃபெர்க்மன் ஃபெலினி கோடார்ட்
ரித்விக் கட்டக் என்றுதான் பேச்சு
•

திரைப்படக்கல்லூரியிலிருந்து வருகை
துடியாய் எழுபதுகளின் நடுவே

தளராத முயற்சியில்
முதல்படம் 'அவள் அப்படித்தான்'

பெயர் துலங்கியது
புகழ் விளங்கியது

கல்யாண வீடுபோல
குமார் ஆர்ட்ஸ்

அநேகம் எதிர்பார்ப்புகளோடு
படக்குழுவினர்
•

எண்பதுகளின் தொடக்கம்
இரண்டாவதுபடம் ' கிராமத்து அத்யாயம்'

தழுவியது தோல்வி
நேர்ந்தது வீழ்ச்சி

பிறகு
படமே இல்லை

எப்படிக் கழிந்திருக்கும்
முப்பத்துநான்கு வருஷமும்

எல்லாம்
இப்பொழுது கதைகள்

துடைத்துவிட்டுப்போயிற்று
மரணம்

காலமே
அக்ஷயகாலமே

கரம் குவித்து சிரம் தாழ்த்தி வணங்குவது
தவிர
செய்ய ஒன்றுமில்லை

தொடர் – 25

● மு.முருகேஷ்





# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

1980களின் இறுதியில் என் பள்ளிக்கூட நண்பரின் சகோதரர் மற்றும் மூன்று கல்லூரி நண்பர்களோடு சேர்ந்து ‘விடியல்’ எனும் உருட்டச்சு இதழினைத் தொடங்கினேன். அந்த இதழில் தொடர்ந்து கவிதைகளும், சிறுகதைகளும், கட்டுரைகளும் எழுதிவந்தேன். எனது கவிதைகளை வாசித்த நண்பர்கள் சிலர், இலக்கிய நிகழ்வுகளுக்கும் என்னை அன்போடு அழைத்து, மேடையேற்றிப் பெருமைப்படுத்தினர்.

அப்போது டி.ராஜேந்தரின் ‘உஷா’ இதழில் செய்தியாளராக இருந்த சிவ.சண்முகராஜா ஏற்பாட்டில் புதுக்கோட்டையிலுள்ள அடப்பன்வயலில் ஒரு கவியரங்கம் நடைபெற்றது. சந்தப்பா வேந்தர் யா.வெண்ணரசு தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் நானும் பங்கேற்றேன். அந்தக் கவியரங்கில் என்னைப் பெரிதும் ஈர்த்த கவிதைகளை ஓர் இளைஞர் வாசித்தார். அவரது கம்பீரமான குரலும், முக மலர்ச்சியுடன் அவர் கவிதை வாசித்த அழகும் என் மனதில் அப்படியே தங்கிப்போயின. கவிதையை வாசித்துவிட்டு, அந்தக் கவிஞர் இருக்கைக்கு வந்து அமருமுன்னே ஓடிப்போய் அவரது கைகளைப் பற்றிக் குலுக்கினேன். அடிமனசின் பூரிப்போடு கவிஞர் அன்று உதிர்த்த அந்தப் புன்னகையையும், அவரது கைகளில் இருந்த கதகதப்பையும் இன்னும் பத்திரமாகப் பொத்தி வைத்திருக்கின்றேன். 35 ஆண்டுகளுக்கும் மேலாகக் காலம் கடந்தோடிவிட்ட பின்னரும் அதே புன்னகையுடனும், அதே நேசத்தோடும் தொடர்ந்து என்மேல் அன்புப் பாராட்டி வருபவராக இருக்கிறார் கவிஞர் தங்கம் மூர்த்தி.

நான் அவருக்குக் கையளித்த 'விடியல்' இதழுக்குக் கவிதை தந்தார். அவ்வப்போது நல்ல ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கினார். 1991இல் தனது நண்பர்களும் கவிஞர்களுமான பொன்.தங்கராஜ், காசிநாதன் இருவரோடும் சேர்ந்து, புதுக்கோட்டை திலகர் திடல் அருகே 'தாகூர் நர்சரி பள்ளி'யினை ஆரம்பித்தார். எப்போது சென்று பார்த்தாலும் ஒரு தேநீருடன்தான் தனது உரையாடலைத் தொடங்குவார். தனக்கு வந்திருக்கும் சிற்றிதழ்களை எனக்கு அறிமுகப்படுத்துவார். ஹைக்கூ பற்றிய முழுமையான புரிதலின்றி, மூன்று வரி கவித்துணுக்காக ஹைக்கூ கவிதைகளை நான் எழுதிக்கொண்டிருந்த காலகட்டமது.

கவிஞர் தங்கம் மூர்த்தியின் புதுக்கவிதைகளும், ஹைக்கூ கவிதைகளும் பரவலாக எல்லா இதழ்களிலும் இடம்பெற்றிருக்கும். ஏதோ ஓர் இதழில் வந்த கவிஞரின் ஹைக்கூ ஒன்று;

'கண்ணில்லாதவர்கள்

கையேந்துகிறபோது

நாமெல்லாம் குருடர்கள்.'

மூன்று வரிகளில், நான்கு வார்த்தைகளில் அமைந்த இந்தக் கவிதை எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. இன்னொரு இதழில் -

'பட்டாம்பூச்சி பிடித்துக்கொடுத்தேன்

இறக்கை முளைத்தது

மகளுக்கு.'

- கவிதையைப் படித்த எனக்கும் இறக்கைகள் முளைத்துவிட்டன.

தென்னாப்பிரிக்காவில் நிலவிய இனவெறிக்கெதிராக ஆப்பிரிக்க தேசியக் காங்கிரசின் ஆயுதப்படைத் தலைவரான நெல்சன் மண்டேலா தலைமையிலான குழு, 1961ஆம் ஆண்டு டிசம்பர் 16 அன்று தனது முதல் தாக்குதலை வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் தொடுத்தது. வெள்ளை அரசு நெல்சன் மண்டேலாவை, 1962ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5 அன்று கைது செய்தது. வெள்ளை அரசுக்கு எதிராகப் புரட்சி செய்ததாகவும், அமைதியைக் குலைத்ததாகவும் குற்றஞ்சாட்டி, 1964இல் (ஜூன் 12) நெல்சன் மண்டேலாவுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இதனை உலக நாடுகளெல்லாம் கண்டித்தன. பல நாட்டு எழுத்தாளர்களும் கட்டுரைகளைத் தீட்டினர். மகாகவி பாரதி பிறந்த தமிழகத்துக் கவிஞரான தங்கம் மூர்த்தி மட்டும் சும்மா இருப்பாரா என்ன?

'கருப்பு ஆட்சிக்கு வரும்

இன்று அந்தியிலும்

நாளை ஆப்பிரிக்காவிலும்.' (மார்ச் – 1987)

நெல்சன் மண்டேலா சிறையிலிருக்கும்போதே, ஒரு தீர்க்கதரிசியாகக் கவிஞர் எழுதினார். 27 ஆண்டுகால சிறைவாசத்திற்குப் பின், 1990ஆம் ஆண்டு பிப்ரவரி 11 அன்று விடுதலையானார் நெல்சன் மண்டேலா.

நெல்சன் மண்டேலா விடுதலையானதை உலகமே வரவேற்றது. அன்றைய இந்தியப் பிரதமராகயிருந்த வி.பி.சிங் தலைமையில் இந்தியாவில் நெல்சன் மண்டேலா வரவேற்புக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

தமிழகத்தின் சார்பில் தென்னாப்பிரிக்காவின் கருப்புத் தங்கம் என்று கொண்டாடப்பட்ட நெல்சன் மண்டேலாவிற்குக் கவிஞர் தங்கம் மூர்த்தி எழுதிய மூன்று வரி கவிதையை விடவும் சிறந்த பரிசென வேறெதைக் கொடுத்துவிட முடியும்..?

புதுக்கோட்டை மாவட்டத்தின் அறந்தாங்கி ஒன்றியத்திலுள்ள சுப்பிரமணியபுரம் எனும் ஊரில் 1964ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று டாக்டர் கே.கே. தங்கம் - ஜெயலெட்சுமி தம்பதியினரின் மகனாகப் பிறந்தவர் மூர்த்தி. தந்தையின் பெயர் சொல்ல விளங்கும் தனயனாய்த் தங்கம் மூர்த்தியானார்.

ஆரம்பக் கல்வி தொடங்கிப் பத்தாம் வகுப்பு வரை சுப்பிரமணியபுரத்திலுள்ள அரசுப்பள்ளியில் பயின்ற தங்கம் மூர்த்தி,

அறந்தாங்கி அரசு மேனிலைப்பள்ளியில் 12ஆம் வகுப்பு வரை படித்தார். பிறகு புகழ்மிக்க புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தில் இளங்கலை படிக்கையில் பேராசிரியர் ஆர்.பாலச்சந்திரனின் (கவிஞர் பாலா) மாணவரானார். மாமன்னர் கல்லூரியிலேயே ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டமும், கல்வியியல் பட்டமும் பெற்றார். பட்டதாரி ஆசிரியரான அஞ்சலிதேவியைத் தன் இல்லற இணையராக ஏற்றார். கவிஞரது இணையரும் ஒரு கவிஞர் என்பது இன்னொரு சிறப்பு. நிவேதிதா மூர்த்தி, காவியா மூர்த்தி என இரு புதல்வியர்களோடு இல்லற பயணத்தைத் தொடர்ந்த கவிஞர் தங்கம் மூர்த்தி, படைப்பிலக்கியத் தளத்திலும் தொடர்ந்து நிறைவான பங்களிப்பை ஆற்றி வருகிறார்.

1990இல் நானும் எனது இலக்கியத் தோழமைகள் புதுகை பூவண்ணன், கவித்தூரிகையும் இணைந்து 'தெருவோர தேசம்' எனும் கவிதை நூலினை வெளியிட்டோம். அந்த நூலின் வெளியீட்டு விழா தாகூர் நர்சரி பள்ளியில்தான் நடைபெற்றது.

1994 டிசம்பரில் கவிஞர் தங்கம் மூர்த்தியின் முதல் ஹைக்கூ கவிதை நூலான 'முதலில் பூத்த ரோஜா' நூலும், 1995 ஜனவரியில் எனது இரண்டாவது ஹைக்கூ நூலான 'என் இனிய ஹைக்கூ' நூலும் வெளியாகின. இந்த இரு ஹைக்கூ நூல்களையும் பற்றி இன்றைய மதுரை நாடாளுமன்ற உறுப்பினரான எழுத்தாளர் சு.வெங்கடேசன், 'முதலில் பூத்த இனிய ஹைக்கூ' எனும் திறனாய்வுக் கட்டுரையினைச் 'செம்மலர்' இதழில் எழுதினார்.

அழகியல்பூர்வமான காட்சிகளோடு, கவித்துவமான வரிகளுமடங்கிய ஹைக்கூ கவிதைகள், கவிஞரது முதல் நூலிலேயே இடம்பெற்றிருந்தன. இந்நூலுக்கு 'இலக்கியத்திற்கு இலக்கணமாகும் வரிகள்' எனும் தலைப்பில் அழகானதொரு முன்னுரையைக் கவிஞர் பாலா எழுதியிருப்பார். 'தமிழில் ஹைக்கூ வேண்டாம்' எனும் கருத்துடைய விமர்சகர் பாலாவையே வசப்படுத்திய ஹைக்கூ கவிஞர் என்பதில் தங்கம் மூர்த்தி மேல் எனக்குக் கூடுதல் அன்பு எப்போதுமுண்டு.

2004இல் 'தங்கம் மூர்த்தி கவிதைகள்', 2005இல் 'பொய்யெனப் பெய்யும் மழை', 2010இல் 'என் பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து', 2012இல் கவியரங்கக் கவிதைகள் தொகுப்பாகக் 'கவிதையில் நனைந்த காற்று' எனும் நூல், 2017இல் 'தேவதைகளால் தேடப்படுபவன்', 'அந்த வானவில்லுக்கு எட்டு நிறங்கள்', 2021இல் 'கூடு திரும்புதல் எளிதன்று' ஆகிய கவிதை நூல்களைத் தொடர்ந்து படைத்தளித்தார் கவிஞர் தங்கம் மூர்த்தி.

'தங்கம் மூர்த்தி கவிதைகள்' நூலின் முதல் கவிதையின் தலைப்பு: 'நானும் நண்பர்களும்.' கவிதை இப்படி தொடங்குகிறது;

'எதிரிகளும்

எதிரிகள் போலவும்

நண்பர்களும்

நண்பர்கள் போலவும்

நிறையப் பேர்

எனக்கு.

எதிரிகளை எளிதில்

இனம் காண முடிகிறது

அவர்களைக் கண்டு

அச்சமில்லை எனக்கு.

நண்பர்களை

நினைத்தால்தான்...'

- என்று வாழ்வின் எதார்த்தத்தைத் தொட்டு எழுதியிருப்பார் கவிஞர்.


'எளிய மனிதர்களே பெரிய சாதனைகளைப் படைக்கிறார்கள்' என்பதைப் போல, சாதாரணச் சொற்களைக்கொண்டே பல வலிமைமிக்க கவிதைகளை எழுதுகிறவராகக் கவிஞர் தங்கம் மூர்த்தி அறியப்பட்டார்.

'ஆதிக்கரு

உருவானது

ஆதாமிடம் எனில்

சாதிக்கரு




உருவானது

சாத்தானிடம்.’

…………………………

‘சாதிக்கும் தலைவர்கள்

இல்லாத தேசத்தில்

சாதிக்குத் தலைவர்கள்

ஏராளம்.’ *(பொ.பெ.மழை - பக்கம்: 22, 23)*

சமூக நடப்பு உண்மைகளைச் சத்திய ஆவேசத்தோடு போட்டுடைக்கும் வரிகளுக்குச் சொந்தக்காரராகவும் இருக்கிறார் கவிஞர்.

‘என் வீட்டு மரம்

உன் வீட்டுப் பக்கம்

சருகுகளை

உதிர்ப்பதற்குச்

சண்டையிடுகிறாய்.

தண்ணீர் ஊற்றுபவனுக்கு

மலர்களையும்

தகராறு செய்பவனுக்கு

சருகுகளையும் வழங்க

எங்கு கற்றது

மரம்..?’ *(எ.ப. நா – பக்கம்: 26)*

எவ்வளவு அர்த்தம் பொதிந்த கேள்வியிது. மரங்களெல்லாம் மனிதர்களாகி உணர்வு பெற்றுச் செயலாற்றிட, மனிதர்களெல்லாம் மரங்களாகி மௌனித்து நிற்கும் சமூக அவலத்தை இதைவிட வேறெப்படி தோலுரித்துக் காட்ட முடியும்..?

பெருமளவில் அதிகரித்துவரும் உடல் பருமனும், சர்க்கரை நோயும் இன்றைக்குச் சாதாரண மனிதர்களையும் நடைப்பயண மனிதர்களாக்கிவிட்டது. காலையில், நடுப்பகலில், மாலையில், இரவிலென மனிதர்கள் எந்நேரமும் நடை பயில்கிறார்கள். நடக்கிற மனிதர்களைப் பார்க்கும்போதெல்லாம் என் நினைவுத்தொடரில் கவிஞர் தங்கம் மூர்த்தியின்

கவிதையொன்றே உள்ளோடும்.

**தலைப்பு: 'நடைப்பயிற்சியும் சில நண்பர்களும்...'**

'நடைப்பயிற்சி செல்வோரில்
பலரும்
நடைப்பயிற்சி செய்வதில்லை.'

……………………………..

'அலைபேசியில் பேசியே
அத்தனை சுற்றும்
முடிப்போருண்டு.
ஆலோசனை சொல்லியே
கொஞ்சம்
அறுப்போருண்டு.
மருத்துவருக்குப் பயந்தும்
மனைவிக்குப் பயந்தும்
வருவோருண்டு.'

……………………………..



'நடக்கும் இடத்தை
நாளெல்லாம் பேணி
மரம் வளர்த்து
மகிழ்வோருண்டு.
என்போல்
எப்போதாவது
நடப்போருண்டு.
ஆக
நடைப்பயிற்சி செல்வோரில்
பலரும்
நடைப்பயிற்சி செய்வதில்லை
நான் உட்பட.' (தே.தேடப்படுபவன் - பக்கம்: 49, 50, 51)

சமூகத்திலிருந்து தன்னை மட்டும் துண்டித்துக்கொள்ளாமல், தானுமொருவனாய்ச் சமூகத்தோடு சேர்ந்து நின்று கவிதைகளைப் படைப்பதும், படிப்பதுமே கவிஞர் தங்கம் மூர்த்தியின் தனித்துவத்துக்குச் சான்றாகும்.

உலகையே அச்சுறுத்திய கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் வெளியானது கவிஞரது ஆறாவது கவிதை நூலான 'கூடு திரும்புதல் எளிதன்று.' இந்நூலிலுள்ள கவிதைகள் அனைத்துமே நம்மை மீண்டும் மீண்டும் எண்ணிப்பார்த்து அசைபோட வைக்கும் ஆசையைத் தூண்டும் கவிதைகளாக உள்ளன. அதிலும், 'அது ஒரு கொரோனா காலம்' எனும் தலைப்பில் கவிஞர் எழுதியிருக்கும் பத்து கவிதைகளுமே முத்தான கவிதைகள். அதிலொரு முத்து, இதோ;

'இரண்டு
முகக்கவசங்களை
அணிந்தே செல்கிறாய்
தோலில் ஒன்று;
துணியில் ஒன்றென.' (பக்கம்:109)

'கல்வி கரையில' (2010) எனும் தலைப்பில் கல்வி பற்றிய கவிதைகளைத் தொகுத்துக் கவிஞர் வெளியிட்ட தொகுப்பு, பெரிய

வரவேற்பைப் பெற்று, பல பதிப்புகள் வெளியானது. தமிழின் சிறந்த கவிதைகளைத் தேர்வுசெய்து ‘100 கவிஞர்கள் 100 கவிதைகள்’ (2021) எனும் தொகுப்பு நூலையும் வெளிக்கொண்டு வந்தார்.

கவிஞர், கட்டுரையாளர், கல்வியாளர் எனும் பன்முக அடையாளங்களுடன் சிறந்த சொற்பொழிவாளர் என்கிற சிறப்பும் கவிஞர் தங்கம் மூர்த்திக்கு உண்டு. எதிரேயிருக்கும் பார்வையாளர்களைத் தன்வசப்படுத்தும் வசீகரமான உரைக்குச் சொந்தக்காரர். தங்கு தடையற்று, சிறிதும் பிசிறில்லாத வகையில் பேசுவதில் வல்லவர். கண்களை மூடிக்கொண்டு கேட்டால் கவிஞர் பாலா பேசுவதைப்போலவே ஆற்றலுடன் கூடிய அழகுத்தமிழ்ப் பேச்சாக மிளிர்பவை கவிஞர் தங்கம் மூர்த்தியின் உரைகள்.

பல்வேறு ஊடகங்களின் சிறப்புப் பட்டிமன்றங்களில் பங்கேற்றுள்ளார். பல்வேறு நாடுகளுக்கும் சென்று சொற்பொழிவாற்றியுள்ளார். இவரது படைப்புகள் பல்கலைக்கழக, கல்லூரிப் பாடத்திட்டங்களில் இடம்பெற்றுள்ளன. ஆங்கிலம், இந்தி, பிரெஞ்சு, மலாய், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் இவரது கவிதைகள் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

தனது சிறப்பான கல்விப்பணிக்காகத் தமிழக அரசின் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது, மத்திய அரசின் தேசிய நல்லாசிரியர் விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார். தனது படைப்புகளுக்காகத் தமிழக அரசின் சிறந்த கவிதை நூல் பரிசு, கவிஞர் சிற்பி விருது, கவிக்கோ விருது, செல்வன் காக்கி விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளார்.

1996இல் ‘ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிக் மேனிலைப்பள்ளி’ எனும் பள்ளியைத் தொடங்கி, திறம்பட நடத்தி வருகிறார். சாகித்திய அகாதெமி தமிழ்ப் பிரிவின் ஆலோசனைக்குழு உறுப்பினராகவும், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினராகவும் செயலாற்றியுள்ளார். தற்போது பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவைச் செயலாளராகவும், புதுக்கோட்டை நூலக வாசகர் வட்டத் தலைவராகவும் பங்காற்றிவருகிறார். இயக்குநர் முரளி அப்பாஸின் இயக்கத்தில் வெளியான ‘சொல்லச் சொல்ல இனிக்கும்’ திரைப்படத்தில் பாடலொன்றையும் எழுதியுள்ளார்.

கவிஞர் தங்கம் மூர்த்தியின் பல கவிதைகளுக்குள் சின்னச் சின்னக் கதைகளுக்கான கூறுகளும் நிறைந்துள்ளன. தான் பார்த்த - தன்னைப் பாதித்த சிறு சம்பவங்களையும் ஒரு கதைக்கான உள்ளடக்கத்துடன் அப்படியே கவிதையாக்கியுள்ளார். பல கதைக்கவிதைகளைச் சுட்டலாம் என்றாலும் எனக்கு ரொம்பவும் பிடித்த தலைப்பில்லாக் கதைக்க(வி)தையிது;

“‘துக்கச் செய்தி
மரண அறிவிப்பு…”
அதிகாலையில்
ஆட்டோவில் கேட்கும்
அவனது குரல்.
அந்தக் குரல் வழியேதான்
அறிய முடியும்
எல்லா மரணத்தையும்.
எந்த மரணமும்
உறவினர்களுக்கு முன்பே
அவனுக்குத்தான்
சொல்லப்படும்.
மெலிந்த உடலும்
அழுக்கு ஆடையும்
தாடியுமாய்
ஆட்டோவின் ஒரு மூலையில்
ஒடுங்கி உட்கார்ந்திருப்பான்
மைக்கைப் பிடித்தபடி.
காற்றில் பரவும்
அந்தக் குரலில்
ஒரு கம்பீரம் இருக்கும்.
நின்று நிறுத்தி



நிதானமாய் அறிவிக்கும்
அவனை அலட்சியப்படுத்தி
யாரும் கடந்துவிட முடியாது.
இறந்தவரின் குடும்பம்,
பரம்பரை, இத்யாதி
இறுதி ஊர்வலம்
நல்லடக்கம்.
அனைத்தையும்
கச்சிதமாய்ச் சொல்லி
கவனத்தை ஈர்ப்பான்.
என்னைக் கண்டால்
டீ
வாங்கிக் கேட்பான்.
பிரியமாய்ப் பேசி
எப்படிப் போகிறது
வாழ்க்கை
எனக் கேட்டேன்.
யாரோ செத்து
நான் பிழைக்கிறேன்
என்று சிரிப்பான்.
வேறொரு நாளில்
இன்னொரு மரண அறிவிப்பில்
புதுக்குரல் கேட்டு
ஆட்டோவை எட்டிப் பார்த்தால்
அவனிருக்கவில்லை.
வீடு கண்டுபிடித்து
விசாரித்தேன்.
அழுதுகொண்டே அறிவித்தாள்
அந்த வயதான தாய்.
ஈரல் கெட்டுப்போச்சு
தொண்டையில் புண்ணு
படுத்த படுக்கை
போய்ச் சேர்ந்துட்டான்...
"எல்லார் சாவையும் சொல்ல
இவன் ஒரு ஆளா இருந்தான்.
இவன் சாவைச் சொல்ல
ஒரு ஆளும் இல்லையே!"
திரும்பி வரும் வழியெல்லாம்
அவன் குரல்
ஒலித்துக்கொண்டேயிருந்தது
அவனது மரணத்தை
அவனே அறிவிப்பது போல்.'
(எ.ப.நாட்குறிப்பிலிருந்து – பக்கம்: 36)

வாசித்து முடித்ததும் மறந்துபோகிற வரிகளை எழுதாமல், நம் நினைவில் மீண்டும் மீண்டும் ஊடாடும் வகையில் கவிதைகளைப் படைக்கும் கவிஞராக வலம்வருகிறார் கவிஞர் தங்கம் மூர்த்தி.

எப்போதும் உள்ளூர் படைப்பாளிகளை மக்கள் கண்டுகொள்ள மாட்டார்கள் என்கிற பொதுவான குற்றச்சாட்டு ஒன்று உண்டு. ஆனால், கவிஞர் தங்கம் மூர்த்தியோ தான் வாழும் புதுக்கோட்டை மண்ணிலேயே மக்களால் பெரிதும் பாராட்டப்பெறும் கவிஞராக இருக்கிறார். தன் செயலாலும், எழுத்தாலும், எல்லோரிடத்தும் அன்பினைப் பொழிகிற பண்பினாலும் புதுக்கோட்டையைக் கவிக்கோட்டையாக மாற்றியிருக்கிறார் என்பதும் கவிஞரது புகழ் மகுடத்தில் இன்னொரு வைரமென ஜொலிக்கவே செய்கிறது.

- இன்னும் சொல்வேன் ■

சிறுகதை

மீரான் மைதீன்
ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்பித்தன்

# ஆலுவா வீடு



ஆலுவா வீடு என்று சொல்லப்படுகிற இந்த இரட்டை நிலை வீட்டிற்கு நான் இப்போது வந்து சேர்ந்த கதையையும் அதில் ஏற்பட்ட பிரச்சனைகளையும் சொல்லிக்கொண்டிருந்தால் அது பருவம் பிசகிய ஒரு பலாப்பழத்தைப் பிய்த்த கதையைப் போல ஆகிவிடும். அதில் சந்தித்த மனிதர்களின் வகைகள் அதிஅற்புதமானவை. மனிதர்கள்தான் உலகில் அதிசயமானவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளிலும் அவர்களுக்குள் நிகழ்ந்தேறும் விசயங்களுக்கெல்லாம் எடை இருக்குமானால் பாரம் தாளாது இந்தப் பூமியின் அச்சு முறிந்துபோகும். ஆனால் மனித மனங்களின் விசயங்கள் எடையற்று அந்தரத்தில் இரகசியமாகக் கிடக்கின்றன.

நான் இந்த புராதனமான நகரை வந்தடைந்த பிறகும் வெறும் இருபது கிலோமீட்டர் தூரமுள்ள ஆலுவா வீட்டிற்கு வருவதற்கு நான்கு நாட்களாகியிருக்கிறது. அந்த நாலு நாட்களும் நான் ஓரிடத்தில் அகப்பட்டுக்கொண்டேன் என்பதுதான் உண்மையாக இருக்கிறது. எனக்கு என் அகப்படுதல் அவ்வளவு மோசமானதாக இல்லை என்றாலும் அது சேதுவுக்குக் கடுந்துயரத்தை ஏற்படுத்திவிட்டது. அவன் என்னைத் தேடி அலைந்திருக்கிறான். தகவல் தொடர்பற்றுப் போகுதல் என்பது மரணத்தைப் போன்றது போலாகியிருக்கிற காலம்.

நான் நாலு நாட்களுக்கு முன்னமே

திட்டமிட்டவாறு ஆலுவா வீட்டை அடைந்திருந்தால் அந்தப் பாம்பாட்டிக் கதை நாங்கள் முன்னமே திட்டமிட்டவாறு நிறைவு பெற்றிருக்கும். எவ்வளவு இடங்கேறுகள். சேதுவின் எரிச்சலில் முற்றிலும் நியாயமில்லை என்று மறுத்துவிட முடியாது. அவன் என்னை இங்கு கொண்டு வந்து சேர்ப்பதற்குள் இந்த நாலு நாட்கள் நாய் படாத பாடுபட்டுவிட்டான். நான்கூட அந்தப் புராதன நகரின் கடலோரமாக இருந்த விடுதியில் ஓரளவுக்கு சொகுசாகத்தான் இருந்தேன். மாலையில் காலார கடற்கரையில் நடந்தேன். அது நல்ல காட்சி இன்பமுடைய கடற்கரையும்கூட. அயல்நாட்டுப் பெண்கள் மிக சொற்பமான ஆடையில் பந்து விளையாடியும் கடலில் ஆயாசமாகக் குளித்தும் களித்தும் கிடந்தார்கள். அந்தக் கடற்கரையில் நாலு நாட்கள் எனக்கு நடப்பதும் நிற்பதும் சும்மா நடந்தமேனிக்குப் பார்ப்பதும்கூட பிடித்தமானதாகவே இருந்தது. ஆனால் ஆலுவா வீட்டில் தனித்துக் கிடந்த சேது பட்ட பாட்டைக்கூட விடுங்கள், அதில் அவனுக்குக் கடுமையான பணவிரயமும் மனஉளைச்சலும் உண்டாகியிருந்தது. கன பாடுபட்டுத்தான் அவன் அவனை அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறான் போலும்.

உண்மையில் இதில் தகவல் தொடர்பு இடர்பாடல்லாது எனது குற்றம் என்று எதுவும் இல்லை என்றாலும் இவ்விடயமாக அவனுக்குக் குற்றப்படுத்த இந்தக் கதையில் வேறு ஆட்கள் இல்லை என்பதுதான் துயரமானது. என்னையும் சேதுவையும் கடந்து இந்தக் கதையில் மூன்றாவதாக நாளை மறுநாளுக்குள் வர இருக்கிற நந்தனா ஒரு முக்கியமான பாத்திரமாக மாற இருக்கிறாள். அவளல்லாது இன்னொரு ஆட்டோக்காரனும் இருக்கிறான். அவளைப் பற்றி இப்போது எனக்கு அவளின் பெயரைத் தவிர வேறு எதுவும் தெரியாது என்பதால் அவள் வந்த பிறகு பார்க்கலாம். ஒரு பேரதிர்ஷ்டம் போலத் துவங்குகிற சில பிரயாணங்கள் சிலபல நேரங்களில் ஒரு கடுவா குதறிப்போட்ட நகர சாலைபோலத் துரதிர்ஷ்டமாக மாறிவிடுகின்றன.

நான் இந்த நகரத்துக்கு வந்த இரண்டாவது நாளிலேயே கண்டுபிடித்துத் தேடிவந்து என்னைச் சேது சந்தித்துவிட்டாலும்கூட ஆலுவா வீட்டிற்கு என்னை உடனடியாக அழைத்துக்கொண்டு வர முடியாத ஒரு விசித்திரச் சூழல் இருந்தது. அந்த விசித்திரச் சூழலைத்தான் நான் உலகப்பிரஸ்தி பெற்ற கதை என்று குறிப்பிட்டேன். சேது என்னைச் சந்தித்த அந்தச் சொற்ப நேரத்திலேயே பாம்பாட்டிக் கதை பற்றித்தான் பேசினான். எனது பெட்டியிலிருந்து நான் கதை குறித்த குறிப்புகள் அடங்கிய காகிதக்கட்டை எடுத்து வெளியே வைத்தபோது அதை அவன் தனது கைகளில் தூக்கிப் பார்த்தபோது அந்த முகத்தில் திருப்தியின்மையே மேலோங்கி இருந்ததை முகவாசிப்பின் மூலமாக என்னால் உணரமுடிந்தது. கதைகள் அடங்கிய குறிப்பு இருந்த காகிதங்களின் எடை அதிகபட்சமாகக் கால் கிலோவுக்குள் இருந்தது. ஆனால் சேதுவின் எதிர்பார்ப்பு ஒன்றரைக் கிலோவுக்கு மேலாக இருக்க வேண்டுமென இருந்திருப்பதை நான் பின்னர் புரிந்துகொண்டேன். ஆனாலும் அப்போதே அந்தத் திருப்தியின்மையின் மீது நான் சொல்லிக்கொண்ட வியாக்கியானங்கள் அவனைக் கொஞ்சம் சரிப்படுத்தியிருப்பதாக நம்பினேன்.


உண்மையில் பாம்பாட்டிக் கதை மிகச் சிறப்பானதொரு கதையும்கூட. நீயா படம் வந்து நீண்ட காலம் கடந்துவிட்ட நிலையில் இந்தப் பாம்பாட்டிக் கதை ஓரளவுக்குத் தமிழ்கூறும் நல்லுலகத்தில் ஒரு அதிர்வை உண்டு பண்ணும் சாத்தியமிருப்பதாக நானும்கூட நம்பியிருந்தேன். அந்த நம்பிக்கையின் பொருட்டுத்தான் ஆலுவா வீடு இருந்த இந்தப் புராதன நகரத்துக்கு நான் புறப்பட ஆயத்தமானது. எனக்கு என்மீதுள்ள நம்பிக்கையை விடுங்கள். ஒரு மனிதன் சுயமாக நம்பிக்கை கொள்வதில் என்ன அதிசயமிருக்கிறது. மேலிருந்து வெள்ளத்தைக் கொட்டினால் அது கீழே விழும் என்பதுபோலத்தானே. ஆனால் பாருங்கள் என்னைவிட சேதுவுக்குப் பாம்பாட்டிக் கதை விசயத்தில் என்மீது அதீத நம்பிக்கை இருந்தது. என்னால் முடியும் என்பது அவனின் அசாத்திய சிந்தனையில் பதிந்திருந்தது. ஆனால் பத்து பதினைந்தாவது நாளிலேயே அந்தச் சிந்தனை நம்பிக்கையெல்லாம்

சுக்குநூறாக உடைந்து நாங்கள் மிகப்பெரிய மன உடைவுக்கு ஆளாகியிருந்தோம். சேது திடீரென பணக்காரனாகியிருந்தான். எனவே அவன் பணக்காரனான விசயத்தை இவ்வுலகுக்குச் சாத்தியமான எல்லா வகையிலும் அவனுக்குச் சொல்லியாக வேண்டிய நிர்பந்தமிருந்தது.

ஆலுவா வீட்டைப் பற்றிய விபரத்தைச் சொல்லிவிடுகிறேன். வீட்டில் இரண்டு பெரிய படுக்கை அறைகள். முன்பக்கம் ஹாலும் அதனை ஒட்டிப் பின்பக்கமான பார்வை கொண்ட ஒரு சின்ன பால்கனி. பால்கனியின் ஓரத்திலேயே வெளியாட்கள் பயன்படுத்தவென ஒரு கழிப்பறை இருந்தது. ஹாலுக்கும் படுக்கை அறைக்கும் நடுவே கிச்சனிருந்தது. இதுதான் ஆலுவா வீட்டின் வித்தியாசமான அமைப்பாக இருந்தது. இரண்டாவது மாடி என்பதால் அந்த வீட்டிலிருந்து மூன்று திசைகளில் பார்வை தெரிந்தது. கிழக்கே பரந்து விரிந்துகிடந்த ஒரு அழகான காயலும் அதனை ஒட்டி ஒரு அழகான சாலையும் இருந்தது. இதனை முன்பு பார்த்த ஒரு அலவலாதி சாதிவெறி பிடித்த புலவன், வெள்ளை வெளேரென இருக்கும் இடையை அகலமாக வெளிக்காட்டி புடவையைக் கட்டிக்கொண்ட பிராயபூர்த்தியானவள் நல்ல வனப்பாக படுத்துக்கிடப்பது போல இருப்பதாகச் சொல்லியிருக்கிறான்.

வடக்குப் பக்கமாக ஒரு தொன்மையான சர்ச் இருந்தது. சந்தனக் கலரில் வர்ணம் பூசப்பட்ட அதன் காம்பவுண்ட் சுவரில் தொங்கிய பாதகையில் "கர்த்தாவே அந்தத் திரைக்குப் பின்னாலிருந்த பாவிகளை உண்மையான கொலை வெறியர்களை நீரே அறிவீர். அவர்கள் இங்கே சொகுசாகச் சுற்றுகிறார்கள். அந்த அநியாயக்காரர்கள் சுயநல ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அவர்களை நீர் பொதுவில் அடையாளம் காட்டுவீராக. நாங்கள் யாரை நம்புவது என்பதை நாங்கள் இன்னும் அறிந்திருக்கவில்லை." நான் அந்த பாதகையின் செய்திகளைப் பலமுறை வாசித்தும் எனக்கு எதுவும் பிடி கிடைக்கவில்லை. தெற்குப் பக்கம் நல்ல வாழைமரமும் தென்னைமரமும் நிறைந்த தோட்டமாக இருந்தது.

காட்சி இன்பத்துக்கு யாதொரு குறையுமில்லாத அந்த வீட்டைச் சேது மிகக் குறைந்த விலையில் வாங்கியிருப்பதாகப் பேச்சின் சாரத்தில் புரியமுடிந்தது. முதலில் நான் ஒரு அறையிலும் அவர் ஒரு அறையிலும் இருப்பதாக முடிவாகியிருந்தது. ஆனால் நான் ஆலுவா வீட்டிற்கு வந்த முதல் நாளின் மாலை கடந்தபிறகு அந்தத் திட்டத்தைக் கைவிட்டுச் சேதுவோடு அந்த அறையிலேயே தங்கிக்கொள்வதென முடிவு செய்தேன். முன்பின் தெரியாத அல்லது நேரில் நிறைய பழகியிராத அல்லது வெளியே அதிகமாகப் பழகிய நண்பர்களாக இருந்தாலும் கூட மனிதர்களோடு ஒரு அறையில் அதிகபட்சமாக மூன்று நாட்களுக்கு மேல் தங்குவது நல்ல விசயமல்ல என்பதும் எனக்கு ஆலுவா வீட்டில்தான் போத்தியப்பட்டது.



முதல் நாள் இரவில் நேரம் பதினொன்று கடந்த பிறகு படுக்கையில் சேதுவும் நான் பக்கவாட்டில் கீழே பாய் விரித்தும் கிடந்தபோது வீடு பற்றிய பேச்சில் "நாம் படுத்திருக்கும் இந்த அறையில் ஒருவர் தற்கொலை செய்திருக்கிறார்" என்றபோது நான் எழுந்து சுவரோடு சாய்ந்து உட்கார்ந்துவிட்டேன்.

"பயப்பட வேண்டாம். இதனடிப்படையில்தான் இந்த வீடு எனக்குக் குறைவான விலையில் கிடைத்தது."

"இறந்தது யார்?"

"இதற்கு முன்னால் இந்த வீட்டை விலைக்கு வாங்கியிருந்த முதலாளி.."

"இதை ஏன் நீங்கள் முதலிலேயே சொல்லவில்லை?"

"முதலிலேயே என்றால் எப்போது..."


"நான் இந்த வீட்டுக்கு வரும் முன்னால்.. நாம் கதை எழுதுவதற்குத் திட்டமிட்டபோது.."

"எனக்கே நேற்றுத்தான் தெரியும்... நீங்கள் பயப்படுகிறீர்களா..? உங்களுக்குப் பயம் உண்டுமா..? எழுத்தாளர்கள் பயப்படமாட்டார்களே..."

"எழுத்தாளர்கள் பயப்படமாட்டார்கள் என்று எவன் சொன்னது... சரி விடுங்கள் அந்த முதலாளி எப்படி தற்கொலை செய்தார்.."

“இதோ நம் தலைக்கு மேலாகச் சுற்றுகிறதே இந்த மின்விசிறியில் தூக்கிட்டு..”

ஆலுவா வீட்டில் எங்கள் தலைக்கு மேலாகச் சடலம் மின்விசிறியில் சுற்றுகிறது. இனி இவனுக்குக் கதை எழுதினால் போலத்தான். ஒரு எழுத்தாளனுக்குக் கதை மூத்திரம் போல இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை அடித்து வெளியே வரும் என்ற நம்பிக்கை போல. அவன் அப்படித்தான் பேசுகிறான். எனக்கு லேசான பயத்தில் சிறுநீர் கழிக்க வேண்டும்போல இருந்தது. வீட்டைக் கட்டிய மடையன் அந்த அறையிலேயே ஒரு அட்டாச் பாத்ரூம் வைத்துத் தொலைத்திருக்கலாம். இரண்டு அறைக்கும் பொதுவாக வெளியே இருந்தது. நான் இப்போது எழுந்துபோனால் மின்விசிறியில் தொங்கிக்கிடக்கும் சடலமும் கூடவே வரும். இதற்குப் பயந்து இனி மூத்திரம் பெய்யாமலும் இருக்க முடியாது. எனக்கொரு ஐடியா தோன்றியது. அதன்படி வெளியே ஹாலில் சார்ஜரில் கிடந்த அவனின் போனுக்கு ஒரு அழைப்பைத் தட்டிவிட்டேன். அழைப்புச் சத்தம் கேட்டதும் அவன் வேகமாக எழுந்து போனான். பின்னாலேயே நானும் போய் பாத்ரூமில் நுழைந்துகொண்டேன். சேது போனைப் பார்த்துவிட்டு பாத்ரூம் வாசலிலேயே நின்றுகொண்டிருந்தான். நான் மூத்திரம் பெய்துவிட்டு வெளியே வந்தபோது அவன் போனில் யாரிடமோ பேசிக்கொண்டிருந்தான். பேசிவிட்டு அறைக்குள் வந்த அவன் நான் மிஸ்டுகால் அடித்ததைப் பற்றி எதுவும் கேட்கவில்லை.



அவன்தான் சொன்னான்.. ‘நந்தனா பேசினாள் காலை பத்து மணிக்கு வருவாளாம்...’

“எந்த நந்தனா..”

“டைப் பண்ணுவதற்காக வரக்கூடிய பெண்..”

“என்ன வயசுக்காரி..”

“ஒரு இருபத்தி ஏழு... இருபத்தி எட்டு இருக்கும்...”

“கல்யாணமானவளா...”

“இல்லை என்றுதான் சௌந்தரராஜன் சொன்னான்.”

இருவரும் கொஞ்ச நேரம் அமைதியாகப் படுத்த மேனிக்கே கிடந்தோம். பழைய முதலாளி மின்விசிறியில் கையையும் காலையும் அடித்துக்கொண்டு நாக்குத் தள்ள தொங்கிக்கிடக்கிறான். நான் வெறித்தபடி சேதுவிடம் “பேசாமல் நாம் திட்டமிட்ட கதையை கைவிட்டுவிட்டு அறையில் தூக்குப்போடும் ஒருவனின் கதையை எழுதுவோமா... ஒருவன் தூக்கிடும் முன்னால் என்னவெல்லாம் யோசித்திருப்பான்... அவனுக்கு எவ்வளவு பிரச்சனைகள் இருந்திருக்கும் அவன் மனம் என்ன பாடுபட்டிருக்கும்...”

உண்மையில் நான் சேதுவிடம் உருக்கமாகவே இதைப் பேசிக்கொண்டிருந்தேன். எல்லாவற்றையும் சிரத்தையாகக் கேட்டுவிட்டு “வேண்டாம்... நீங்கள் முதலில் சொன்ன... கள்ளக்காதலியை மாலத்தீவுக்குக் கடத்திக்கொண்டு போகும் அந்தப் புகைப்படக் கலைஞனின் கதையை எழுதினால் போதுமானது...” என்றான்.

எனக்கு உண்மையில் அவனோடு உரையாட விருப்பமில்லை. யோசிக்கத்தான் விருப்பம். ஆனால் மின்விசிறியில் தொங்கும் முகம் தெரியாத பழைய முதலாளியின் சடலத்தை என்னால் பார்க்க இயலவில்லை. எனவே இவனோடு எதாவது கிறுக்குத்தனமாகப் பேசிக்கொண்டே தூங்கினால் கொள்ளாம் என்றுதான் பேசுகிறேன். திட்டம் பலிக்கிறது. சேது பேசிக்கொண்டிருக்கும்போதே நான் மெல்லத் தூங்கிப்போனேன்.

நள்ளிரவில் எனக்கொரு கனவு. அப்போது எனக்குக் கனவென்று தெரியாது. இந்தக் கதையை இப்போது எழுதுவதால் அதனைக் கனவென்று சொல்லியே துவங்குகிறேன். நள்ளிரவில் ஆலுவா வீட்டின் பழைய முதலாளி மின்விசிறியிலிருந்த கயிறிலிருந்து வெளிச்சாடி வந்து தலைமாட்டில் அமர்ந்திருந்தான். நான் முதலில் சேது சொன்னதன் அடிப்படையில் அவன் முதலாளியாக இருந்ததால் குடைவயிறு சாடி வயோதிகனாக இருப்பான் என்று கருதியது பிழையாகப் போயிருந்தது. அவன்

சிறுப்பக்காரனாக இருந்தான். நானும் அவனும் ஹாலில் கிடந்த நல்ல உயர்தரமான இருக்கையிலிருந்து பேசினோம். எனக்கு ம்ம்ம் மட்டுந்தான் வருகிறது. பேச்சு சுத்தமாக வரவில்லை. நான் இடையில் ஒருமுறை இருக்கையிலிருந்து எழுந்து படுக்கை அறைக்கதவைத் தள்ளியபடி நான் உள்ளே படுத்திருக்கிறேனா என்று உறுதிப்பாட்டுக்காய்ப் பார்த்தேன். நல்லவேளையாக நான் சிறப்பாக அசந்து தூங்கித்தான் கிடந்தேன். அறைக்கதவை மெல்ல ஒலி எதுவும் வராதவண்ணம் அடைத்துக்கொண்டு பூனையைப் போல நடந்து மறுபடியும் இருக்கைக்கு வந்து தூக்கு கயிறிலிருந்து இறங்கி வந்திருந்த ஆலுவா வீட்டின் பழைய முதலாளி முன்பாக அமர்ந்துகொண்டேன்.

முதலாளி தலையில் சுற்றிலுமா நல்ல உறுமாகட்டுக்கட்டி, உறுமாவின் குஞ்சலத்தைத் தலையின் இடதுபக்கமாகத் தொங்கவிட்டபடி வெள்ளை நிறத்தில் ஒரு சுருட்டைப் புகைத்தபடி பேசினார். வழக்கமாக ஒரு சுருட்டிலிருந்து வெளிப்படும் புகையைவிட அதிக மடங்காகப் புகை வெளியேறியது. அவர் பேச்சு கதையாக இருந்தது.

தபேலா ஒழுங்கமைவு செய்யும் அந்தக் கடை ஆலுவா வீட்டின் மேற்குப்பக்கம் படர்ந்திருந்த காயலைப்போல வடிவம் கொண்ட ஒரு காயலின் கரையோரம் பூந்தொட்டிகள் தொங்கவிடப்பட்ட ஓரிடத்திலிருந்தது. அவர் சுருக்கமாக அந்தக் காதல் கதையைச் சொன்னார். தபேலா ஒழுங்கு செய்யும் பத்தொன்பது வயதான சாரங்கியை, அதே பத்தொன்பது வயது கொண்ட கொட்டாரத்து வீட்டில் சுந்தரி விரும்பினாள். சாரங்கிக்கு வெளுத்த மெலிந்த தேகம். தலையில் முடி அடுக்கடுக்காய் வளர்ந்து கிடந்தது. அவன் தலையைச் சிலுப்பினான் என்றால் ஒரு சிங்கத்தைப் போலத் தென்படுவான். சுந்தரி அவனோடு முயங்க விரும்பினாள். அவள் சாடை செய்தாள். இந்த உலகில் வெல்லும் ஒரே சாடை பெண்களுடையதுதான். கொட்டாரத்தில் நள்ளிரவில் புகுந்த சிங்கம் தன் தலைமுடியைச் சிலுப்பிக்கொண்டு புலரும்வரை சுந்தரியைப் புணரும். சுந்தரிக்கு இதற்கு முன்பாக தன்னைப் புணர்ந்தவன் எவனைப் போலவும் இல்லாமல் சாரங்கியின் விசித்திரப் புணர்ச்சியில் மயக்கம் கூடியது.

முதலாளி சுருட்டை இழுத்துக்கொண்டார். ஆலுவா வீடு புகையால் நிரம்பியது. புணர்ச்சி மயக்கம் தீராத சுந்தரிக்கு சாரங்கி மீது காதல் அரும்பியது. சுந்தரி எப்படி இருப்பாள் என்று நான் கேள்வி கேட்க விரும்பியபோது முதலாளி வெறும் கையால் அவளை வரைந்து காட்டினார். பழைய ஓவியத்தில் பார்த்த முகம்போல அவள் அழகாக இருந்தாள். அவள் சாரங்கியை மணமுடிக்க விரும்பியதைத் தனது சகோதரர்களிடத்தில் சொன்னாள். சகோதரர்கள் நாலு பேரும் கூடிப் பேசி ஒரு சகோதரனிடம் முடிவை எடுத்துக்கொள்ளும்படி விட்டுவிட்டார்கள். அவன் சுந்தரியின் இருப்பிடம் நோக்கிப் போய் அவளுக்கு மகிழ்வாக இனிப்பூட்டி வாழ்த்து சொன்னான். சுந்தரி சகோதரனிடம் ஆசிபெற குனியுமுன்னாலேயே சுருண்டு விழுந்து செத்தாள். அவள் செத்த செய்தி கொட்டாரத்திலிருந்து வெளியேறவில்லை. சமிக்கையும் சாடையும் கொட்டாரத்தின் மாடத்திலிருந்து வராது அலைந்து திரிந்த சாரங்கியைப் பதினோராவது நாள் இந்த ஆலுவா வீடு இருக்கும் இடத்தில் நின்ற பெருமரத்தில் கட்டித் தொங்கவிட்டார்கள். அவன்தான் இப்போது மின்விறியில் கிடந்து ஆடுகிறான்.

உறுமா கெட்டுக்காரன் சுருட்டைப் புகைத்தபடி என்னை மிக நெருக்கத்தில் பார்க்க நெருங்கினான். சொப்பனத்திலிருந்து விடுபட்டு நான் வேகமாக எழுந்துவிட்டாலும் பயத்தால் மின்விசிறியைப் பார்க்காமல் நன்றாக மூடியபடி கிடக்கிறேன். கிட்டத்தட்ட விடியும் நேரமாக இருந்தது.

சேது எழும்பி ஹாலுக்குப் போய் வந்தவன் "வீடு முழுவதும் புகை நாற்றமாக இருக்கிறது... நீங்கள் ஹாலிலிருந்து தம் என்னமும் அடித்தீர்களா?" என்றான்.

"இல்லை.. நான் புகைப்பழக்கத்தை விட்டு பல ஆண்டுகளாகிவிட்டது..."

சேது எல்லா ஜன்னல்களையும் திறந்துவிட்டான். வெளிக்காற்று வீட்டுக்குள்

வந்து மெல்ல மெல்லப் புகை நாற்றம் விலகிக்கொண்டிருந்தது. நான் படுக்கையில் நீண்ட நேரமாக எழுந்து அப்படியே அமர்ந்திருந்தேன். எழுதியிருந்த காகிதங்கள் சிதறிக் கிடந்தன. சுந்தரியை சாரங்கி கொட்டாரத்தில் புணர்ந்துகொண்டிருக்கிறான். சிங்கத்தின் சிலுப்புதலைப் போன்ற சாரங்கியின் தலைமுடியை ஆக்ரோசமாகப் பிடித்து அங்குமிங்குமாக அலைத்துக்கொண்டே உயிர் பிரியப்போகும் நாட்டுச் சேவல் போல அவள் பிடைக்கிறாள். எல்லாம் காட்சியாக ஓடிக்கொண்டிருக்கிறது. நினைக்கவும் முடியாமல் அதை விட்டு விலகவும் முடியாத விசித்திரமான காட்சியாகக் கிடந்து குழப்புகிறது. நான் படுக்கையில் நட்சத்திரத்தின் வடிவில் புரண்டுகொண்டு கிடந்தபடியே டீ கொண்டுவந்த சேதுவிடம் கேட்டேன்.. "உனக்கு சாரங்கியை தெரியுமா...?"

"சாரங்கியா யார் அது.."

"அவன்தான் இந்த ஆலுவா வீடு வீடாகும் முன்னால் இங்கிருந்த மரத்தில் முதலில் தூக்குப் போட்டுச் செத்தவன்... அல்லது கொலை செய்யப்பட்டுக் கட்டித் தொங்கவிடப்பட்டவன்..."

"கதையை இப்படியா துவங்கப் போகிறாய்.."

"இது கதை இல்லை... நேற்று நள்ளிரவில் சாரங்கி இங்கு வந்தான்... ஹாலிலிருந்து சுருட்டு பிடித்தபடி புகைவிட்டுக்கொண்டே பேசினான்..."

"என்ன பேசினான்.." சேதுவின் குரலில் பரிகாசமிருந்தது.

"கேலி வேண்டாம்... வந்த சாரங்கி சுந்தரியை அபரிமிதமாகக் கொட்டாரத்தில் வைத்தே புணர்ந்ததாகச் சொன்னான்.."

"எந்த சுந்தரி.."

இவனுக்கு ஒரு கதையும் தெரியாது போலிருக்கிறது என்கிற யோசனையோடு நான் மௌனமாக ஒரு ஆசன இருப்பிலிருந்தேன்.

சேது தனது போனிலிருந்து ஒரு புகைப்படத்தைக் காட்டினான்.. "இவர்தான் ஆலுவா வீட்டின் பழைய முதலாளி. முன்பு இங்கு தூக்குப்போட்டுச் செத்தவர் இவர்தான். இவர் சுருட்டு பிடிப்பார்.. நேற்று ஹாலில் இருந்தது இவரா..."

"இல்லை அவன் பிராயக்காரன்..."

சேது பால்கனியில் போய் ஒரு சுற்றுப் பார்த்துவிட்டு தலையைச் சொறிந்தபடியே வந்து.. "சரி டீயைக் குடித்துவிட்டு ரெடியாகி இருங்கள். ஒன்பது ஒன்பதரைக்கு நந்தனா வந்துவிடுவாள்.. நீங்கள் அவள் அருகில் போய் இருக்கக்கூடாது... நீங்கள் பேப்பர்களைக் கொடுத்துவிட்டு இங்கேயே ஹாலில் இருந்து எழுதிக்கொண்டால் போதும்... நந்தனாவோடு ரொம்ப ஒட்ட வேண்டாம்..." என்றான்.

நான் அவனை ஓரளவுக்குக் கோபமாகத்தான் பார்த்தேன். அவன் என்னை அவமானப்படுத்துவதுபோலப் பேசுகிறான். நான் வரக்கூடியவளோடு ஒட்டி என்ன செய்யப்போகிறேன். இதன் நிமித்தமாக எனக்குள் மெல்லிய குசும்பு முளைத்தது. வரக்கூடியவளை மையமாக வைத்து ஆலுவா வீட்டில் இவனை எரிச்சல் பட வைக்கலாம், அந்த விளையாட்டும் அழகானதுதான்.

நான் வேகமாகக் கதை எழுதிய காகிதங்களின் முதல் பக்கத்தில் திருத்தம் செய்தேன். ரசம் சொட்டச் சொட்ட காதலில் விழுந்து புரளும் மோகச் சொற்களை இட்டு நிரப்பினேன். அவள் முதல் பக்கத்தைத் தட்டச்சு செய்யும்போதே சேதுவைக் கொதிக்கவிடலாம் எனக் கருதினேன்.

நாங்கள் வேகவேகமாகக் குளித்து முடித்து உடுத்துக் காத்திருந்தோம் ஒன்பதரை மணிக்காக. சேது என்னிலும் பிராயத்தில் இளைஞன். அவன் அசாத்தியமான உடையணிந்திருந்தான். மேலும் அவன் பணக்காரன் என்பதால் அதன் பவிசுகளையும் தன்னுள் நிரப்பியிருந்தான். நான் மூட்டாத கைலியை ஒரு தினுசாகக் கட்டியிருந்தேன். போறாதகுறைக்குக் கையில்லாத நீல பனியனும். சேது என்னைப் பார்த்துப் பார்த்துக் கொதிக்கிறான். அவன் கொதிக்கிறான் என்பதை நான் உணரும் தருணம் அவ்வளவு குஜாலாக இருந்தது.

சேது ஒரு கட்டத்தில் கேட்டேவிட்டான்.. "நீங்கள் பேன்று அணியலாமே... கைலியை இப்படிக் கட்டிக்கொண்டு, இந்த அறைக்கு ஒரு பெண் வருகிற நிலையில் நீங்கள்

தொடை தெரிய அமர்ந்திருப்பது அழகாகவா இருக்கும்...”

“இல்லை அவள் இங்கு வரும்போது நான் கொக்காமடியை அவிழ்த்துத் தொடையை மறைத்துக்கொள்வேன்... போதும்தானே” என்று நான் சொல்லும்போதே காலிங்பெல் அடித்துச் சத்தம் கேட்டது. நான் முதலில் சொன்னதுபோலவே எனது கைலியைச் சரி செய்துகொண்டேன். சேது வேகமாக வாசனைதிரவியப் போத்தலை ஒரு அமுக்கு அமுக்கிவிட்டு வாசல் கதவைத் திறந்தான். நந்தனா நின்றிருந்தாள். நேற்று சாரங்கி கனவில் வரைந்த கொட்டாரத்துச் சுந்தரி போலத் தலையின் பக்கவாட்டில் கோழிக்கொண்டைப் பூ வைத்துச் செமையாக இருந்தாள். நான் அவளைப் பார்க்காதவன் போலத் தலையைக் குனிந்தவாறு எனது காகிதத்தில் மூழ்கியிருந்தேன். சேது இரண்டு முறை என்னை அழைத்தபோதுதான் நிமிர்ந்தேன். நந்தனாவை அறிமுகப்படுத்தினான். அவள் புடவையை இடுப்புக்குக் கீழாகத் தாழ்த்தி உடுத்து மறைத்திருந்தாள். நான் மெலிதாகப் புன்னகைத்துக்கொண்டேன்.

ஆலுவா வீட்டில் நான் நந்தனாவை வன்புணர்வு செய்வதற்காக வந்திருப்பவன் என்றும் அதிலிருந்து அவளைக் காக்கப் பிறந்தவன் போல சேது அவனைக் கருதியமையால் அன்று அவன் எங்கேயும் நகரவில்லை. கணினியில் அவள் தட்டச்சு செய்தாள். சந்தேகங்களுக்கு சேதுவே அவள் அருகே ஓடிப்போனான். அவனால் அதனை நிவர்த்தி செய்ய இயலவில்லை என்றால் என் அருகே வந்து சரி செய்துகொண்டு அவளிடம் அவனே போனான். சேது மதியம் சாப்பாடு வாங்கவும் வெளியே போகவில்லை. யாரிடமோ போனில் சொல்லி அவன் எதையோ வாங்கிவர அதையும் வாசலில் நின்று வாங்கியபடி அவனையும் உள்ளே விடவில்லை.

இடையில் நான் அறையில் வந்து ஒருமணி நேரம் தூங்கிக்கொண்டேன். மின்விசிறியில் இப்போது சேது போனில் காட்டிய புகைப்படத்திலிருந்த பழைய முதலாளி சாவகாசமாக அமர்ந்து சுருட்டு பிடித்தபடி எதையோ வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தான்.

சேது கிட்டத்தட்ட அல்லது பெருமளவில் தனது இயல்பைத் தொலைத்துவிட்டான் என்றுதான் கருதுகிறேன். நான் கதையை மாற்றிப்பிடித்துப் பார்த்தேன். ஆலுவா வீட்டில் ஒரு பெண் வந்து சேர்ந்தபோது அங்கிருந்த இரண்டு ஆண்கள் என்னவானார்கள் என்பதுதான் கதை.

நந்தனாவின் முகத்தைப் பார்த்தால் அவளிடம் இந்த இரண்டு ஆண்களைக் குறித்தும் ஒரு எட்டுக்கால் பூச்சியின் அளவுக்குகூட பதட்டமில்லை. அவள் கணினித்திரையில் அவள் போக்கில் அச்சு பதித்துக்கொண்டிருந்தாள். மாலை ஆறுமணிக்கு அவள் விடைபெறுவதாக இருந்தது. நான் மீண்டும் நாலுமணிக்கே நல்ல நேர்த்தியான உடையணிந்து ஹாலுக்கு வந்துவிட்டேன். காலையிலிருந்தே என்னைக் கைலியோடு பார்த்த நந்தனா இப்போது என்னைக் கவனித்துவிட்டு “சார் நீங்க சின்னப் பைய்யனைப் போல இருக்கீங்கள்” என்றதும் சேது எனக்கு ஐம்பது வயது கடந்துவிட்டதாகச் சொன்னதும் நான் உடனடியாக மறுத்து நாற்பத்தி ஒன்பது என்றேன். உண்மையில் சேதுவுக்கு முப்பத்தி ஐந்து வயதுதான். ஆனால் அவன் அவனின் பதட்டத்தின்படி அறுபது வயதுக்காரனாக இருந்தான்.

சரி.. அவள் விடைபெறும்போது நடந்த இன்னொரு விசயம். அவளை ஆட்டோவில் அனுப்பிவைக்க சேது தீர்மானித்திருந்தான். அதுபோலவே அவளுக்கு நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் என்பதையும் நாள் ஒன்றுக்கு நாலாயிரம் என்று உயர்த்தியிருந்தான். இதுபோக போனஸ் பத்தாயிரம் வழங்க இருப்பதாகச் சொன்னான். எனக்குத் தெரிந்து இவ்வுலகில் ஒருவார வேலைக்குப் பத்தாயிரம் போனஸ் வழங்கும் பெரிய மனசு சேதுக்கு மட்டுமே வாய்க்கப்பெற்றிருந்தது. கூடுதலாக தானும் ஆலுவா வீட்டிலிருந்து அருகிலுள்ள பெருநகரத்துக்குச் செல்ல வேண்டியதிருப்பதால் அதே ஆட்டோவில் நகரின் ஒருபகுதி வரை வருவதாகச் சொன்னான். அவள் மறுப்பொன்றும் சொல்லவில்லை. எனக்குத்தான் பயமாக இருந்தது. இவன் இவளோடு ஆட்டோவில் போய்விட்டான் என்றால் ஆலுவா வீட்டில் எப்படி தனியாக

இருப்பது, சரி பயத்தைக் காட்டக்கூடாது. இந்தக் காயல் கரையோரமாக நீண்ட நடை நடந்துவரலாம் எனத் திட்டமிட்டுக்கொண்டு அவர்கள் புறப்படும் முன்னர் நான் நடக்க இருப்பதாக வெளியேறப்போனேன். அப்போதுதான் சேது "நீங்களும் எங்களோடுதான் வருகிறீர்கள்" என்றான்.

நாங்கள் காயல் கரையில் நின்றிருந்தபோது வந்த ஆட்டோவில் முதலில் நந்தனாவை ஏற்றிவிட்டுப் பின்னர் சேது ஏறிக்கொண்டு தன்னருகே நந்தனா இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ளலாம் என அவன் திட்டமிட்டிருப்பான் போல. அவசரத்தில் கை அண்டாவில் கூட நுழையாது. பட்டெனத் திட்டமிடாமல் நடந்த சிறுகுழப்பத்தில் நந்தனா முதலில் ஏறிக்கொண்டு சார் வாங்க என என்னை அழைக்க நான் அவள் அருகே பின்னர் என் அருகே சேது அமர்ந்துகொண்ட அந்த ஆட்டோ பயணம் சேதுவைக் கொதிக்கவைத்திருந்தது.

ஆட்டோ டிரைவர் சம்பந்தமே இல்லாமல் பழைய ஒரு துப்பாக்கிச் சூடு சம்பவத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். ஆட்டோவில் சுருட்டு வாசனை பரவியிருந்தது. அவன் ஆட்டோவைக் காயல் கடந்ததும் ஒரு சாதாரணச் சாலையில் ஓட்டி முடுக்கு முடுக்காகச் சுற்றி நீண்ட நேரத்துக்குப் பிறகு மெயின் ரோட்டில் பயணித்தான். ஆட்டோவின் கடமுடா சத்தத்தைவிட அவனின் பேச்சுச் சத்தம் ரொம்பவும் கடமுடாவாக இருந்தது. அவன் மீண்டும் சம்பந்தமில்லாமல் ஒரு கொலை சம்பவத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். சுருட்டுப் புகையின் நாற்றம் மேலும் மேலும் நெருக்கமாக இருந்தது. நான் சேதுவிடம் சுருட்டு வாசனை வருவதாகச் சொல்லியதை அவன் பொருட்படுத்தாமல் ஆட்டோக்காரன் பேசுவதைக் கேட்டபடி இருந்தான். ஒரு பெரிய நகரில் தினசரி எத்தனை கொலை நடக்கிறது தெரியுமா என்று கேட்டவன் பிறகு கேள்வியை மாற்றினான்.. "ஒரு பெரிய நகரில் நாள் ஒன்றுக்கு எத்தனை கொலைகள் நடக்கும் என்று நினைக்கிறீங்க..."

"தெரியவில்லையே.."

"சும்மா ஒரு ஊகமாகச் சொல்லுங்கள்... சரி நானே சொல்கிறேன்... நேற்று இந்த நகரில் பல்வேறுபட்ட இடங்களில் பல காரணங்களில் பதினைந்து கொலைகள் நடந்துள்ளன... அதில் நான்கு கொலைகளில் குற்றவாளிகளே சரணடைந்திருக்கிறார்கள்... மற்றபடி பதினோரு கொலைகளில் ஒன்றும் துப்புத் துலங்கவில்லை... பாதி இழுக்கப்பட்ட ஒரு வெள்ளை சுருட்டு மட்டும் ஓரிடத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள்..."

நான் நந்தனாவின் காதில் மெல்லமாகக் கேட்டேன்... "இந்த ஆட்டோக்காரன் சிஐடியாக இருப்பானோ..."

அவள் கிசுகிசுப்பான குரலில் என்னிடம் பதில் உரையாடியது சேதுவுக்குப் பிடிக்கவில்லை போலும். அவன் ஆட்டோவை ஓரமாக நிறுத்தச் சொல்லிவிட்டு என்னையும் இழுத்துக்கொண்டு இறங்கி எதிரிலுள்ள வணிகவளாகத்துக்கு அழைத்துக்கொண்டு போனான். நான் ஒரு நகரில் நடைபெறும் மாறுபட்ட பதினைந்து கொலைகளைப் பற்றிய கதையாக அமைக்கலாமா என்றேன். அவன் எதுவும் பேசாமல் மௌனமாக முன்னே நடந்துகொண்டிருந்தான்.

ஆலுவா வீட்டில் இரண்டாவது இரவில் நான் கொஞ்சம் தீவிரமாக எழுதிக்கொண்டிருந்தேன். சேது யாரோ ஒரு பெண்ணோடு போனில் பேசிக்கொண்டிருந்தான். அவன் யாரிடம் வேண்டுமானாலும் பேசித் தொலையட்டும், இவ்வறையிலிருந்து வெளியே போகாமலிருந்தால் போதும். நான் எக்காரணம் கொண்டும் மின்விசிறியைப் பார்ப்பதில்லை, எந்த வெளி வாசனையையும் கிரகிப்பதில்லை. சுருட்டாவது மயிராவது. இரவைக் கடத்திவிட வேண்டும். காலையில் நந்தனா வந்தால் பொழுது போய்விடும். எனக்குத் திடீரென ஒரு யோசனை வந்தது. நந்தனாவை இந்த ஒரு வாரத்துக்குக் காதலிக்கலாமா... அவளோடு காதல் வசனங்களைப் பேசி.. நன்றாகவே இருக்கும். அவள் இன்றைய பகல் பொழுதில் அண்ணா என்று அழைக்கவில்லை. மாறாக சார் என்றுதான் அழைத்துக்கொண்டாள். திடீரென நானும் நந்தனாவும் அவள் ஒரு நவரச நாடகம் ஆனந்த கலைகளின் ஓவியம் பாடலில் ஆடிக்கொண்டிருந்தோம். சேது போனில் சத்தமாகச் சிரித்துக்கொண்டே

என்னைப் பார்த்தான். அந்தப் பார்வை நான் என்ன சிரிப்பு என்று கேட்க வேண்டும் என்பதாக இருந்தது. நான் மயிரா கேட்பேன். அசங்கவில்லை. பொறுமையிழந்து அவனே சொன்னான்.. "நந்தனாதான் போனில்... அவள் பேச்சு சாயலைப் பார்த்தால் என் மீது காதல் கொள்கிறாள் போலிருக்கிறது..."

"அப்படியா.."

"அப்படித்தான்.."

"காதலித்துக் கல்யாணம் பண்ணப்போறீயா..."

"காதலித்தால் கல்யாணம் பண்ண வேண்டும் என்று சட்டம் இருக்கா..."

"அப்போ அவள அனுபவிச்சிட்டு விட்டுறலாம்னு பாக்குறியா.."

"ஒரு பொண்ண அனுபவிக்கது... இது மாதிரி சில்லரத்தனமெல்லாம் எனக்குக் கிடையாது... அவள நான் விரும்புவேன்... அவள்ட்ட பேசிட்டு இருப்பேன்.. அவள பாத்துட்டுருப்பேன்...."

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வில் மூன்று முறை மனநோய் தீவிரமாக வருகிறது. அனேகமாக இது சேதுவுக்கு இரண்டாம் பைத்தியமாக இருக்கலாம். நான் மேற்கொண்டு எதுவும் பேசாமல் எனது மூன்றாம் பைத்தியத்தை மறைத்துக்கொண்டேன். பைத்தியமும் ஒரு வகையில் அழகானதுதான். எனவே இரண்டாம் இரவில் சுருட்டு புகைப்பவன் வரவில்லை.

இரண்டாவது நாள் நந்தனா ஆலுவா வீட்டுக்கு அதே ஆட்டோவில் வந்தாள். சேதுதான் அந்த ஆட்டோ ஓட்டுநரிடம் இரவோடு இரவாகப் பேசி அவளைக் காலையில் பூப்போல இங்கு கொண்டு விடுவதும் மாலையில் இங்கிருந்து பிக்கப் பண்ணி அவள் வீட்டில் கொண்டு விடுவதுமாக ஒரு வார ஒப்பந்தம் செய்திருக்கிறான். ஆட்டோக்காரன் கேட்ட தொகையைவிட ஒன்றரை மடங்கு தொகை இரட்டிப்பாகத் தருவதாக சேது ஒப்புக்கொண்டிருந்தான். இரண்டாம் நாள் காலையில் நந்தனா வரும்போது கோழிக்கொண்டைப் பூ சூடாமல் நாலிலை இனுக்கு கொண்ட ஒரு பிளாஸ்டிக் ரோஜாவைச் சூடியிருந்தாள்.

ஒரு பெண் பார்த்த இரண்டாவது நாளிலேயே பேரழகு குடிகொண்டவளாக மாறுவதெப்படி என்பதற்கான அடையாளமாக நந்தனாவைக் குறிப்பிடலாம். நேற்றைய ஓர் இரவில் என்ன மாயம் நிகழ்ந்திருக்கும். தனிமை வாய்ந்த ஆலுவா வீட்டில் இரண்டு ஆண்கள் தன்மீது போட்டிப்போட்டு பரிசுத்தமான அன்பை வாரி இறைக்கிறார்கள் என்பதை உணர்ந்த பூரிப்பில் பூத்துப் புளகாங்கிதப்பட்டுப் போயிருப்பாளா? இரண்டாம் நாளின் பகலில் சேது பலமுறை போன் பேசிக்கொள்வதற்காக எங்களைத் தனியே விட்டுவிட்டு வெளியேறிப்போயிருந்தான். போன் உரையாடல் அவனின் வியாபார இரகசியங்களைக் கொண்டிருந்ததால் அவனின் ஆத்ம காதலைக் காட்டிலும் விலைமதிப்புடையதாக இருந்திருக்கும். நேற்று போல இன்று இல்லை. நான் பைத்தியத்தின் மூன்றாம் கட்டமென்பதை இம்முறை சந்தேகமின்றி உணர்ந்திருந்தேன். இன்று எனக்கும் நந்தனாவுக்கும் இருக்கையும் சரி இதயமும் சரி நேற்று போலக் கூச்சமுடையதாக இல்லை. தட்டச்சுக்கு இடையில் உரையாடினோம்.

ஒவ்வொரு முறை போனுக்காக வெளியேறிப் போய்வரும்போதெல்லாம் சேது அவளுக்கு உலகின் ஆகச்சிறந்த பதார்த்தங்களைக் கொண்டு வந்தான். நான் அருகிலிருந்து ஊட்டாத குறைதான். ஒரு அசந்த இடைவெளியில் ஒலிவமரத்தின் எண்ணெயில் குழைந்த ஒரு கனியின் துண்டை அவளுக்கு ஊட்டும்படியாக இருந்தது. அவள் மறுப்பின்றி உண்டுவிட்டு "உங்களைப் போன்ற அன்பான நேசனின் தோள்களில் தலைசாய்ந்து கிடக்க ஒரு வரம் வேண்டும் சார் அவ்வளவுதான் வாழ்க்கை" என்றாள்.

"நான் நேசனெல்லாம் கிடையாது... உண்மையில் பிராயம் கூடியவன்..."

"பிராயமா... உங்களுக்கா... விளையாடாதீர்கள் சார்... நீங்கள் ரெடி என்றால் உங்களோடு ஓடி வந்து விடுவேன்.."

"உண்மையாகவா..."

"உண்மைதான்.." அவள் அழகாகக் கண்ணடித்தாள்.

சாரங்கி தூக்கில் தொங்கிக்கிடந்த மின்விசிறி என் தலையில் விழுந்து உடைந்து பனிக்கூழாய் என்னை நிறைக்கிறது. நல்லவேளை சேது அவளுக்குப் பழச்சாறு வாங்கிவர கீழே போயிருக்கிறான். இல்லை என்றால் அவன் ஆலுவா வீட்டின் பழைய முதலாளி போலத் தூக்கில் தொங்கியிருப்பான். மனிதர்களிடத்தில் வார்த்தைகள் எங்கிருந்து பிறக்கின்றன என்று தெரியவில்லை. அது இந்த இகலோகத்தில் கடலைவிடப் பெரிதாக இருக்கிறது. நான் இன்னொரு விசயத்தை ஆலுவா வீட்டில் கண்டுணர்ந்தேன், சேது இங்கிருக்கும்போது வராத சுருட்டுப் புகையின் மணம் அவன் வெளியேறிய சற்று நேரத்திலெல்லாம் என்னைச் சுற்றி வியாபித்துவிடும். சுருட்டடிப்பவன் சொப்பனத்தில் வந்த உறுமா கெட்டுக்காரனான சாரங்கியா அல்லது ஆலுவா வீட்டின் பழைய முதலாளியா என்ற குழப்பம் தோன்றியது. நான் நந்தனாவிடம் சேது வெளியேறிய ஒருபொழுதில் சுருட்டுப் புகையின் நாத்தம் தெரிகிறதா என்றதும் அவள் நன்கு சுவாசம் பிடித்துப் பிடித்துப் பார்த்துவிட்டு “இல்லை என் அன்பே சார்” என்றாள். அன்பே சார் என்று அருகிலிருந்து ஒரு அழகான பெண், அதுவும் கண்களை ஊடுருவிப் பார்த்துச் சொல்லும் வார்த்தை எவ்வளவு மதிப்பு மிக்கதென்பதை அனுபவிக்காதவர்களால் புரியவே முடியாது.



இரண்டாவது நாளின் மதியத்துக்குள்ளாகவே அந்த ஆட்டோக்காரன் எங்களோடு முற்றிலுமாக இணைந்திருந்தான். கடைக்குப் போகவர, பொருட்கள் வாங்க எடுக்க என அவனை முற்றிலுமாக சேது கைவசப்படுத்தினான். இதன் காரணமாக அவன் ஒரு வாரத்துக்கு அல்லது சேதுவின் மறுஅறிவிப்பு வரை வேறு ஓட்டங்களுக்குப் போகக்கூடாது. அவன் ஆலுவா வீட்டின் முன்பு ஆட்டோவை விட்டபடி காயல் கரையில் கிடந்த பெஞ்சில் படுத்துக்கிடந்து கிழக்குப்பக்க ஜன்னல் வழியாகப் பார்க்கும்படியாக இருந்தது. எனக்கு இப்போது நந்தனாவைச் சுற்றி நாங்கள் மூன்றுபேர் இருப்பதாகத் தோன்றியது. ஒருவேளை அவனும் என்னையும் சேதுவையும் போல நந்தனா மீது தெய்வீகக் காதல் கொண்டிருக்கிறானா என்று தெரியவில்லை. என்னையும் சேதுவையும் விட பிராயம் ரொம்பக் குறைந்தவன். உத்தேசமாக இருபத்தி ஐந்துக்குள் இருக்கும். அவன் எங்களைவிட தேஜஸ் மிக்கவனாகவும் நல்ல கற்றைபோலச் சுருள்முடி உடையவனாகவும் இருந்தான். அவன் இன்று மதியம் உணவு கொண்டு வரும்போது முதன்முதலாக ஆலுவா வீட்டின் ஹாலுக்கு வந்ததும் கூட அவனில் ஒரு முன்னேற்றம்தான். காலையில் இருமுறை வாசலோடு நின்றவன் இப்போது ஹாலுக்கு வந்திருக்கிறான். பெயர் கேட்டேன், இம்மானுவேல் என்றான். நான் தட்டச்சு செய்துகொண்டிருந்த நந்தனாவிடம் இம்மானுவேல் என்றால் தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தம் என்று சொன்னதுமே அவன் முகத்தில் ஒரு பூரிப்பு. அந்த பூரிப்போடு நீங்கள் கிருஸ்தவரா சார் எனக் கேட்டதும் நான் முஸ்லிம் என்றதும் அவன் பூரிப்பு போய்விட்டது.

அன்று மாலை நாலுமணிக்கே சேது நந்தனாவை அழைத்துக்கொண்டு அருகிலுள்ள பீச்சுக்குச் சென்று சற்று நேரம் காலார நடந்துவிட்டுப் பின்னர் நகரில் போய் நாம் இறங்கிக்கொண்டு நந்தனாவை ஆட்டோவில் அனுப்பிவிட்டு இரவு உணவை வாங்கிக்கொண்டு திரும்ப ஆட்டோவிலேயே இங்கு வந்துவிடலாம் எனத் திட்டமிட்டான். அவனின் முதல் திட்டத்தில் நான் இல்லை. நானும் பீச்சில் இருப்பதை ஒரு பாதுகாப்பாக அவன் உணர்ந்திருந்தான். நேற்றைய முன்தினம் நகரில் நடைபெற்ற பதினைந்து கொலைகளில் ஒன்று பீச்சில் நடந்திருப்பதை இம்மானுவேல் சொல்லியிருந்தான். ஒதுக்குப்புறமாய்த் தனித்திருந்த ஒரு காதல் ஜோடியை மூன்றுபேர் கொண்ட கும்பல் சூழ்ந்து அவனைக் கொலை செய்துவிட்டு அவளை வன்புணர்வு செய்திருக்கின்றனர். சேதுவிடம் இந்தப் பதட்டமிருந்தது. பீச்சில் நானும் இம்மானுவேலும் நடந்தோம். எங்களின் முன்னே பத்தடி தூரத்தில் நந்தனாவும் சேதுவும் பேசியபடி நடந்தார்கள். மேலும் நிறைய மனிதர்கள் அங்கிருந்தனர்.

பீச்சில் ஒரு நல்ல ரெஸ்ட்டாரண்ட் இருந்தது. அங்கு நாங்கள் அமர்ந்த மறுநிமிடமே சேது தனது போனைக் காணவில்லை எனவும் அது ஆலுவா

வீட்டின் படுக்கையறையில் இருப்பதாகவும் கூற, அதன் அவசியம் மிக முக்கியமானது என்பதால் இம்மானுவேலின் ஆட்டோவில் போய் நான் எடுத்து வரும்படியான சூழல் ஏற்பட்டது. போக அரைமணி நேரம் வர அரைமணி நேரம். நான் நந்தனாவைப் பார்த்துப் புன்னகைத்துக்கொண்டே புறப்பட்டேன்.

ஆலுவா வீட்டிற்குள் நான், ஆட்டோவில் இம்மானுவேல் இருந்துகொண்டான். நான் கதவைத் திறந்து உள்ளேறியபோது ஹாலில் சுருட்டுப் புகை முழுக்கப் பரவி நின்றது. இப்போதுதான் சுடச்சுட யாரோ புகைத்திருக்கிறார்கள். நான் ஹாலைக் கடந்து படுக்கையறைக்குள்ளே போய்ச் சுற்றிலும் பார்த்துவிட்டு எங்கே போன் கிடக்கிறது என்பதைக் கண்டடைய சேதுவின் போனுக்கு என் போனிலிருந்து அழைத்தேன். ரிங் ஓசை போகிறது. ஆனால் அது அறையில் கேட்கவில்லை. திடீரென போனை மறுமுனையில் எடுத்து சேது பேசினான்.. “மன்னிக்கவும் போன் இங்கே எனது கைப்பையில்தான் கிடந்திருக்கிறது... இப்போதுதான் எனக்குத் தெரிய வருகிறது... எனவே நீங்க திரும்ப பீச்சிக்கே வந்துடுங்க...”

எனக்கு லேசாக அச்சமும் நடுக்கமும் ஏற்பட்டிருந்தது. ஆலுவா வீட்டில் யாரோ ஒருவர் இருக்கிறார் என்பதை நான் லேசாகப் புரிந்துகொண்டு ஹால் கடந்து வந்து வெளி வாசலை அடைத்துக்கொண்டு சாவி துவாரம் வழியாக உள்ளே பார்த்தபோது சரியாக உயர்தர இருக்கையில் கனவில் வந்த அந்த உறுமாகட்டுக்காரன் அமர்ந்து சுருட்டைப் புகைத்தபடி குபுகுபுவெனப் புகை விடுவது எனக்கு மங்கலாகத் தெரிந்தது.


ஆலுவா வீட்டில் எனக்கு மூன்றாம் நான்காம் நாட்களில் அச்சம் முற்றிலும் விலகியிருந்தது. ஒரு மங்கலான காட்சியில் ஏதோ ஒரு சுருட்டுப் பிரியன் இங்கு மறைந்து வசிக்கிறான் என்பதை நான் மனரீதியாக உணர்ந்திருந்தேன். நான் சேதுவோடோ, இம்மானுவேலோடோ, நந்தனாவோடோ பிறகு இந்தப் பேச்சைப் பேசவுமில்லை. ஆனால் நாங்கள் இருவரும் தெய்வீகத்தின் தெய்வீகமான காதலைக் கைவிடவில்லை. நந்தனா ஆலுவா வீட்டுக்கு வந்த நாலாவது நாளில் அவளுக்குப் பிறந்தநாளும் வந்திருந்தது. உண்மையில் அவளுக்குப் பிறந்தநாளா அல்லது அவள் ஒரு பிறந்தநாளை உருவாக்கிக்கொண்டாளா என்பது தெரியவில்லை. சேது பணக்காரன் என்பதால் அவன் அவளுக்கு வைரமூக்குத்தியைப் பரிசளித்திருந்தான். மேலும் இந்தோனேஷியாவிலிருந்து இறக்குமதியான ஒரு அழகிய கண்ணாடிக் குடுவை ஒன்றையும் அன்பின் நிமித்தமாக வழங்கியிருந்தான். நான் முப்பத்தி ஐந்து ரூபாய் மதிப்பில் ஹார்ட் கீ செயின் வாங்கிக் கொடுத்தேன். பிறகு அவளோடு அன்று தனியாகப் பேசுகையில் ஐநூறு ரூபாய் மதிப்பிலான ஏதேனும் ஒரு பரிசுப் பொருளைச் சொன்னால் அதனை நான் வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்தேன். அவள் நானே கேட்பேன் என்றாள். எனக்கு அவள் கைகளில் அரபிகள் முத்தமிடுவதைப்போல முத்தமிட்டு வாழ்த்தலாம் என்று ஆசையிருந்தது. தயக்கத்தின் காரணமாக அதை நிகழ்த்த முடியவில்லை.

அன்று நண்பகல் நந்தனாவின் பிறந்தநாள் நிகழ்வாகச் சேது நகரில் ஒரு பெரிய விடுதியில் விருந்து தந்தான். மதியம் பன்னிரெண்டு மணிக்கே இம்மானுவேலின் ஆட்டோவில் போய் வந்தோம். அந்த உணவு விடுதி ஒரு வணிகவளாகத்திலிருந்தது. அங்கு நிறைய கடைகள் இருந்தன. நாங்கள் உணவை முடித்த பிறகு சேது போனில் உரையாடிக்கொண்டிருந்த இடைவெளியில் நந்தனா என்னை இன்னொரு கடைக்கு அழைத்துச் சென்றாள். அங்கு மிக ஈர்ப்பாக இருந்த ஒரு ஆஷ்ட்ரேயை எடுத்துக்கொண்டாள். அதன் மதிப்பு ஐநூறு ரூபாய்க்கு ஐந்து ரூபாய் குறைவாக இருந்தது. நான் ஐநூறு ரூபாயைக் கொடுத்து அதனை கிஃப்ட் பேக் பண்ணி அவளிடம் கொடுத்தேன். இது எதற்கு என்றபோது இது அழகாக இருக்கிறது இதில் ஒரு பூ வைப்பேன் என்றாள்.

அன்று மாலை ஆலுவா வீட்டிலிருந்து நந்தனா இம்மானுவேலின் ஆட்டோவில் புறப்பட்டுப்போன பிறகு நான் காயல் கரையில் நீண்ட நடை நடந்துகொண்டு இம்மானுவேல் திரும்ப வந்ததும் சேதுவும் நானும் ஒரு புத்தர் சிலை பார்ப்பதற்காகப் போனோம். உண்மையில் புத்தர் சிலையிருந்த இடத்தில் ஒரு நபரைப் பார்க்கத்தான் சேது



வந்திருக்கிறான். ஆலுவா வீட்டை வாஸ்து பார்த்து நிறைய செப்பனிட வேண்டிய வேலை இருக்கிறது. இதற்கு முந்தைய ஆலுவா வீட்டின் முதலாளி செப்பனிடத் திட்டமிட்டபோதுதான் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டது. எனவேதான் சேது இதனை அடிமாட்டு விலைக்கு வாங்க முடிந்தது. இந்த எல்லாக் கதைகளுக்கும் பின்னால் இந்த நபர் இருக்கிறார். நான் அவர்களின் தனிப்பட்ட விசயங்களை அவர்கள் பேசட்டுமெனப் புத்தரின் அருகில் அவரின் தோளை ஒட்டியபடி நின்றிருந்தேன். இம்மானுவேல் சற்று தள்ளி ஆட்டோவில் சாய்ந்தபடி சிரிக்க சிரிக்கப் பேசுகிறான். அவன் பேசும் உடல்மொழியைப்



பார்த்தால் நிச்சயமாக அவன் ஒரு பெண்ணிடம் வெட்கப்படும்படியான பேச்சுப் பேசுவதாகத் தோன்றுகிறது. நான் நந்தனா இல்லை என்றால் இரண்டு நாட்களுக்கு முன்னமே இங்கிருந்து பேசாமல் போயிருப்பேன். இந்த இரவு கொஞ்சம் சிரத்தையாக எழுதிவிட வேண்டுமென எண்ணிக்கொண்டேன். இரவு எழுதிவிட்டு நான் தூங்கும்போது மணி எப்படியும் ஒன்று கடந்திருக்கும். இரண்டு நாட்களாக இல்லாத கனவு இன்று வந்தது. உறுமா கெட்டில் பட்டுக் குஞ்சம் தொங்க தலையை அசைத்து அசைத்துச் சுருட்டைப் புகைத்துப் புகையைவிட்டபடி சிரித்த முகமாக இருந்தது. எனக்கு அந்த முகம் ஒரு பாரசீகக் காப்பியத்தின் ஒரு காட்சிக்கு வரையப்பட்ட ஓவியத்தில் பார்த்த முகம் போல இருந்தது. முதல் நாள் கனவில் கண்டபோது இவ்வளவு புன்னகை இல்லை.

எனக்கு இன்று பேச முடிந்தது கூடுதல் விசேடம்.

“இங்குதான் இருப்பீர்களா?” என்றபடி மௌனமாகப் பார்த்தேன்.

“எனக்கு அபரிமிதமான இஷ்டம் தோன்றினால் வெளியேறுவேன்...”

“என்னோடு என்ன இத்தனை நெருக்கம்...”

“உன் பாட்டன் சாயுபு ஒருவேளை காரணமாக இருக்கலாம்...”

“என் பாட்டன் சாயுபுக்கும் சாரங்கிக்கும் என்ன தொடர்பு...”

“நான் சாரங்கி இல்லை... அது ஒரு கதை... நான் ஒரு ஜின்....”

நான் படுக்கையிலிருந்து எழுந்துவிட்டேன். என் தலைமாட்டிலிருந்த ஒரு செம்பு நீர் முழுவதும் பருகினேன். கொஞ்ச நேரம் திக்கிர் செய்தபடி படுக்கையில் கிடந்து அப்படியே தூங்கிப்போனேன்.

நந்தனாவுக்கு ஒரு பத்து வரியில் காதல் கடிதம் எழுதிக் கொடுக்க வேண்டும். அவள் முகம் மாறினால் கவிதை எப்படி இருக்கிறது என்று கேட்க வேண்டும். மாறாக வாசித்துவிட்டுப் புன்னகைத்தால் அவள் கையில் ஒரு அரபியைப் போல முத்தமிடலாம். காலை ஒன்பதரை மணிக்கு நந்தனா ஆலுவா வீட்டிற்கு வரும்போது சேது இல்லை. அவளை நான்தான் வரவேற்றேன். அவள் புன்னகைத்துச் சிரித்தபடி தலையை அசைத்துச் சிரித்தாள். நான் கடிதத்தைக் கொடுத்தேன். அவள் படித்துவிட்டுத் துள்ளியபடி என்னை இழுத்துப்பிடித்து என் கண்களில் ஒரு முத்தமிட்டாள். ஆனால் அவள் இன்னும் இரண்டு நாட்களில் இம்மானுவேலோடு ஓடிப்போய்க் கல்யாணம் பண்ணப்போகிறாள் என்பது அப்போது எனக்குத் தெரியாது. கதை இங்கு முடியவில்லை.

■

# வலங்கைமான் நூர்தீன் கவிதைகள்

## மழைக்குருவி

பறவைகளே பறவைகளே
இன்று எங்கே சென்றீர்கள்.?
நீங்கள் விட்டுவைத்த
சீனிப்பழங்கள் நாவில் இனிக்கும்போது
சிறகுகள் முளைத்த மனசு
உங்களைத் தேடிப் பறக்கிறது.
••

மிச்சம் வைக்கிறது
விரலளவு பறவைகளின் அன்பு;
கையளவு சீனிப்பழங்களை
தினமும் பரிசளிக்கிறது மரம்.
••

மண்வாசனை கமழும் கோடை மழையில்
கனிந்திருக்கின்றன சீனிப்பழங்கள்.
கிளைகளில் கொத்து கொத்தாக
நீர் முத்துகளைக் கொய்யும் விழிகளுக்கும்
தித்திக்கப்போகும் நாவிற்கும்
சிறு இறகின் தூரம்தான்.
அதனிடையே மழைக்குருவியாய்
சடசடத்துப் பறக்கும் மனசில்
மேகங்களின் ஈரம் மிச்சமிருக்கிறது.

அதில் நனையப்போகும் இக்கவிதையில்
குடையோடு யாரும் நுழையாதீர்.

•••

## எரியும் தூவல்

மேகமாய் இருக்கும்போது
மழையாய்ப் பொழிகிறேன்.
தேகமாய் உருகும்போது
அனலாய்க் கொதிக்கிறேன்.
தூவலில் எரிந்து
தீயால் அணைக்கிறாய்.
நிலம் பூத்துக் குலுங்க
மலர்களைக் கொய்வதற்குத்தான்
வானத்தில் பறக்கிறோம்.
•••

## இலைகளின் ஊசல்

உதிர விரும்பும் இலைகள்
தருவின் உத்தரவிற்குக் காத்திருப்பதில்லை.
மென் காற்றோ, துளி அதிர்வோ போதுமானது.
இருந்தாலும் பழுத்த சருகுகள் நிலம் காண,
கிளைகளில் ஊசலாடுவது
சிறு பறவையின் அமர்விற்காக.
•••

## கமழும் மழை

வாசம் வீசும் பூக்களில்
வந்தமரும் வண்ணத்துப்பூச்சிகள்
தேன் குடித்து, மகரந்தம் பூசிப் பறக்கின்றன.
தோட்டத்திற்கு இறங்கி வரும் வானவில்
மழையைக் கமழ்விக்கிறது.
பொழியும் துளிகளெல்லாம் தித்திக்கின்றன.
•••

■

ஆண்டன்பெனி

ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்பித்தன்

# மஞ்சப் பத்திரிக்கை



'காரவீட்டுத் தம்பிய வரச்சொல்லு... பத்திரிக்கை எழுதிடலாம்' என அய்யன் அவனைத் தேடும்போதே ஆரம்பித்துவிடும் வீட்டு விசேசத்தின் பரபரப்பு.

ஊரில் யார் வீட்டு விசேசம் என்றாலும் பத்திரிக்கை எழுத அவனைத்தான் தேடுவார்கள். ஊர்களில் ஒவ்வொன்றிற்கும் அடையாளமாக ஆட்கள் இருந்தார்கள். சைக்கிள் விளையாட்டுனா கோவிலான் அண்ணன், கதை சொல்ல தவசி கிழவன், காளைக்கு விட மாசிலாமணி தாத்தா, கம்பு சுத்த காளியப்பன் மாமா. காரவீட்டுத் தம்பின்னு சொல்ற சீனிவாசன் என்கூடத்தான் படிக்கிறான். அவங்க அக்கா அவனுக்கு ஆரம்பத்துல இருந்தே பாடம் சொல்லிக்குடுத்தது. அதனால அவனுக்கும் படிப்பு நல்லா மண்டையில ஏறுனது. எனக்கு அடிச்சிச் சொல்லிக்குடுக்கவும் ஆளில்ல, அதட்டிச் சொல்லிக்குடுக்கவும் ஆளில்ல.

விளையும் பயிர் நான். விளைஞ்ச பயிர் அவன். நாங்க ரெண்டு பேரும் ஒரே வகுப்புல படிச்சாலும் அவன் வளர்ந்து ரொம்ப நாளாயிருந்துச்சி, நான் வளரவேயில்ல.

"அய்யா.. நானும் அவன் கூடத்தானே படிக்கிறேன்... நா பத்திரிக்கை எழுதக்கூடாதா?" என்றபோது...

"அவன் எழுத்து முத்து முத்தா இருக்கும்லே.. அச்சுக் கோர்க்கிறவனுக்குச் சிரமம் இருக்காதில்ல? அதிலேயும் கைராசிக்காரப்பய.. தொட்டதெல்லாம் தொலங்குது" என்பார்.

ஊர்களில் கைராசி என்பது கடவுள் நம்பிக்கையைவிடவும் மேலானது. கைராசி கண்டுவிட்டால், கடவுளுக்கு முன்பாக அவன்/அவளைத்தான் கொண்டாடுவார்கள். இப்பவும் ஊர்ல எந்த முடிவு எடுக்கணும்னாலும், பலதரப்பட்ட கருத்து வந்துட்டா, சீட்டுக்குலுக்கித்தான் முடிவு எடுப்பாங்க. சீட்டு யாரும் எடுத்திடமுடியாது. பேச்சிதான் எடுக்கணும். அவ காட்டுச் சிறுக்கினாலும், கிறுக்கு பிடிச்சவனாலும், சீட்டெடுக்க அவதான் கடவுள். அவ சீட்டெடுத்த எந்தக் காரியமும் கெட்டுப் போனதில்ல. வாழத்தான் அவளுக்கு முடியலனாலும் சீட்டெடுத்து அப்ப ஊர வாழவச்சதே அவதான்.

காளியம்மன் கோவில் மூணாம் நாளு திருவிழாவுக்கு முதல்ல மஞ்சத் தண்ணி கலக்குனதே அவதான். கரைக்கிறதோட சரி, அவ மேல யாரும் மஞ்சத்தண்ணி ஊத்தப் போறதில்ல. ஆனாலும், மத்தவங்க அண்டாத் தண்ணிய எடுக்கிறதுக்குள்ள, அவளே சொம்புல எடுத்துத் தனக்குத்தானே ஊத்திக்குவா. அம்மன் தனக்குத்தானே ஊத்திக்கிட்டதா நெனச்சி, கிறுக்கச்சி ஊத்திக்கிட்டா... சரி ஆரம்பிங்கனு ஊரே மஞ்சத் தண்ணியில மெதக்கும்.

அப்படித்தான் சீனிவாசன் பத்திரிக்கை எழுதுறதும். வரும்போதே பரீட்சை அட்டையோடதான் வருவான். பத்திரிக்கை எழுதுறதுக்கே பொறந்தவன் மாதிரி.

பத்திரிக்கை என்பது நிலம் முடிக்கப் பத்திரம் எழுதுவதைப்போல் நேரம் காலம் கைராசி எல்லாவற்றிற்கும் உட்பட்டது. பத்திரிக்கையில் போடவேண்டிய பெயர்களை முடிவுசெய்வது பஞ்சாயத்துத் தீர்மானத்திற்கு இணையானது. பத்திரிக்கையில் பெயர்போடுவது, பத்திரிக்கையினை முறைப்படி நேரில் கொடுத்து அழைப்பது, விசேச நாளன்று முறைப்படி வரவேற்று உபசரித்து வழியனுப்புவது என, இவைதான் வீட்டு விசேசங்களில் மிகவும் முக்கியமானவை. வந்தவர்களை உபசரிப்பதிலும் வழியனுப்புவதிலும் கவனமாக இருக்கவேண்டுமாம்.. அய்யன் சொன்னார். அப்படித்தான் கவனமாக இருந்திருக்கிறார்கள்.

"தாத்தா காலத்துல பத்திரிக்கை எப்படிப்பா?"ன்னு எங்க அய்யன்கிட்ட கேட்டப்போ "அப்பெல்லாம் வசதியானவங்கதான் பத்திரிக்கை அடிச்சிருக்காங்க. இப்பமாதிரி உறவுமுறை தூரமா இல்லையில்ல. வண்டி கட்டிப்போனா ரெண்டு மூணுநாள்ல மொத்தத்தையும் கொடுத்துட்டுத் திரும்பிடலாம். பொழைக்கிறதுக்குத் தூரமா போறவங்ககிட்ட போகும்போதே சொல்லிடுவோம்... 'எப்பா... தூரமாப் போற, கல்யாணம் காட்சினா... நேர்ல வந்து அழைக்க முடியாது. ஆள் அனுப்பவும் முடியாது. கடுதாசிதான்'னு. அவங்களும் 'டிக்கெட் போட நேரமிருந்தால் போதும் வந்திடுவோம்'னு சொல்லுவாங்க. வாக்கு சுத்தமாவும் வந்திருவாங்கள்ல.." என்றவர், தொடர்ந்து, "நிலத்துப் பத்திரம், வீட்டுப் பத்திரம் இருக்கும் பையில்தான், வீட்டுவிசேசத்து மொய் நோட்டும் இருக்கும். பத்திரிக்கை வச்சிட்டுப் போனதும், மொய் நோட்டை எடுத்துப் பார்த்து என்ன செஞ்சிருக்காங்க, எவ்வளவு செஞ்சிருக்காங்கன்னு, பாத்துட்டு அதுக்குக் குறைவில்லாம செய்யணும்னு நெனப்பாங்க" என்றார்.

அழைப்பிதழும் அழைப்பும் அத்தனை உயர்வானதாக இருந்திருக்கிறது. 'தாத்தா போற உறவுக்குத் தாத்தாதான் போகணும், நான் போனாச் சொல்லிக் காட்டுவாங்க, அல்லது பத்திரிக்கை வாங்கிட்டு வரமாட்டாங்க' என்றவர், 'நம்ம ராசையா வீட்டுப் பகையே, உங்க தாத்தனும் போகாம, நானும் போகாம, உன்னோட ஆத்தாள அனுப்பிப் பத்திரிக்கை வச்சதுதான்,' என்றார்.

எனக்குத் தெரிய, யார் வந்து பத்திரிக்கை கொடுத்தாலும் வாங்கியதும் சாமி படத்திற்கு முன்னால வச்சிட்டு... பிறகுதான் அதை எடுத்துப் படிக்கும் வழக்கம் இருந்தது. நிகழ்வு முடிஞ்சாலும், கிழித்துப் போட மனமில்லாமல் அப்படியே வைத்திருப்பார்கள். பரண் மூட்டையில இன்னும் தாத்தா காலத்து, அய்யன் காலத்துப் பழைய விசேசப் பத்திரிக்கைகளைப் பார்த்திருக்கிறேன்.

சமீபத்தில் மகள் திருமணத்திற்காகப் பத்திரிக்கை வைக்கச் சென்றிருந்தேன். தற்போதுள்ள சூழ்நிலையில் எல்லோருக்கும் நேரில் பத்திரிக்கை வைப்பது சிரமம் என்றிருந்தாலும். சில உறவுகளை நேரில் அழைப்பதைத் தவிர்க்க முடியாதுதானே?


வாசலில் இருந்த காவலர் "நீங்க வர்றதா எனக்குச் சொல்லலியே" என்றார்.

"மறந்திருப்பாங்க.... வேணா கேட்டுட்டு வாங்க."

"அது முடியாதுங்க... நீங்க போன்ல பேசுங்க... அவங்க இண்டர்காம்ல தகவல் சொல்லுவாங்க" என்றார். கால்மணிநேர முயற்சிக்குப் பிறகு உள்நுழைய அனுமதி கிடைத்தது. கதவு திறந்தபடியே என் பரிதாபத்தைப் பார்த்து, என் வேலை அப்படி

சாரே என்பதுபோல் காவலாளி பார்த்தார்.

வேலைக்காரம்மாவால் சோபாவில் அமர்த்தப்பட்டேன். காபி வந்தது குடித்தேன். தினசரி பேப்பர் தந்தார்கள் படித்தேன். அந்த அறையின் கடிகாரம் தொடங்கித் திரைச் சீலைவரை ஒன்றுவிடாமல் மனப்பாடம் செய்தேன். அவர் எனக்கு மாமா உறவு. லேட் மேரேஜ். என் மகள் வயதிலேயே அவருக்கும் ஒரு மகள். சுமார் அரைமணி நேரம்வரை மூன்று வேலைக்காரர்களைத் தாண்டி மாமாவையோ, அத்தையவோ, அவரின் மகளையோகூடப் பார்க்கமுடியவில்லை.



முதலில் அத்தை வந்தார்....

“எப்படி இருக்கீங்க? அவருக்கு வேலை அதிகம். நைட் லேட்டா வந்தாங்க... என்ன விசயம்?”

“பரவாயில்லீங்க, மகளுக்குக் கல்யாணம் வச்சிருக்கேன்... பத்திரிக்கை நேர்ல குடுக்கலாம்னு வந்தேன்.”

“ஓ... நல்ல விசயம். நீங்க வர்றது அவருக்குத் தெரியுமா?”

“ஒரு வாரத்துக்கு முன்னமே போன்ல பேசியிருந்தேன்.”

“அப்படியா? மறந்திருப்பார்..” சொல்லிக்கொண்டிருக்கும்போதே அத்தை மகள் மாடியிலிருந்து இறங்கி எங்களைக் கடந்து வேறோர் அறைக்குச் சென்றாள்.

அப்போது நான்... “உங்க பொண்ணுதானே அத்தே?” என்றேன். “ஆமா... அவளுக்கும் ஆபீஸ்க்கு நேரமாச்சி... காலையில நாங்களே ஒருத்தருக்கொருத்தர் பேசிக்க முடியாது.... நாங்க இன்னும் கொஞ்ச நேரத்துல கௌம்பிருவோம்... நீங்க வேணா இருந்து சாப்பிட்டுப் போங்களேன்” என்றார்.

மாமாவைப் பார்க்கமுடியாது என்று மறைமுகமாகச் சொன்னதிலேயே பசியடங்கியிருந்தது. அதற்குமேல் அங்கிருக்க முடியவில்லை. “இல்ல அத்தே சாப்பிட நேரமாகும்” என்று சொல்லிவிட்டு மாமாவைப் பார்க்காமலேயே திரும்பிவிட்டேன்.

வெளியே வந்ததும் காவலாளியிடம் கேட்டேன், “இங்கயே இருக்கீங்களே... உள்ள இருக்கிறவங்களை எப்பவாவது பாத்திருக்கீங்களா?” ன்னு.

“எங்க சார்... வண்டி நம்பரைப் பாத்துத் தொறந்துவிடுவேன்... புது வண்டினா, இண்டர்காம்ல சொல்லுவாங்க... எதுக்கு சார் நமக்கெல்லாம் அது... மாசமானா கூலிவந்தா போதும் சார்.. நீ ஊராண்ட இருந்து வர்றியா?”

‘ஆம்’ என்பதாகத் தலையாட்டிவிட்டு வந்துவிட்டேன். கல்யாணத்துக்கு முதல்நாள் ஒரு பார்சல் வந்தது. வர முடியாமைக்கான காரணத்துடன் சிறு தகவலும் அதில் இருந்தது. அழைப்பிதழில் அவர் பெயர் போட்டிருந்ததைப் பார்த்திருக்கமாட்டார் என்றே தோன்றியது. பெயர் போடாமல் இருந்திருந்தாலும் அதற்காக வருத்தப்பட்டிருக்கமாட்டார்.

பத்திரிக்கையில் உறவுகளின் பெயர் போடுவது, கோவில் கல்வெட்டில் பெயர் வெட்டுவதற்குச் சமமானது என்பதை அவரின் அப்பா சொல்லியிருந்ததை அவர் மறந்திருக்கலாம், அல்லது நினைவிலிருந்தாலும் அது தேவையில்லாத ஒன்று என இப்போது நினைத்திருக்கலாம்.

என் பேரன் கல்யாணத்திற்கு மகளால் பத்திரிக்கை அடிக்கமுடியுமா என்று தெரியவில்லை. முகநூலிலும் வாட்ஸ்ஆப்பிலும் இன்னபிற சமூகவலைத் தளங்களிலும் மட்டுமே அழைப்பிதழ் பகிரப்படலாம். அதிலிருக்கிறவர்கள் பார்த்தால் வரலாம்... பதிவிறக்கமாகாமல் போனால் வரமுடியாமலும் போகலாம்..

வெளிப்பக்கம் கத்தரிப்பூ கலரிலும் உள்பக்கம் மஞ்சள் கலரிலுமான என் காலத்தின் பத்திரிக்கை என் நினைவிலிருந்து மங்கலாகி மறைந்துகொண்டிருந்தது. அதெல்லாம்கூடப் பரவாயில்லை. பாவம் பத்திரிக்கை எழுதுவதற்கென்றே பிறந்திருக்கும், கைராசியான, அழகான கையெழுத்துக்களோடிருக்கும் சீனிவாசன்களை இப்போது என்ன செய்யலாம் என்றுதான் தெரியவில்லை. ■

# வீரசோழன் க.சோ.திருமாவளவன் கவிதை

படித்துறையில்தான்
தாத்தா எனக்கு
நீச்சல் கற்றுத் தந்தார்.

தூண்டில் போட்டு
மீன்களை அள்ளும்
சிறுவர்களுக்கு முன்
பொரி உருண்டையை
உணவாக
அவைகளுக்குப் போடச்
சொல்லிக் கொடுத்தார்.

சோப்பு தேய்த்து
படித்துறைக் கல்லில்
இரண்டு அடி அடித்து
ஓடும் நீரில் முக்கி
துணியில் உள்ள அழுக்கை
நீக்குவார்.

அமாவாசையன்று
மீன் பிடிக்கவோ
துணி துவைக்கவோ
வாய்ப்பே இருக்காது.
தாத்தாவும் கூட்டியே
செல்ல மாட்டார்.
ஏன் என்று கேட்பேன்
நீயே தெரிந்துகொள்வாய்
என்பார்.

காலமும் நீரும்
ஓடிக்கொண்டே இருந்தன.

நேற்றொரு வெயில்நாளில்
தாத்தா நடமாடிய
அதே படித்துறையில்
அவர்
அங்கத்தை கரைத்துக்கொண்டு
இருந்தேன்.

■

அய்.தமிழ்மணி
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்



# நீ இன்றி வேர் ஏது..

இப்படியொரு பொழுது பென்னிக்கு வந்திருக்கக்கூடாது. என்ன செய்ய.. வந்துவிட்டது.

எப்பவும் பொழுதுகள் விண்ணப்பம் போட்டுவிட்டு வருவதில்லை. இந்த உலகத்தில் யாராலும் எதுவாலும் கட்டுப்படுத்த முடியாத யாருக்கும் அடங்காத ஒன்று பொழுது மட்டும்தான். உலகத்தின் எல்லா வாழினங்களுக்கும் அவரவர் அததின் வாழ்வியல் நிகழ்வுகளைக் குறிக்கும் விதமாக பொழுதுகள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. போன பொழுது திரும்பாது எனப் பழமொழி உண்டு. அப்படித்தான் கடந்த பொழுதுகள் உண்மையாக மீள்வதில்லை. நம் நிகழ்வுகளின் காலநீட்சியைப் பொறுத்து பொழுதுகளின் நீட்சியை நாம் சொல்லிக்கொள்கிறோம். கடந்த பொழுதுகள் நடந்தவற்றை அசை போடவும் வரப்போகும் பொழுதுகள் கனவு காணவும் என மனிதர்களுக்கானதாக எழுதப்பட்டுவிடுகிறது.

பென்னி தன் அலுவலகத்தில் உட்கார்ந்திருந்தான். கடந்த சில நாட்களாக அவனுக்கு எந்த வேலையும் ஓடாமல் இருப்புக்கொள்ளாமல் தவித்தான். டேபிள் மேலிருந்த கண்ணாடிப் பீங்கான் உருண்டையைச் சுத்திவிட்டுக்கொண்டிருந்தான். அந்தப் பீங்கானுக்குள் ஆணும் பெண்ணும் கட்டிப்பிடித்துக்கொண்டு நடனமாடியவாறும் அவர்கள் மீது பல வண்ணங்களில் இதயச் சின்னங்கள் மழைபொழிவது போன்றும் அருகில் குட்டி வீடு ஒன்றும் குட்டி நாயொன்றும் என வடிவமைக்கப்பட்டிருந்தது.

இப்பொழுது முன்னவும் விட வேகமாகச் சுழற்றினான். அந்தச் சுழலில் அந்த ஆணும் பெண்ணும் இடைவிடாது ஆடிக்கொண்டிருந்தார்கள். அந்த நாய்க்குட்டி அவர்களைச் சுற்றிச் சுற்றி ஓடிக்கொண்டிருந்தது. உலகின் அத்தனை இதயங்களும் கூடிப் பொழிந்து அவர்களை வாழ்த்தின. டேபிளிலிருந்து டக்கெனச் சரிந்து தரையில் விழுந்த பீங்கான் உருண்டை உடைந்து சிதறியது.

பீங்கான் உலகிற்குள் ஆடிக்கொண்டிருந்த ஆணும் பெண்ணும் நாயும் இதயங்களும் சிதறிப் போயின. பென்னி அதை வெறித்துப்

பார்த்துக்கொண்டே இருந்தான். அவன் மனசு சின்ன பதட்டம் கூட அடையவில்லை. ஏற்கனவே இவனும் உடைந்துபோயிருந்தான்.

“என்ன சார் அந்தப் பொண்ணு உங்களுக்கு எவ்வளவு ஆசையாக் கொடுத்தது இப்படி ஒடச்சுட்டீங்களே..” என்றவாறு வேலைக்காரப் பெரியம்மா அதைப் பெருக்கிக் குப்பைக் கூடையில் அள்ளினாள்.

“அம்மா..”

“சொல்லுங்க சார்..”

“மனசு ஒடஞ்சு போச்சுன்னா இப்படி அள்ளிப் போடுறதுக்கு ஏதாவது கூடையிருக்காம்மா..” என்றான்.

“எப்பப் பாத்தாலும் வெளையாட்டுதேன் சார் ஒங்களுக்கு.. ஒங்க மனசாவது ஒடையுறதாவது.. எவ்வளவு வைராக்கியமான புள்ள நீங்க.. இதப் போட்டுட்டு வந்துறேன்” என்றவாறு அலுவலகத்தின் வெளியிலிருக்கும் குப்பைத் தொட்டியை நோக்கிச் சென்றார் பெரியம்மா.

உடையாமல் இருப்பதற்குப் பெயர்தானே வைராக்கியம். உடைந்துவிடுமென்றால் வைராக்கியம் என்ற பெயர் ஏன் அதற்கு. இந்த உலகத்தில் உடையாதது ஏதும் இருப்பதாய்த் தெரியவில்லை. எங்கு பார்த்தாலும் உடைசல்கள் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அந்த உடைசல்களுக்குள்ளும் ஒரு பூ பூத்து அந்த உடைசலின் தன்மையை மாற்றிவிடுகிறது. பூ பூத்ததும் அது குறித்துப் பெருமிதம் கொள்பவர்கள் அந்தப் பூ பூப்பதற்கான சூழல் குறித்தும் அதைப் பூக்கவித்த செடி குறித்தும் அச்செடியின் போராட்டம் குறித்தும் கிஞ்சித்தும் சிந்திப்பதில்லை. அவர்களுக்குப் பூ கிடைத்துவிட்டது, அவ்வளவுதான். இப்படியொரு சிந்தனை பென்னிக்குள் நடைபழக.. வாயை ஓரமாய்க் குவித்து இச்சென்று விரக்திப் புன்னகையைச் சிந்தினான். பெரியம்மாவால் கூட்டியள்ளப்பட்ட பீங்கான்களின் இடங்களை அந்தப் புன்னகை இப்பொழுது நிரப்பியது.

அது மாலை நேரம். எறும்பீஸ்வரர் கோவில், திருவெறும்பூரில் இருக்கிறது. அது மலைக்கோவில். மலையின் உச்சியில் கட்டப்பட்டிருந்த அந்தக் கோயிலின் இடுப்பளவு சுற்றுச் சுவரினைத் தாண்டிப் பாறைச் சரிவில் இருவரும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

மாலைநேரக் காற்று அவர்களை மயக்கிக்கொண்டிருந்தது. மேற்கில் மறையும் சூரியப்பெண் அந்த மயக்கத்திற்கு மஞ்சள் பூசிக் கொண்டிருந்தாள்.

யுவனா அடிக்கடி பென்னியின் தோளில் சாய்ந்துகொண்டும் நிமிர்ந்தும் அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டும் பேசிக்கொண்டே இருந்தாள். அவளின் பேச்சு ஒவ்வொன்றும் எதிர்காலக் கனவுகளைக் கட்டமைக்கும் கருவியாகவே இருந்தது. அது ஒவ்வொரு பெண்ணுக்கும் இருக்கிற ஆசை. அவளின் கனவுகளை நனவாக்குவதில் தனக்கு மட்டுமே பொறுப்பிருப்பதாக நினைத்தான் பென்னி.

“ஏங்க..” என்றழைத்தாள் யுவனா.

“ஏய்.. லூசு அப்படிக் கூப்பிடாத ரொம்ப கூச்சமா இருக்குன்னு எத்தன தடவ சொல்லிருக்கேன். பேர் சொல்லிக் கூப்பிடு இல்லன்னா போடா வாடான்னு கூப்பிடு இன்னும் சந்தோசப்படுவேன். கல்யாணத்துக்கு முன்னாடி இப்படில்லாங் கூப்பிடாத..” என்ற பென்னி அவளது தலையில் செல்லமாய்க் கொட்டு வைத்தான். அவளும் திருப்பி அவன் தலையில் ஒரு கொட்டு வைத்து வக்கனை காட்டிச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பில் அவள் அவ்வளவு அழகாய்த் தெரிந்தாள் பென்னிக்கு. கபடமில்லாத சிரிப்பு யாரையும் ஒரு கணம் லேசாக்கிவிடுகிறது. அவள் சிரிக்கும் பொழுதெல்லாம் பென்னிக்குள் பூந்தோட்டமே பூத்துக் கொழிக்கும். பறக்கும் பாயொன்றில் வானத்தில் மிதப்பதாய் உணர்வான்.

“அதில்லங்க. என்னப் பொறுத்தவரைக்கும் காதல்ங்கிறது வேற கல்யாணம்ன்றது வேற. காதல் கைகூடாமக் கூடப் போகலாம். காதலுக்கு கட்டுப்பாடு இல்ல. ஆனா கல்யாணங்கிறதுக்குக் கட்டுப்பாடு இருக்கு. இப்பக்கூடப் பாருங்க. கல்யாணத்துக்குப் பின்னாடி ஏங்கன்னு நீங்களே கூப்பிடச் சொல்றீங்க. என்னால அப்படில்லாம் திடீர்ன்னு மாத்திக்கிற முடியாது. அதேன் இப்ப இருந்தே ஏங்கன்னு ஒங்களக் கூப்பிடுறேன்.. புரியுதா” என்றவள் பென்னியின் கன்னத்தில்

குழந்தையாய்க் கிள்ளிச் சின்னதாய்ச் சிரித்தாள்.

"ஏ அப்படிச் சிரிக்காத எனக்கு என்னமோ பண்ணுது.." என்றான். அவளின் இந்தச் சிரிப்பு வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டும். அந்த மயக்கத்திலேயே வாழ்ந்துவிட வேண்டும் என நினைத்தான். இவனுக்கான எல்லாமும் அவள்தான். அவளுக்கான எல்லாமும் இவன்தான்.

"ஏங்க.."

"ம்.."

"நாவொன்னு கேட்டா சொல்லுவீங்களா.."

"சொல்லுறதென்ன கொடுக்கவே செய்வேன்.." என்றொரு பார்வை பார்த்தான்.

"ச்சீ அப்படிப் பாக்காதீங்க.."

"ஏய்., லூசு என்னனென்னமோ நெனைக்காத. சரி சொல்லு.."

"இல்ல. நாஞ் செத்துப் போயிட்டா என்ன பண்ணுவீங்க.."

"ம்..." மீண்டும் உன்னிப்பாக அவளைப் பார்த்தான்.

"பாக்காதீங்க. சொல்லுங்க.." என்ற சிணுங்கலில் இன்னும் அழகாய்த் தெரிந்தாள் பென்னிக்கு.

"நல்லாத்தான பேசிட்டிருந்த.." பொய் முறை முறைத்தான்.

"ம்.. சொல்லுங்க.." அவன் தோளில் சாய்ந்துகொண்டு அவனது சட்டைப் பட்டனோடு தனது கேள்வியையும் திருகினாள் யுவனா.

பென்னி தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஏழைத் தாண்டியிருந்தது. நிலவெங்கோ மேகங்களுக்குள் மறைந்திருக்க நட்சத்திரங்கள் மட்டுமே மின்னிக்கொண்டிருந்தன. கோயில் நடையில் அடிக்கப்பட்ட பெரிய மணியின் ஒளிச் சத்தத்தில் அங்கே சில செடிகளிலிருந்த மொட்டுக்கள் அதிர்ந்து விரிந்தன. சில வண்டினங்கள் தங்கள் இறக்கைகள் கொண்டு காதுகளை மூடிக்கொண்டன. பிரசாதம் பெற்றுக்கொண்ட பக்தர்கள் நமச்சிவாய நாமம் சொல்லிக் கன்னத்தில் போட்டுக்கொண்டும் நெஞ்சில் கை வைத்துக்கொண்டும் வெளியேறிக்கொண்டிருந்தனர்.

"நட சாத்தப் போறாங்க. வா. சாமியக் கும்பிட்டுக் கௌம்பலாம்.." என்றான்.

"சாமி இங்கதான இருக்கு. எப்ப வேணாலும் கும்பிட்டுக்கலாம். நீங்க சொல்லுங்க.." என்றாள் விடாப்பிடியாக சிணுங்கிக்கொண்டே. அவளின் கேள்வி அவனுக்குப் பைத்தியக்காரத்தனமாகப்பட்டது. கோபமாகவும் வந்தது. ஆனால் அவளின் குழந்தைத்தனமான சிணுங்கலில் கரைந்துபோயிருந்தான்.

"நாவொன்ன அப்படி விட்டுற மாட்டேன்.."

"சாவ யாருந் தடுக்க முடியாது. என்ன செய்வீங்க சொல்லுங்க.."

குழந்தையாய்ப் பேசுகிறாள் என நினைத்தால் பெரிய மனுசி மாதிரி தத்துவம் பேசுகிறாளே என நினைத்தவன்,

"சரி நீ என்ன செய்வ.." என்றான்.

"மொத நீங்க சொல்லுங்க. நாந்தான மொதக் கேட்டேன்.."

"லேடீஸ் பர்ஸ்ட்.."

"இப்படிச் சொல்லியே எங்கள மடக்கிடுவீங்களே. ஆம்பள புத்தியே இதான்.." என்று வெடுவெடுத்தவள் சட்டென எழுந்து நின்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

"ஏய். லூசு அப்படில்லாம் இல்ல. எனக்குச் சொல்லத் தெரியல்ல. நீதேன் இப்படில்லாம் யோசிக்கிற.." பென்னி அவளது கன்னங்களைக் கைகளால் கொஞ்சிச் சமாதானப்படுத்தினான்.

"சரி சரி நானே சொல்றேன்.." என்றவள் அவனது கைகளை விலக்கிவிட்டவாறு...

"நான் வேறொருத்தனக் கல்யாணம் பண்ணிக்கிருவேன்.." என்றாள் தடாலடியாக. சற்றும் எதிர்பாராத அவளின் அந்தப் பதிலுக்கு...

"நீ மட்டும் பண்ணிப்பாரு.. பெறகு என்ன பண்ணுவேன்னு தெரியும்.." என்றான் கோபமாக. அவளின் வார்த்தைகள் அவன் இதயத்தைப் பிசைந்துவிட்டிருந்தது.

"என்ன பண்ணுவீங்க நீங்கதேன். செத்துப் போயிருப்பீங்களே.." என வக்கனை காட்டிச் சிரித்தாள். பதிலுக்குப் பென்னியும் சிரித்துவிட்டான். பொய்க் கோபமாய்..

“ஒன்ன..” எனக் கையை ஓங்கினான். விலகியவள் ஓடினாள். இவனும் விரட்டினான். அந்தப் பாறைகளில் சுற்றிச் சுற்றி ஓடியவர்கள் கைகளை முழங்காலில் வைத்துக்கொண்டு மூச்சு வாங்கினார்கள். ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டார்கள். யுவனா திரும்பவும் ஓடிவந்து அவன் தோள்மீது சாய்ந்துகொண்டாள்.

“தொரைக்கு என்னாம்மா கோவம் வருது.. நான் அப்படியொன்னுஞ் சீக்கிரமா சாக மாட்டேன்.. ஒங்களுக்குப் பெறகுதேன் எஞ்சாவே..”

“லூசு லூசு.. வாழ்றதப்பத்தி பேசுறத விட்டுட்டு.. சாகுறதப் பத்திப் பேசுற..”

“சாவுதான வாழ்க்கையோட எல்ல. அதத் தொடாதவங்கன்னு இங்க யாரையும் எதையுஞ் சொல்ல முடியாது. அதப் பேசாம பெறகெங்க வாழ்றது..”

“என்னடி ஔவையார் மாதிரிப் பேசுற..” தோளில் கிடந்த யுவனாவை விலக்கிவிட்டான் பென்னி. மீண்டும் அவன் தோளில் சாய்ந்துகொண்டவள், “ஏங்க... லூசு..” எனப் பென்னியின் காதில் கிசுகிசுத்தாள். பென்னிக்குக் கண்ணீர் முட்டிக்கொண்டு வந்தது. அவளின் ஏங்க லூசு என்கிற கள்ளமில்லா வார்த்தை அவனின் இதயத்தில் கசிவை ஏற்படுத்திவிட்டது. அவளை இறுகக் கட்டியணைத்துக்கொண்டான்.

“நீ இல்லன்னு வந்துட்டா அப்பவே நாஞ் செத்துப் போவேன் யுவனா..” என்று தழுதழுத்தான்.

“என்னங்க இது சின்னப்புள்ளத்தனமா இப்படித் தேம்புறீங்க. ஒங்கள பெரிய வீரன்ல்ல நெனச்சேன்..” என்றவளின் பதிலுக்குக் கண்ணீர் பொங்க சிரித்துவிட்டான்.

“போடி லூசு..” என்றவனின் கண்களைத் தன் சுடிதார் துப்பட்டாவால் துடைத்துவிட்டவள்.. “ஒங்களுக்கு ஒரு கிஃப்ட் வச்சிருக்கேனே..” என்றாள். பென்னி ஆவலாய் எங்கே என்றான்.

தன் கைப்பையிலிருந்து அந்தப் பரிசுப் பெட்டியை எடுத்துக் கொடுத்தாள். வாங்கியவன் பரபரவெனப் பிரித்தான்.

“என்ன யுவனா பேப்பர் வெய்ட்ட வாங்கியிருக்க..”

“ஆமா உங்க ஆபிஸ் டேபிள்ல இருக்குற அந்தப் பேப்பர்வெயிட் நல்லால்ல. அதேன் இத வாங்கினேன்..”

“நல்லாருக்கு. கண்ணாடி உருண்டைக்குள்ள ஒரு லவ்வர்ஸ். அவங்கள வாழ்த்துற மாதிரி நெறைய இதயங்கள்.. நாய்க்குட்டி வீடுன்னு இத்துணூண்டுக்குள்ள இவ்வளவு வேல பாத்திருக்காங்க. செம்ம..”

“ஏங்க..”

“ம்..”

“நாவொன்னு சொல்லட்டா..” என்றவளின் கேள்விக்குத் திரும்ப முதலிலிருந்தா என்ற பயம் பென்னிக்கு இருந்தாலும்..

“ம் சொல்லு..” என்றான்.

“இந்தப் பேப்பர் வெயிட்ல இருக்குற லவ்வர்ஸ் மாதிரி நாம சேர்ந்தே இருக்கணும். நாம ரெண்டு பேருமாச் சேர்ந்து நெறையப் பிள்ளைங்களப் பெத்துக்கிறணும். எல்லாப் பிள்ளைகளுக்கும் கண்ணு ஒங்கள மாதிரியும் மொகம் என்ன மாதிரியும் இருக்கணும். கொழந்தைகளோட கொழந்தைகளா நாம ஹேஹேன்னு வாழணும்... பெறகு..” என ஒரு கணம் தன் கண்களைத் தரை தாழ்த்தினாள் யுவனா.

“சொல்லு. பெறகு..” என்ற பென்னி அவளின் மோவாயத் தூக்கி அவளது வெட்கத்தை ரசித்தவாறு கண்களை ஊடுருவினான். இருவரின் கண்களும் நேருக்கு நேர் சந்தித்துக்கொண்டன. கண்கள் நான்கும் அவர்களைக் காந்தமாய் ஈர்த்தன. பார்வையை விலக்கிக்கொள்ளாமல் யுவனா சொன்னாள்.

“என்னயக் கெறங்க வைக்கிற ஒங்க கண்ண நாங் கடைசி வரைக்கும் பாத்துக்கிட்டே இருக்கணும்.”

“தம்பி நாங் கெளம்புறேம்பா.. தம்பி.....” என்ற பெரியம்மாளின் சத்தமான நெடிய குரலுக்குப் பென்னி பழைய பொழுதிலிருந்து நிகழ் பொழுதிற்குத் திரும்பினான். அவர் கிளம்பிப் போய்விட்டார்.

பென்னி தனது நாற்காலியின் சாய்மானத்தைப் பின்னுக்குத் தள்ளிச் சாய்ந்துகொண்டான். குப்பைக்குப் போன

பீங்கான் உருண்டை அவன் மனதில் உருண்டுகொண்டிருந்தது.

இன்று யுவனா அவனைப் பார்க்க வருவதாய் உறுதியளித்திருந்தாள். கடுமையான பொழுதுகளைத் தின்று செரித்த பென்னி அவள் வரும் பொழுதுக்காகவே காத்திருக்கிறான். காத்திருப்பின் ஒவ்வொரு வினாடியும் அவளுக்கான நினைவுகளை இவனுக்குள் தேன் ஈயைப் போலக் கொட்டிக்கொண்டிருந்தது. இதயத்தின் லப்டப்கள் அந்த அறை முழுக்க ஒலித்தது.

வருபவள் எப்படியும் அவள் மனதை மாற்றிக் கொள்ள வேண்டும் எனத் தவித்தான் பென்னி. அந்த ஒரு கணப் பொழுதில் யுவனாவிற்கு அப்படி நடக்காமல் இருந்திருந்தால்... என்ற தவிப்போடு தன் கண்களை மெதுவாக மூடிக்கொண்டான். திரும்ப பழைய பொழுதுகளின் காட்சிகள் அவனுக்குள் விரியத் தொடங்கின.

ஒரு மாதப் பயிற்சிகாகப் பென்னி மும்பை சென்றிருந்தான். ரயில்வே நிலையத்திற்கு யுவனா தன் தோழி வதனாவுடன் வந்து வழியனுப்பி வைத்தாள். ஒவ்வொரு நாளும் இரவும் அவனுக்காகக் காதல் கடிதமும் கவிதைகளும் எழுதுவாள். எழுதியதை அதிகாலையிலேயே வாட்ஸாப்பில் அனுப்பிவிடுவாள். அந்த உற்சாகத்தை அணிந்து கொண்டு பயிற்சிக்குக் கிளம்பிவிடுவான் பென்னி. இவனும் பதிலுக்கு வாட்ஸாப் வார்த்தைகளில் அவளைக் கரையவைப்பான். இப்படி விடியும் பொழுதும் மறையும் பொழுதுமெனக் காதல் மனங்கள் சிறகடித்துக்கொண்டிருந்தன.

இவன் திரும்ப வரும் அந்தப் பத்து நாட்களுக்கு முன்பு அவளுக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை. இரவு பனிரெண்டு மணிவரை பேசுபவள் அன்று மாலை ஆறு மணிக்கு மேல் பேசவில்லை. அவளது செல்போன் சுவிட்ச் ஆஃப்பில் இருந்தது.

அதிகாலை மூன்று மணிக்கு செல்போனில் பென்னியை அழைத்தாள் யுவனா.. தூங்காமல் தவித்துக்கொண்டிருந்தவன் முதல் ரிங்கிலேயே போனை எடுத்து.. ஆர்வமாக.. "யுவி.." என்றான். மறுமுனையில் பலவீனமான குரலில் நிதானமாகப் பேசினாள் அவள்.

"ஏங்க.. நாவொன்னு சொன்னா கேப்பிங்களா.." என்றாள் எடுத்ததுமே முதல் வார்த்தையாய். வழக்கமாக அவள் கேட்கும் எப்பதான் வருவீங்க.. சாப்பிட்டாச்சா.. டிரெயினிங் எப்படிப் போகுது.. க்ளைமேட் எப்படி இருக்கு.. இன்னக்கி என்னென்ன செஞ்சீங்க.. யாரும் குடிக்கச் சொன்னா குடிக்காதீங்க.. என எதுவும் இல்லை. பென்னிக்கு இதுவே ஒரு இறுக்கத்தை ஏற்படுத்தியது.

"ம் சொல்லு.." என்றான்.

"திட்டக்கூடாது.. ப்ராமிஸ்.."

"ப்ராமிஸ்.."

"நீங்க வேற கல்யாணம் பண்ணிக்கங்க..ம்" என்றாள் கொஞ்சல் தொனியில்.

"ஏன்டி லூசு. நீ என்ன சுத்திவிட்டுப் பாக்குறியா. இரு ஒன்ன வந்து கவனிச்சுக்கிறேன்.."

"ஏங்க நீங்க இப்படிக் கோபப்பட்டா நான் சொல்ல வந்ததச் சொல்லவும் மாட்டேன். ஊருக்கு வந்தா ஒங்களப் பாக்கவும் மாட்டேன்.." மண்டைக்குள் வெடிக்கிற குழப்ப எரிமலையை அணைத்துக்கொண்டே.. "ம்.. சொல்லு.." என்றான்.

"அதில்ல.. நா சீரியஸாத்தேங்க சொல்லுறேன்.. கோபப்படாதீங்க. ப்ளீஸ்" கெஞ்சிப் பேசினாள் யுவனா. இந்த மாதிரியான ப்ளீஸை இதற்கு முன் அவள் சொல்லி அவன் கேட்டதில்லை. கொஞ்சம் நிதானமானான்.

"ம்..புரியுது சொல்லு.."

"நீங்க கல்யாணம் முடிச்சு இங்கேயே வந்துருங்க. உங்க சொந்த ஊருக்குப் போக வேணாம். உங்க அம்மா அப்பாவையும் கூட்டிட்டு வந்திருங்க. நீங்களும் ஒங்க பொண்டாட்டியுமா நெறையப் புள்ளைகளப் பெத்துப் போடுங்க. எல்லாத்தையும் நானே வளக்குறேன். எங்கண்ணு முன்னாடியே இருங்க. ப்ளீஸ்.." என யுவனா சொல்ல அரபிக்கடல் அப்படியே வானளவு எழுந்து இவனை உள்வாங்கிக்கொண்டது போலிருந்தது பென்னிக்கு. மூச்சு முட்டுவது போலிருந்தது. கண்களை மூடி மூச்சை இழுத்துவிட்டவன்..

“இங்க பாரு காலையில் மூனு மணிக்கு வெளையாடுற வெளையாட்டா.. இது.. ம்.. சொல்லு..” கோபமானான்.

“ப்ளீஸ் புரிஞ்சுக்கங்க..” என்று போனை வைத்துவிட்டாள்.

எத்தனையோ முறை திரும்ப அழைத்துப் பார்த்தான். அவள் போனை எடுக்கவில்லை. மெஸேஜ்களுக்கும் பதிலில்லை. ஆனால் இவன் அனுப்புகிற அனைத்து மெஸேஜையும் பார்த்துவிடுகிறாள். வாட்ஸாப் டிபியில் இவனது சிரித்த புகைப்படத்தினைப் பதிவேற்றம் செய்திருந்தாள். கடந்த நான்காண்டுப் பொழுதுகளைக் கடந்த காதலில் இப்பொழுதுதான் முதல்முறையாக இவன் படத்தினை டிபியில் வைத்திருக்கிறாள். அடுத்த பத்து நாட்களும் வினாடிகள் ஒவ்வொன்றும் பென்னிக்குப் பிரளயமாய்க் கடந்தன. இரவுப் பொழுதுகளில் கடைசியாய் அவள் எழுதிய நாற்பது காதல் கடிதங்களும் அவனைப் பாடாய்ப் படுத்தின.

“நான்../ உன் விழி யுவி பேசுகிறேன்../ என் பென்னியான இமைகளே../ என்னை மூடிக்கொள்../ மீண்டும் திறக்காதே../ எனக்கான உலகம்../ நீ.. நீ.. மட்டும்தான்!”

“நீ எப்பொழுது திரும்புகிறாய்../ எனக் கேட்கப் போவதில்லை../ நீதான்../ என்னை விட்டுப் போகவே இல்லையே.!”

“வானம் எல்லோருக்குமான குடையாய்../ இருந்துவிட்டுப் போகட்டும்../ நீ / எனக்கான குடையாய் இரேன்.”

“யு என்றால் நீ../ வி என்றால் நாம்../ யுவிக்கு முதலில் நீ../ பிறகுதான் நாம்.!”

“காணாமல் போன../ நம் காலணிகளை../ நான்தான் பத்திரப்படுத்தியிருக்கிறேன்../ நம் காதலைச் சுமந்த../ முதல் தேர் அவைகள்.!”

“என் அம்மா../ எனக்கு.,/ வேறு மாப்பிள்ளை/ பார்ப்பதாய்ச் சொன்னாள்../ என் வேர் நீதானே../ ம்../ விரைவில் புரிய வைத்துவிடுவேன்.!”

“என்னை/ நீ அணைத்துவிடுவாய்../ நம் காதலை../ நாமே நினைத்தாலும்../ அணைக்க முடியாது..”

“ஏங்க../ இன்று வானவில் பார்த்தேன்../ அதில் உங்கள் நிறமில்லை../ வானவில்லை அழித்துவிட்டேன்.!”

இப்படியெல்லாம் உருகி உருகி எழுதியவள் ஏன் இப்படிச் செய்கிறாள். விளையாட்டுக்காட்டி வெறுப்பேத்துகிறாளா.. இல்லை அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என நினைத்தவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது.

நரகமாய் நாட்களை நகர்த்தியவன் ஒருவழியாய்ப் பயிற்சியை முடித்துவிட்டு ஊர் திரும்பினான். அதிகாலை மேகங்களைக் கிழித்துக்கொண்டே ப்பாம் என்ற கூவலோடு நிலையத்திற்குள் நுழைந்த ரயில் நிற்பதற்குள்ளாகவே விருவிருவென இறங்கிய பென்னி நேராக யுவனாவின் வீட்டிற்குச் சென்றான். இவர்கள் இருவரின் காதலும் யுவனாவின் வீட்டிற்குத் தெரியும். காலிங் பெல்லை அழுத்தினான். அவள் அம்மாவுக்குத்தான் கொஞ்சம் பிடித்தமில்லை. ஆனாலும் பென்னி யுவனா ஜோடிப் பொருத்தம் அவரது மனதுக்கு நிறைவாகவே இருந்தது.

யுவனாவின் அம்மாதான் கதவைத் திறந்தார். இவனைப் பார்த்ததும் அவரது கண்களில் காவிரி திரண்டு முட்டியது. தழுதழுத்தவாறு “உள்ள வாங்கப்பா..” என்றார்.

“ஏய்.. யுவி.. யாரு வந்துருக்கானு பாரு..” என்றார் தன் சேலைத் தலைப்பால் திரண்டு நின்ற கண்ணீரைத் துடைத்தபடி. தன் அறையிலிருந்து வெளியே வந்த யுவனா பென்னியைப் பார்த்ததும் கதவைச் சடாரென்று அடித்துச் சாத்திக்கொண்டாள்.

“அவரப் போகச் சொல்லு. என்னாலப் பாக்க முடியல,” என அறைக்குள்ளேயே கதறித் தேம்பினாள். அவளின் அம்மாவுக்கும் பென்னிக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. பென்னி ஒரு கணம் கனத்துப்போனான். யுவனாவின் அம்மாவைப் பார்த்தான். அவரும் உடைந்து அழுதுவிடுவார் போலிருந்தது.

“வர்றேன் ஆண்ட்டி,” எனக் காற்றே வராத வார்த்தைகளை உதிர்த்துவிட்டு வெளியேறினான்.

“என்னதான் நடந்தது அவளுக்கு..” என்ற அவன் நினைப்புக்கு முன்னால்.. சாலை

மரங்களெல்லாம் கள்ளிச் செடியாய் முளைத்து நின்றன. சாலையெங்கும் பாலையாய்த் தெரிந்தன. யுவனாவின் வீட்டில் நடந்த சம்பவத்தைச் சுமக்க முடியாமல் சுமந்தவாறு நடக்க ஆரம்பித்தான்.

யுவனா அம்மாவின் முகம் எதையோ கேட்டுக் கெஞ்சுகிறது. அந்தத் தாயின் உள்ளம் தன் மகளின் வாழ்வுக்காகப் பரிதவிக்கிறது என்பது மட்டும் பென்னிக்குப் புரிந்தது.

ஆனால் யுவனாவின் பாக்க முடியல்ல என்ற கதறலுக்கும் தழுதழுப்புக்கும் பின்னால் என்ன என்பதே பென்னியின் குருதியைச் சுண்டிக்கொண்டிருந்தது.

விடையேதும் தெரியாத வினாத் தாள்களோடு பத்துக் கிலோ மீட்டர் தூரம் நடந்தே தனது அறைக்கு வந்து சேர்ந்தான்.

அறையின் சன்னல் கதவுகளைத் திறந்தான். வெளியில் இருந்த செடியில் யுவனா பூத்திருந்தாள். சன்னலைச் சாத்தினான். சுவர்க்கடிகாரத்தின் மீது இவன் பார்வை பட்டது. நொடி முள்ளாய் யுவனா ஓடிக்கொண்டிருந்தாள். மணி முள்ளாய் இவன் நகர்ந்துகொண்டிருந்தான். கடிகாரத்தை உடைத்தான். பார்க்குமிடமெல்லாம் அவள். உடைப்பதற்கு அறையில் ஏதுமில்லை. அனைத்தையும் உடைத்துவிட்டிருந்தான். உடைத்தபொழுது சிதறிய பொருட்கள் பென்னியின் முகம் உடம்பு எனச் சிறு காயங்களையும் ரத்தச் சொரிவையும் ஏற்படுத்திவிட்டிருந்தன.

அழுதான் குமுறினான் குலுங்கினான். குளியலறைக்குச் சென்று சவரைத் திறந்துவிட்டு அப்படியே உட்கார்ந்துவிட்டான். கூனிக் குறுகிய அவனது உடம்பும் மனதும் நடுங்கின.

எவ்வளவு நேரம் ஆனது எனத் தெரியவில்லை. மாலை நிலா உலாவரத் தொடங்கியிருந்தது. சிண்டெக்ஸ் தண்ணீரும் பென்னியின் கண்ணீரும் வடிந்து விட்டிருந்தன.

காலிங்பெல் குருவிகள் விடாமல் கத்தின. அவைகளின் தொடர் கத்தல்கள் பென்னியை அசைத்தன. வந்து கதவைத் திறந்தான்.

“எப்பண்ணா வந்தீங்க.. தூங்கிட்டீங்களா..” என்றாள் வாசலில் நின்றிருந்த வதனா.

அவளை யாரென்று தெரியாதது போலப் பார்த்த பென்னி, “தூக்கம்.. ம். எப்படி இருக்க உள்ள வா,” என்றான்.

“யுவனாவப் பாத்தீங்களாண்ணா..?”

“அவ சொல்லித்தான் நீ வந்திருக்க. என்னன்னு சொல்லு..”

“இல்லண்ணா. ஒங்கள ஸ்டேசன்ல ட்ராப் பண்ணப்ப நீங்க சொன்ன டேட் நெனப்பு இருந்துச்சு அதான் வந்தேன். நானும் யுவனாவப் பாத்து நாலு நாளாச்சு. என்ன வரக்கூடாதுன்னு எரிஞ்சு விழுந்துட்டா. ஃபர்ஸ்ட் ஸ்டேண்ட்ர்டுல இருந்தே நாங்க ப்ரண்டுண்ணா” வதனா சொல்லும்போதே தழுதழுத்தாள்.

பென்னிக்கு நிலைமை ஏதோ பெருஞ்சிக்கலாய்ப் பட்டது. அமைதியானான். வதனா துப்பட்டாவால் முகத்தைத் துடைத்துக்கொண்டாள். உட்காரச் சொன்னான். உட்கார்ந்தாள். தண்ணீர் எடுத்துக் கொடுத்தான். ஒரு மடக்கு குடித்துவிட்டுப் பாட்டிலை ஓரமாய் வைத்துவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டாள்.

“சொல்லு வதனா. ஏன்?”

“நானும் அவளும் பத்துப் பன்னண்டு நாளைக்கு முன்னாடி பைக்கில் போய்க்கிட்டிருந்தோம். சிட்டிக்குள்ளதான்ணா. திடீர்னு சிக்னல்ல நிக்கிறப்போ பின்னாடி வந்த பஸ் இடிச்சிருச்சு. ரெண்டு பேருமே பைக்கோட பஸ்ஸுக்கு அடியில போய்ட்டோம். அவளுக்கு அடி ஏதும் இல்ல சின்ன சின்ன சிராய்ப்புதான். எனக்குத்தான் நெத்தியில் அடி. அவ மயங்கிட்டா.” திரும்ப பாட்டில் தண்ணீரை ஒரு மடக்கு விழுங்கியவள் தொடர்ந்தாள். பென்னி கவனப்பட்டான்.

“ஹாஸ்பிட்டல் போனப்போ அவளுக்கு அவ்வளவு சீக்கிரமா மயக்கந் தெளியல. டாக்டர்ஸ் பாத்துட்டு ஸ்கேன் பண்ணச் சொன்னாங்க அவளுக்கு. ரிப்போர்ட்ல அவ பஸ்ஸுக்கு அடியில் விழுந்ததுல யூட்ரஸ்ல உள்காயமாகி வீங்கிருச்சு அண்ணா. அத ரிமூவ் பண்ணாதான் உயிர் பிழைக்க முடியும்ன்னு சொன்னாங்க. ஒன்னுக்கு நாலு டாக்டர்ஸ்கிட்ட காட்டியாச்சு. எல்லாரும் அதையே சொல்றாங்க. கொழந்த பெத்துக்கிற

பாக்கியமில்லாமப் போச்சுண்ணா அவளுக்கு. நெகஸ்ட் வீக் ஆபரேசன்ணா..” என்ற வதனா வார்த்தைகளை மவுனித்துத் தரையையே பார்த்துக்கொண்டிருந்தாள். அப்படியே உடம்பு குலுங்க பெருங்குரலெடுத்துக் குமுறினாள்.

“நாந்தாண்ணா பைக்கோட்டிட்டுப் போனேன். யென்ன..?” எனத் தலையில் அடித்துக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டாள் வதனா.

நிறையக் குழந்தைகள் பெற்றுக்கொள்வதில் எவ்வளவு ஆசையோடிருந்தாள் யுவனா. அத்தனையிலும் மண் விழுந்துவிட்டதே. வானம் இடியக் கத்த வேண்டும் போலிருந்தது அவனுக்கு. இப்படியொரு பொழுதா எங்களுக்கு வாய்க்க வேண்டும் என்றெண்ணினான்.

விழிகள் வற்றிப்போயிருந்த பென்னிக்கு இதயம் நடுங்கியது. தன் உடலைக் குறுக்கிக்கொண்டு தேம்பினான்.

மூடிய இமைகளைப் பொத்துக்கொண்டு நீர்த்துளிகள் கசிந்தன பென்னிக்கு நிகழ்பொழுதில். மூச்சை இழுத்துவிட்டுக் கண்களைத் துடைத்துக்கொண்டான். நாற்காலியின் சாய்மானத்திலிருந்து நிமிர்ந்தவனுக்கு நம்ப முடியவில்லை. எதிரே யுவனா அமர்ந்திருந்தாள்.

அவள் முகத்தில் தெளிச்சி இருந்தது. நடு நெற்றியில் நுணுக்கமாய் அவள் வைத்திருந்த பொட்டு. அவள் தீர்க்கமான ஒரு முடிவுடனே வந்திருப்பாள் போல. சின்னதாய்ச் சிரித்தாள்.

இந்தச் சிரிப்புக்குத்தானே நான் கட்டுண்டு போயிருந்தேன். இதற்காகத்தானே வாழ நினைத்தேன்.. நாம் நம் கனவுகளைச் சேமித்தோம் என நினைத்தவனுக்குள் ஒரு சின்னப் பூ பூத்தது.

“என்ன யுவி எந்த ட்ரீட்மெண்ட்டுன்னு முடிவு பண்ணிட்டியா..?” உள்ளப் பரபரப்போடு கேட்டான். வதனா வந்து போன பிறகு தான் பேசிய விசயங்களில் அவள் சமாதானத்திற்கு வந்துவிட்டதாய் நினைத்தான் பென்னி.

“நீ நெனக்கிற மாதிரியெல்லாம் ஒன்னுமில்ல பென்னி.. ரொம்ப அடம் பிடிக்கிற., கொழந்த மாதிரி,” குழந்தை என்ற வார்த்தையில் கொஞ்சம் நிதானப்பட்டவள்,



“ஒன்னோட வாழ்க்க கெட்டுறக் கூடாதுல.. அதேன் பேசிட்டுப் போலான்னு வந்தேன்..” என்றவள் பென்னியின் முகத்தை நேராகப் பார்த்தாள்.

ஏங்க ஏங்க என்றழைத்தவளின் வாய்மலர் நீ என்றும் பென்னி என்றும் அழைத்ததே அவனைத் தலைகுப்புறத் தள்ளியது போலிருந்தது.

“அப்போ முடிவோட வந்திருக்க. அது எனக்கான முடிவில்ல. அப்படித்தான.”

“இல்ல இது நம்ம ரெண்டு பேருக்குமான முடிவு. புதுத் தொடக்கம். நாம நம்மள மாத்திக்கிறணும்.”

“நீ வேணும்ன்னா ஒன்ன மாத்திக்கோ. என்ன மாத்திக்கிறது என்னோட உரிம. ஒன்னோட நெனப்புலேயே செத்துட்டுக் கூடப் போறேன். நீ நல்லாரு. நீதேன் அடிக்கடி சாவப் பத்திப் பேசுவியே,” என்றான் பென்னி.

“ஏன்டா புரிஞ்சுக்கிற மாட்டீங்கிற..” என்றவாறு தன் கைப்பையால் அவன் தலையிலும் தோளிலும் மாறி மாறி அடித்தாள். கைப்பை அறுந்து விழுந்தது.

“யென்ன மறந்திடேன் ப்ளீஸ்,” எனக் கதறினாள். பென்னி அமைதியாக அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தான். அந்தக் காந்தப்

பார்வை அவளிடம் கெஞ்சியது. அவளால் தாங்க முடியவில்லை. அவன் தலைமுடியைப் பிடித்துக் கெரகமாடினாள். உணர்வற்ற உடலாய் ஆடினான். பித்துப் பிடித்தவனாய்த் தலையைக் கொடுத்துவிட்டிருந்தான்.

“புரிஞ்சுக்க ப்ளீஸ். என்ன விட்டுறு. மறந்துதேன் தொலையேன்,” என்றவள் பலமிழந்து அறையின் மூலையில் அமர்ந்துவிட்டாள்.

அவன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அறை முழு அமைதியானது. வெளியில் துடிக்கும் ஒலிகளால் அந்தப் பேரமைதியை ஊடுருவல் செய்ய முடியவில்லை. ஒரு சிட்டுக் குருவி அறையின் சன்னலில் அமர்ந்து சட்டத்தைக் கொத்தியது. யுவனாவின் பார்வை குருவியின் பக்கம் திரும்பியது. பார்த்துக்கொண்டே இருந்தவள் கலைந்த தன் தலைமுடியையும் உடையையும் சரி செய்தாள். மீண்டும் பென்னியின் முன் நாற்காலியில் அமர்ந்தவள், “நீ சொன்ன எல்லாத்தையும் யோசிச்சுப் பாத்துட்டேன். எதுலேயுமே தீர்வில்ல. எல்லாமே நம்பிக்கை மட்டுந்தேன். எத நம்பனும் நம்பக் கூடாதுன்னு நம்ம மனசுக்குத் தெரியனும். வயசு போய்ட்டா வாழ்க்க வராது. தியாகம் அது இதுன்னு பைத்தியக்காரத்தனமா நீ முடிவெடுக்குறதுக்கு நான் சப்போர்ட் பண்ண முடியாது. உனக்கு எப்படி நான் முக்கியமோ அப்படித்தான் நீ எனக்கும். ஆனா நாம முட்டாளுக இல்லையே..” என்றவள் டேபிளில் இருந்த அவன் கைகளை அழுத்திக்கொண்டு பேச ஆரம்பித்தாள்.

“சயின்ஸ் டெவலப் ஆகிகிட்டிருக்கு. நெறைய கருத்தரிப்பு மையம் இருக்கு. என்ன அது எதுவும் எனக்கு உதவாது. சட்டியில இருந்தாத்தான அகப்பையில வரும். அது சரி யூட்ரஸ் மாற்று சிகிச்சன்னு வந்தாதேன் ஆச்சு. அப்போ எனக்கு வயசும் போயிருக்கும் உடம்பும் போயிருக்கும் தாங்கணுமே..”

“இந்தப் பக்கம் சித்தா ஆயுர்வேதம் இன்னும் என்னென்னவோ எல்லார்கிட்டேயும் போயிட்டு வந்தாச்சு. சான்ஸே இல்லன்னு சொல்லிட்டாங்க.”

“ப்ளிஸ் புரிஞ்சுக்கப்பா. நீ சொல்ற மாதிரி என் அண்ணனோட புள்ளைங்கள்ல ஒன்னையோ.. இல்ல ஒந்தங்கச்சி புள்ளைங்கள்ல ஒன்னையோ எடுத்து வளக்கலாம்தான். ஆனா அதுல எவ்வளவு சிக்கல் வரும்ன்னு யோசி. அத நாம தாங்க முடியுமா?”

“அதுவுமில்ல ஏதோ ஒரு பிள்ளைய நாம அடாப்ட் பண்ணிக்கிறம்ன்னு வையேன். இருந்தாலும் அது நம்ம பிள்ள இல்லையே. நம்மக்குன்னு ஒன்னு இருந்து அது இல்லாமப் போயி பெறகு அடாப்ட் பண்ணினாக் கூடத் தெரியாது. அதுக்குத்தேன் சான்ஸே இல்லியேப்பா..”

“ஒனக்கு நாங் கொழந்த.. யெனக்கு நீ கொழந்தன்னு இருக்கலாந்தேன்.. ஒங்க வீட்டுல நீ மூத்தவன். ஒன்னோட பிள்ளைகளத் தூக்கிக் கொஞ்சணும்னு ஒன்னப் பெத்தவங்களுக்கு எவ்வளவு ஆசையிருக்கும். அந்த ஆசையில யென்ன மண்ணள்ளிப் போடச் சொல்றியா..”

“என்னால தெனமும் அழுதுக்கிட்டு இருக்க முடியாது. நான் அழுறதப் பார்த்துட்டு நீ சும்மா இருப்பியா. வேதனையில துடிப்ப. அதையும் என்னால சகிக்க முடியாது. ப்ராக்டிக்கலா யோசிப்பா ப்ளீஸ்..”

“ஒவ்வொரு ராத்திரியையும் பகலையும் நான் கண்ணீரும் கம்பலையுமா.. என்ன மறச்சுக்கிட்டுப் பொய்யா வாழ விரும்பல..” என்றவள் எழுந்து சென்று அவன் தலையைத் தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள்.

“இதாங் கடைசி. ஆறு மாசம் பாப்பேன். நீ கல்யாணம் பண்ணிக்கோ. இல்லன்னா நீ என்ன எப்பவுமே பாக்கமுடியாது.”

விருட்டென்று கீழே கிடந்த தன் கைப்பையை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டாள் யுவனா.

என்ன நடந்ததென்றே தெரியவில்லை பென்னிக்கு. திடீரென முன்னமர்ந்தவள் இப்படிப் புயலாய்த் தாண்டவமாடிவிட்டுப் போய்விட்டாளே. விக்கித்துப்போனான். பொழுது கவிழ்ந்து விடியத் துவங்கியது. அப்படியே நிலைகுத்தி அமர்ந்திருந்த பென்னியை அக்குரல் கலைத்தது.

வதனா நின்றுகொண்டிருந்தாள். அவளது கரங்கள் இரண்டு கட்டைப்பைகளைச்

சுமந்துகொண்டிருந்தன. அவைகளை மெதுவாகக் கீழே வைத்தாள்.

“யுவனா கொடுத்துவிட்டா. இதெல்லாம் நீங்க அவளுக்குக் கொடுத்த கிஃப்ட்டாம். இனி அவளுக்கு வேண்டாமா.” அவளும் உடைந்திருந்தாள். இவர்களது முதல் குழந்தைக்கு நான்தான் பெயர் வைப்பேன் என அடம்பிடித்து இருவரிடமும் சத்தியம் வாங்கியவள். இப்பொழுதில் அவளால் வேறென்ன செய்ய முடியும். வார்த்தைகளை உதிர்த்தவள் பென்னியின் பதிலுக்குக் காத்திருக்கவில்லை. சட்டெனக் கிளம்பிவிட்டாள்.

பென்னியால் எதையும் உள்வாங்க முடியவில்லை. அந்தப் பைகளையே வெறித்துக்கொண்டிருந்தான். அமுங்கியும் துருத்தியும் பைகளை நிறைத்துக்கொண்டிருக்கும் அந்தப் பொருட்களும் கடிதங்களும் எத்தனை பொழுதுகளை இன்பகரமாகவும் நம்பிக்கையானவைகளாகவும் மாற்றியவை. இப்பொழுது யாருமற்ற அனாதைகளாய்த் தவித்துக்கொண்டிருக்கின்றன.

அந்தப் பொழுதுகள் பென்னிக்குள் எரிமலையாய்ப் பொங்கின. நீர்வீழ்ச்சிகளில் விழுகிற நீர்த் திவலைகள் கத்திகளாய் அவனுக்குள் இறங்கி ரணப்படுத்தின. யுவனா.. வென பெருங்குரலெழுப்பி வெட்கி அமைதியானான். திடீரென வெறி கொண்டவனாய் எழுந்தவன் யுவனா அவனுக்கு வாங்கிக் கொடுத்த அத்தனையையும் தேடித் தேடி எடுத்தான்.

பைகளில் திணிக்கப்பட்டிருந்த அத்தனையும் கொட்டினான். வெறித்துப் பார்த்தான். விம்மி விம்மியழுதான்.

அவனும் அவளும் இருவருக்குமாய் மாறி மாறிக் கொடுத்த அத்தனையையும் ஒரு பெரிய அட்டைப் பெட்டிக்குள் அடக்கிக் கட்டினான்.

“நான் கொடுத்தத திருப்பியா கொடுக்குறா.. அவ கொடுத்ததையும் சேத்து அவ மொகத்துல விட்டெறியுறேன்..” எனப் புலம்பிக்கொண்டே பெட்டியைத் தூக்கிக்கொண்டு வெளியில் நின்ற பைக்கின் பில்லியனில் கட்டினான்.

“கிளிப் பிள்ளைக்குச் சொன்ன மாதிரியாச் சொல்லுறேன். கெஞ்சுறேன். எறங்க மாட்டேன்ட்டாளே. நான் யாருன்னு காட்டுறேன்..” எனப் புலம்பலைத் தொடர்ந்தவன் பைக்கின் கிக்கரில் கடுப்பைக் காட்டிப் புகை உறுமக் கிளம்பினான். இவனிருக்கும் உறையூரிலிருந்து பிச்சாண்டார் கோயிலிலிருக்கும் யுவனாவின் வீட்டை நோக்கி.

கவிழ்ந்த பொழுது கொஞ்சமாய் இருட்டத் தொடங்கியிருந்தது. சாலையில் பயணிக்கும் கிடக்கும் எதையும் கவனத்தில் கொள்ளாது பைக்கினைச் செலுத்திக்கொண்டிருந்தான்.

புறப்படும் பொழுதிருந்த வேகம் குறைந்திருந்தது. கண்களில் நீர் திரண்டு சாலையை மங்கலாக்கின. துடைத்துக் கொண்டான். மீறிடும் இதயத்தின் அழுகையைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிரசவித்தான்.

“யுவனாவுக்காக வதனா வந்து கொடுத்துட்டுப் போய்ட்டா.. ஆனா எனக்காக நானே போறேன். இப்பொ யுவனா என்னப் பாத்தா என்ன நெனப்பா.. மொதல்ல பாப்பாளா?”

“நான் சொன்னதையே கேட்கணும்ன்னு நெனக்கிறப்ப.. அவ சொன்னதக் கேட்கணும்ன்னு அவ நெனைக்கக் கூடாதா..?”

“அவ சொல்றதுல என்ன தப்பிருக்கு.. தனியா நின்னு பாத்தா அதுவும் நாயந்தான..”

“என்னமோ வலி எனக்கு மட்டுந்தேன்னு பீத்திக்கிட்டனே.. அவ எடத்துல இருந்து யோசிடா நாயே..” சப்பென்று தன் கன்னத்தில் தானே அறைந்துகொண்டான்.

பைக் திருவரங்கம் காவேரிப் பாலத்தை வந்தடைந்திருந்தது.

வடகிழக்குப் பருவமழை ஓய்ந்த பொழுதுகள் அவை. பாலத்தில் பேருந்துகளும் கார்களும் ஆட்டோக்களும் பைக்குகளும் சைக்கிள்களும் அவைகளுக்கே உரித்தான குணங்களோடு சீறிக்கொண்டிருந்தன. காவிரியில் ஓடும் வெள்ளத்தைப் பாலத்தின் இரு புறங்களிலும் மனிதர்கள் குடும்பமாகவும் நண்பர்களாகவும் காதலர்களாகவும் ரசித்துக்கொண்டு வாகனப் புகையோடு காற்று

வாங்கிக்கொண்டிருந்தார்கள். பாலத்தின் ஆங்காங்கே பானிபூரி விற்பவர்களும் கடலை, பஞ்சுமிட்டாய் விற்பவர்களும் உலவிக்கொண்டிருக்கும் மனிதர்களின் முகம் பார்த்து விற்றுக்கொண்டிருந்தார்கள். பென்னி பாலத்தின் மையப் பகுதியின் ஓரத்தில் பைக்கினை நிறுத்தினான். மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் காவிரியை மேற்காக நின்று பார்த்துக்கொண்டே இருந்தான்.

பாலத்தில் வரிசையாய் ஒளிர்ந்துகொண்டிருந்த விளக்குகளின் பிம்பம் ஓடும் தண்ணீரில் அலையலையாய்த் தத்தளித்தது. அது பென்னியின் மனவோட்டத்திற்குள் புகுந்து பிசைந்தது.

“நீங்க எனக்குக் கொடுத்தாலும் நான் ஒங்களுக்குக் கொடுத்தாலும் நீங்க எனக்கோ நான் உங்களுக்கோ திருப்பிக் கொடுக்க முடியாத ஒன்னு இருக்கு. அது என்னன்னு தெரியுமா..”

“ஏய்.. லூசு என்ன சொல்லுற. அப்படி என்ன இருக்கு..” பென்னி சொல்லி முடிப்பதற்குள் அவன் நெற்றியில் யுவனா அழுத்தமாய் ஒரு முத்தத்தைப் பதித்துவிட்டுச் சிரித்தாள்.

“ஏய்..” என்றான்.

“யோசி..” என்றாள்.

“ம்..”

“நீங்க எனக்கு முத்தம் கொடுக்கலாம். ஆனா நாங்கொடுத்த முத்தத்த திருப்பித் தரமுடியாதே..” என்று நாக்கைத் துருத்தி வக்கனைகாட்டினாள். அவளை இழுத்தணைத்த பென்னி அவளது கன்னத்தில் தன் இதழ் பதித்து வெற்றிச் சிரிப்புச் சிரித்தான்.

“என்னதாங் குடுத்தாலும் இத என்னாலத் திருப்பித்தர முடியாதுங்க.. நீங்களுந்தான்..” என்றாள்.

யோசித்தவன் “ஆமால்ல..” என்றான்.

விளக்குகளின் பிம்பத் தத்தளிப்புகளிலிருந்து விடுபட்டவன், பைக்கில் கட்டப்பட்டிருந்த பெட்டியைப் பார்த்தான்.

நானெல்லாம் அந்த முத்தத்துக்கு முன்னாடி சும்மாங்க என்று அந்தப் பெட்டி கூறுவது போலிருந்தது பென்னிக்கு.

பைக்கில் கட்டப்பட்டிருந்த பெட்டியைக் கழற்றியவன், அப்படியே தூக்கி ஓடுகிற தண்ணீரில் வீசினான். அவசரப்பட்டு வீசிவிட்டோமே என நினைத்த கணத்தில் தன்னை மறந்து பாலத்தைக் கடந்துவிட்டான்.

பாலத்தில் ஓடிக்கொண்டிருந்த வாகனங்கள் திடீரென்ற இவனது குறுக்கீட்டை எதிர்பார்க்காததால் சட்சட்டென பிரேக் அடித்துக் கிறீச்சிட்டன. அந்தச் சத்தத்தில் காற்று வாங்கிக்கொண்டிருந்தவர்கள் கதறிப் பதறிவிட்டார்கள். சில வாகனங்கள் தங்களுக்குள் மோதிக்கொண்டன. சைக்கிள்களும் ஆட்டோக்களும் நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டன. பயணித்தவர்கள் ஹேவெனக் கத்தி அமைதியானார்கள்.

பென்னி பாலத்தைக் கடந்திருந்தான். பாலத்தில் கூடியிருந்தவர்கள் பென்னியை அடிக்க ஆரம்பித்தார்கள். பாலத்தில் கைப்பிடிச்சுவரில் குனிந்திருந்தவனின் முதுகுக்கு இப்பொழுது அடிப்பவர்களின் அடி சுரணையை ஏற்படுத்தவில்லை. அடுத்த கணப் பொழுது நிதானித்துவிட்ட வாகனங்கள் பென்னியை ஏசிவிட்டுக் கிளம்பின.

அந்தப் பெட்டி பென்னியயும் யுவனாவையும் சுமந்துகொண்டு வெள்ளத்தில் பயணித்தவாறு இருளுக்குள் மங்கிக்கொண்டிருந்தது. மிதந்து போய்க்கொண்டிருக்கும் பெட்டியைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். அந்தப் பொழுதின் நிலவு வெளிச்சத்தில் அந்தப் பெட்டி புள்ளியாய் மாறி பென்னியின் பார்வையிலிருந்து மறையத் தொடங்கி.. மறைந்தேவிட்டது.

அடித்தவர்கள் கலைந்துவிட்டிருந்தார்கள். அமைதியாய் அழுதான்.

சிந்திய பென்னியின் கண்ணீர் காவிரியின் வெள்ளத்தில் கலந்து பெட்டியைப் பின் தொடர்ந்தது. அவன் அங்கேயே நின்றுகொண்டிருந்தான். வானத்தில் தனியாய்ச் சுற்றும் நிலவு தன்னை மேகத்திற்குள் மறைத்துக்கொண்டிருந்தது. ■

கவிஞர் ஏகாதசி
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்



# அடியே வெள்ளப் பழுத்தா...

காதலை இருவகைமைகளில் பார்க்கலாம். ஒன்று புற அழகு. இன்னொன்று அக அழகு. இவ்விரண்டிற்கும் தொடர்பில்லாமல் இல்லை. ஒருவள் அல்லது ஒருவனின் புற அழகுப் போற்றுதலைக் காமத்தின் தொடக்கப் புள்ளியாகப் பார்க்கிறார்கள். காமவயப்படுதல் ஒன்றும் தேசவிரோதச்செயல் இல்லையென்றாலும் காதலின் பேரூற்றே புற அழகுப் போற்றுதலுக்கு உந்துசக்தியெனக் கருதுகிறேன். அக அழகு அதைவிடச் சிறந்தது. சொற்களில் அடங்காதது. வெளியில் தெரியாத வேர் போன்றது. இரண்டிற்கும் மனமே காரணம் எனும்போது மனம் நிறைத்த காதலர்களின் இஷ்டம்தான் எதுவாகினும்.

கண்ணமூடத் தோணல
ஒன்னப் பாக்குறேன்
வானவில்லத் தொட்டுப்பாக்க
கையக் கேக்குறேன்

என்கிற நான்கு வரிகளில் ஓர் உதாரணத்திற்காகப் பார்த்தால், முதல் இரண்டு வரிகள் அவளின் புற அழகைப் பாடுகின்றன. அதற்கடுத்த இரண்டு வரிகள் அக அழகைப் பாடுகின்றன. கண்ணை மூடாமல் பார்க்கக் கிடைத்த புற அழகு அவளுடையதென்கிற மறுநொடியிலேயே, உன் அன்பிருந்தால் போதும் எத்தனை தூரங்களையும் என் வாழ்வு கடக்கும் என்கிற அக அழகும் அருகில் நின்றுகொள்வதே காதலின் உன்னதம். புற அழகு ஒரு கண்ணின் மேல் இமை, அக அழகு கீழ் இமை, இரண்டும்தான் காதல் என்கிற கண்ணைப் பாதுகாக்கின்றன.

இந்தக் கூற்று நூறு சதம் ஞாயப்பட வேண்டும் எனில் இதன் ஆதார சுருதியான சார்புத் தன்மையற்ற சமத்துவம் தலைதூக்கி இருத்தல் வேண்டும்.

ஒரு தனியிசை ஆல்பத்திற்காக எழுதப்பட்ட பாடல் ஒன்றின் பல்லவி,

ஆ: அடியே வெள்ளப் பழுத்தா - ஒன்ன
யாரு வெளுத்தா (2)
கண்ணமூடத் தோணல

ஒன்னப் பாக்குறேன்
வானவில்லத் தொட்டுப்பாக்க
கையக் கேக்குறேன்

பெ: அட செல்லக் கிறுக்கா - ஏ
ஆசக் கிறுக்கா (2)
ஒன்ன நானும் பார்க்கையில
எச்சி ஊறுதே
மேயச் சொல்லி மீசப்புல்லு
எட்டிப் பாக்குதே
ஆ: அடியே... கொஞ்சம் நில்லு புள்ள
அழகே... ஒண்ணே ஒண்ணு சொல்ல

இந்தப் பல்லவியில் உள்ள,

ஒன்ன நானும் பார்க்கையில
எச்சி ஊறுதே
மேயச் சொல்லி மீசப்புல்லு
எட்டிப் பாக்குதே

என்று ஒரு பெண் பாடுவதாக எழுதியிருக்கிறேன். இந்த பாடலைப் பதிவு செய்துகொண்டிருந்தபோது என் நண்பர் ஒருவர், ஒரு ஆண் பெண்ணை வேட்டையாடுதல் போன்றுதானே எழுதுவது வழக்கம், இதில் அப்படி இல்லையே என்றார். சுகத்தை அல்லது காதலின் ஒரு அங்கமான காமத்தின் அதீத சுகத்தை வேட்டையாடுதல் என்பது இருவருக்குமானது. பொதுப் புத்தியில் ஆணை மட்டுமே வேட்டையாடுபவராகப் பார்ப்பது ஆணாதிக்கக் குணமன்றி வேறில்லை. இன்னும் சொல்லப்போனால் இந்தச் சூழலுக்கு,

"காட்டில் புலி மானை வேட்டையாடுகிறது
நாட்டில் மான் புலியை வேட்டையாடுகிறது"

எனக் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் எழுதிய வரிகள்தான் பொருத்தமானது. நான் எழுதி வெளிவராத படமொன்றின் ஒரு முதலிரவுப் பாடலில் வரும்,

போரிட்டு நாம் வெல்லப் போவதுமில்ல - இது
பொய்சாவு தானே வேறென்ன சொல்ல

என்கிற வரிகளிலும் எந்த ஏற்றத்தாழ்வும் இராது.

பொதுவாக, காதல் பாடலுக்கான சூழல் இல்லாத திரைப்படங்கள் என்பது மிக மிகக் குறைவு. அதே நேரத்தில் எத்தனையோ சூழல்களுக்குப் பாடல் எழுதும் வாய்ப்பு வந்தாலும் காதல் பாடலுக்கான சூழலுக்குத்தான் சுதந்திரம் அதிகம் எனக்கு. நான் பெரும்பாலும் திரையிசைப் பாடல்களைக் கேட்பதில்லை, அப்படியே கேட்டாலும் தேர்வு செய்து சிறந்த பாடல்களை மட்டுமே கேட்கிறேன்.. அதே நேரத்தில் நான் கேட்கின்ற பாடல்களை ரசித்ததோடு நின்றுவிடுகிறேன். அதன் பாதிப்பு நான் எழுதும் பாடல்களில் வராமல் பார்த்துக்கொள்கிறேன் அல்லது வருவதில்லை. எனக்கு என்ன தோன்றுகிறதோ அதை எழுதுகிறேன். என் விரல்களில் பூக்கும் புதிய மலர்களைத் தரப்படும் மெட்டுக்குச் சூட்டிக்கொள்கிறேன். சுயமாக எழுதப்படும் பாட்டொன்றுக்குத் தனிச் சுவை உண்டு. அதை ருசித்துணரும் இயக்குநர்களும் இருக்கிறார்கள், புதிய உணவுக்குப் பழக்கப்படாதவர்கள் எப்போதும் போல் நான்கு இட்லியை உண்டுவிட்டுச் செல்வதில் எனக்குப் பிரச்சினை இல்லை, ஆனால் புதிய உணவைச் சாப்பிடாமலே சுவையில்லை என்று சொல்வதை ஏற்கமுடிவதில்லை.

மேற்கூறிய பல்லவியின் சரணத்தை எப்படித் தொடங்குவதென யோசித்தபோது, நான் எழுதிய,

"பார்த்தவுடன்
சாப்பிடத் தோன்றுகிறதே
அன்பே உன் கண்கள் என்ன
சமைத்த மீன்களா"

என்னும் காதல் கவிதை ஞாபகத்திற்கு வந்தது. அதுபோல, பெண்ணின் பற்கள் பச்சரிசி போல இருப்பதாகப் பாடியிருக்கிறார்கள். அது வெறும் நிறம் தொடர்பானதுதான். அதன் குணத்தையும் வாசத்தையும் வைத்தெழுதி அந்தப் பெண்ணின் அக அழகைக் குறியீடு செய்யலாமே என்று பச்சரியை வேகவைத்து "பச்சரிசிச் சோத்தப் போல பாவிமக சிரிச்சா" என்று தொடங்கினேன்.



**சரணம் - 1**

ஆ: பச்சரிசிச் சோத்தப் போல
பாவிமக சிரிச்சா- என்ன செய்ய
துண்ணக்கூட தோணல
பெ: மூஞ்சி காட்டி போற வழி
பாவிப்பய மரிச்சா - ஏது செய்ய
வேல வெட்டி ஓடல
ஆ: மல்லாட்டங் கொட்டையால
தோடு ரெண்டு போடத்தான்
வெள்ளாம செஞ்சேனடி
பெ: கள்ளாட்டம் ஆடிடத்தான்
ஆளத் தூண்டில் போட்டுப் போற
கொல்லாம கொல்லாதேடா
ஆ: ஓம் மனசு அணில் வாலா
எதமா இருக்குது
பெ: ஓ உசுரு எனக்காக
மெழுகா உருகுது

*இந்த முதல் சரணத்தில்,*

"மல்லாட்டங் கொட்டையால
தோடு ரெண்டு போடத்தான்
வெள்ளாம செஞ்சேனடி"

*என்கிற வரிகளில் உக்காந்திருக்கும் காதலிடம் ஷாஜஹான் மும்தாஜ் காதல் தோற்று நிற்பதைப் பார்க்கிறேன். எனது பாடல் வரிகள் மண்ணில் வேரூன்றி வானத்தில் பூப்பூப்பதற்கு ஒரே காரணம்.. நான் கதாபாத்திரங்களின் உடலுக்குள்ளும் மனங்களுக்குள்ளும் புகுந்து எழுதுகிறேன். அவர்களின் அறிவில் அவர்களின் அனுபவத்தில் நின்று எழுதுகிறேன்.*

**சரணம் - 2**

ஆ: உச்சிவெயில் நேரத்திலும்
உம்முகந்தா கெடச்சா - தொண்டைக்குள்ள
அச்சு வெல்லம் ஊறுமே
பெ: முட்டவரும் காளபோல
முன்னவந்து மொறச்சா - நெஞ்சுக்குள்ள
பித்தம் வந்து ஏறுமே
ஆ: கங்காருக் குட்டிபோல
ஒன்னத் தூக்க வேணும்தானே
ஏங்கூட வந்திடடி
பெ: கண்ணாலம் கட்டிக்கோடா
ஊரு மெய்க்க வாழவேணும்
அருள்வாக்குத் தந்திடடா
ஆ: ஓ மடியில் நா தூங்க
கெழம சொல்லிவிடு
பெ: ஓ மாரில் நா சாய
சிலநாள் தள்ளியிரு

*ஒரு நேர்காணலில் என்னிடம், தமிழ்த் திரையுலகில் தனித்த அடையாளத்தோடு பாடலாசிரியராக வளர்ந்திருக்கும் இந்தச் சூழலில் உங்களை உங்கள் ஊர்க்காரர்களும் நண்பர்களும் எப்படி பார்க்கிறார்கள் என்று கேட்டார்கள். உண்மையில் என் ஊர்க்காரர்களுக்கோ என் நண்பர்களுக்கோ நான் ஒரு பாடலாசிரியர் இல்லை. எப்பவும் போல் ஒரு ஏகாதசிதான் அவர்களுக்கு. கவிதை எழுதத் தொடங்கிய நாளில் என்னிடம் கவிதைகள் வாங்கி அவர்களின் காதலிக்குத் தந்து காதலித்தவர்கள் ஏராளம். அவர்கள் மனம் மாறாமல் இருக்கிறார்கள் என்பதற்கு ஒரே சான்று, இன்னும் அவர்கள் என்னிடம் கவிதை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.. காதணி விழா போஸ்டருக்கு, கல்யாண ஆல்பத்திற்கு, ஏன் காதலிக்கும் கூட. சினிமாவில் ஒரு பாட்டுக்கு*

ஒரு லட்சம் சம்பளம் வாங்கினாலும், நான்காவது படிக்கும் தங்கையின் மகளுக்கு ஆக்டிவிட்டி செய்வதிலும், ப்ளஸ் டூ படிக்கும் நண்பனின் மகனுக்கு மரத்தைப் பற்றிய கவிதை எழுதித் தருவதிலும் ஒரு சுகம் இருக்கத்தான் செய்கிறது. அப்படியாக அவர்கள் என்னை நெருக்கமாக வைத்திருப்பதாலும் நான் என்னை எளிமையாகவே வைத்துக்கொள்வதாலும்தான் என் இலக்கியம் ஈரமாக இருக்கிறது. என் பாடல் பெரிதான கற்பனையன்றி வாழ்விலிருந்து பிறக்கிறது.

மண்ணை ஒரு சிறு கரை போன்று கட்டிவைத்து அதில் பொருளை ஒளித்துவைத்துத் தில்லி தில்லி பொம்மக்கா விளையாடுவது போல் கவிதைகளில் கல்யாண்ஜி அவர்கள் சொற்கூட்டத்தில் கவிதைகளை ஒளித்து வைத்து வியக்கச் செய்வார். கதைகளிலும் ஓரளவிற்கு விளையாடலாம். ஆனால் பாடல்களில் உள்ள சொற்களின் விளையாட்டிற்கு அளவே இல்லை என்பதுதான் உண்மை.

எலும்பு கடிக்காம
எரப் பையி நெறையாது
சாம்பார் சோறு எங்க
சாதியில கெடையாது

இந்த நான்கு வரிகள் இளையராஜாவின் இசையில் வெளிவந்த "மயிலு" திரைப்படத்திற்காக எழுதி இடம்பெற முடியாமல் போனவை. பிற்காலத்தில் நான் முதலாக இயக்கிய கொஞ்சம் வெயில் கொஞ்சம் மழை படத்தில் இடம்பெறச் செய்தேன். இதுமாதிரியான சம்பவம் திரைப்படங்களில் நிறைய நடக்கும். நண்பர் இயக்குநர் வெற்றிமாறன் அவர்களின் "விசாரணை" படத்திற்காக எழுதிய பாடல்தான், "உருட்டுக் கண்ணால ஒரசிப் போறாளே" பாடல். படம் மிகவும் நேர்மையாக வந்திருப்பதைக் கருத்தில் கொண்டு இந்தப் பாடலை "செம" படத்திற்கு இடம் மாற்றம் செய்தார்கள்.

ஒரு பாடலை விட அது உருவாகும்போது நடக்கும் பிராஸஸ் முக்கியமானது. அந்த பிராஸஸை விட, அந்த பிராஸஸின்போது நடக்கும் பிரச்சனைகள் அதை விட முக்கியமானவை.

ஒத்தச் சொல்லால - ஏ
உசுரெடுத்து வச்சிக்கிட்டா
ரெட்டக் கண்ணால
என்னத் தின்னாடா
பச்சத்தண்ணிபோல் - அட
சொம்புக்குள்ள ஊத்திவச்சு
நித்தம் குடிச்சே
என்னக் கொன்னாடா
ஏ பொட்ட காட்டுல
ஆலங்கட்டி
மழ பெஞ்சு
ஆறொன்னு ஒடுறத பாரு
அட பட்டாம்பூச்சிதான்
என் சட்டயில ஒட்டிகிச்சு
பட்டாசு போல
நா வெடிச்சேன்
முட்ட கண்ணால
ஏ மூச்செடுத்து போனவதான்
தொட்ட பின்னால
ஏதோ ஆனேன்டா

மேற்சொன்ன பல்லவி இடம்பெற்ற படம் ஆடுகளம். தமிழில் வந்த மிக நீளமான பல்லவி கொண்ட பாடலில் இதுவும் இடம்பெறும். இந்தப் பாடலை எழுதியபோது என் வீடு வடபழனி, ராஜாங்கம் மத்திய வீதியின் ஒரு சந்தில் இருந்தது. அங்கே உட்கார்ந்துதான் இப்பாடலை எழுதினேன். அது மிகக் குறுகலான சந்து. ஒரு பழைய நாற்காலியில் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருப்பேன். பொது கழிப்பறைக்குச் செல்பவர்கள் அந்த வழியாகத்தான் சின்னச் சின்ன வாளிகளில் தண்ணீரைக் கொண்டு வருவார்கள். அவர்கள் வரும்போது நான் எழுந்து வழி விட வேண்டும் அவ்வளவுதான். ஆனால் அடிக்கடி வருவார்கள். வீட்டிற்குள் அமர்ந்து எழுதலாமே என்று உங்களுக்குத் தோன்றும்தான். ஆனால் உள்ளே அனல் என் பாட்டுக் காகிதத்தை எரித்துவிடக்கூடும் என்கிற அச்சத்தில்தான் நான் எல்லாருக்கும் எழுந்து எழுந்து வழி விட்டேன். ஒருநாள் திரையரங்குகளில் அந்தப் பாடலுக்கு ரசிகர்கள் எழுந்து எழுந்து ஆடியபோது என் காயம் ஆறியது.

தள்ளாத வயசுல
வேகாத வெய்யிலை
இப்படித் தூக்கிச் சுமக்கணுமா
என்று கடிந்துகொண்டே
மோரை நீட்டுகிறேன்
காய்க்காரப் பாட்டிக்கு.

குடிகாரனக் கட்டிக்கிட்டு
அஞ்சுக்கும் பத்துக்கும்
அல்லாடுது மக...
பேத்தி இந்த வருசம்
காலேசு முடிக்கிது..
எப்புடியாச்சும்
ஒரு வேலையைப் புடிச்சு
அது நிமிந்துட்டா
நான் ஒக்காந்து
சாப்புட்டுப் போறேன்
என்ன இப்போ..
என்று வெய்யிலொழுகப்
புலம்புகிறாள்.

இரவெல்லாம் அந்த முதுமைக்கு
நான் விசனப்பட்டுக் கிடக்க..
நாளை வந்து புலம்புவாள்..
பாக்கியலட்சுமிக்கும்
பாண்டியன் ஸ்டோருக்கும்.

- அன்பு மணிவேல்

குறைந்தபட்சம் 45 பொருட்கள்
கொண்ட மளிகை லிஸ்ட்டை
ஒரு நாளும் காகிதத்தில்
எழுதிப் பழகாதவள்.

திருமணங்களில்
21 சீர்வரிசைகளை
பிறழாது மனனமாகச் சொல்பவள்.

கோவில் அபிஷேகப்பொருட்களை
பூசாரிக்கே வரிசைக்கிரமமாக
ஞாபகப்படுத்துபவள்

இப்போதெல்லாம்
ஒன்றிரண்டு விசயங்களை
கவனத்தில் கொள்வதற்கே
புடவைத்தலைப்பில்
முடிச்சு போட்டுக்கொள்கிறாள்.

சமயத்தில் எதற்குப் போட்ட முடிச்சு
என்பதே மறந்துவிடுகிறது என்பவள்
மகள் கடைசியாக
ஊருக்கு வந்து
எத்தனை நாட்கள் ஆனது
என்பதை மட்டும்
எந்த முடிச்சும் போடாமல்
சரியாகச் சொல்லிவிடுகிறாள்.

- அ.சீனிவாசன்

**வானவில் வண்ண மின்னல், பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.**

visai@padaippu.com

படைப்பு
# விசை
பல்சுவை மாத மின்னிதழ்

